448

நாநாஜீவ

வாதக்கட்டளை

448

OFFICE OF THE REGISTRAR OF ...
19 SEP 1942
MADRAS

365



பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்

சென்னை : மதுரை : திருநெல்வேலி ஜங்ஷன்

பதிப்புரிமை] 1941 [விலை அணு 12

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 SEP 1942
MADRAS

ஓம்

தத்ஸத் பரப்பிரம்ஹணே நம:

ஸ்ரீ சேஷாத்திரி சிவனார் அருளிச்செய்த

நாநாஜீவவாதக்கட்டளை

294.5

இஃது

அவதூத நமச்சிவாய குருமூர்த்திகளினது அருளினால்

இளையரசனேந்தல்

வை. சொக்கலிங்கம் பிள்ளையால்

பொறித்த இரகஸியார்த்த தீபிகையும்,

T. C. பார்த்தசாரதி அய்யங்காரால்

திறவுகோல் விளக்கப்பட்டும், பரிசோதிக்கப்பட்டும்,

365

*

சென்னை

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,

வித்தியா ரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பதிப்புரிமை] 1941 [விலை அணா 12.

ரிஜிஸ்தர் அறிவிப்பு

இதனல் சகலமானவர்களுக்குந் தெரிவிப்பது யாதெனில், இந்த நானா ஜீவவாதக்கட்டளை யென்னும் நூலுக்கு வை. சொக்கலிங்கம் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டுள்ள இரகஸியார்த்த தீபிகை என்னும் உரையை, த. துரைசாமி முதலியார் அவர்கள் அச்சிட்டு சர்வ சுதந்தரத்துடன் அனுபவித்து வந்ததை, பி. நா. சி. பிரதர்ஸ் ஷை யாரிடம் சர்வ சுதந்தரத்தையும் கிரயம் பெற்று டி. ஸி. பார்த்தஸாரதி அய்யங்காரவர்களால் திருத்தியும், திறவுகோலைச் சேர்த்தும் அச்சிட்டு, கவர்மென்ட் ஆக்ட்டுப்படி ரிஜிஸ்தர் செய்து வெளியிட்டிருப்பதால், இதனை எங்கள் அனுமதியின்றி அச்சிடுவார்களேயாயின் நாங்கள் கோரும் நஷ்டத்துக்குப் பாத்தியவாதி யாவார்களென்று இதனல் அறிவிக்கப்படுகிறது.

இங்ஙனம்,

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,

வித்தியா ரத்நாகரம் பிரஸ்,

பிரம்பூர் பாரக்ஸ் போஸ்டு, மதராஸ்.

நான்முகம்

தத்துவத்தின் தலைமையில் தருக்கி நின்றவரும், ஆரியன் அநுக்கிரக விசேஷத்தை அமைதியுடனே அடைந்து அந்யாதிருச்யமானபேற்றை வாரியுண்டு களித்தவராகிய சேஷாத்திரி சிவனூர் என்னும் யோகியர் தன் அநுபவவாயிலாகப் பிறந்தவற்றைச் சுருக்கியும் விவரித்தும், சீவர்களின் உண்மை உருவத்தைச் செவ்வனே அறிந்து, அவர்கள் கிருதார்த்தர் ஆகும்வண்ணம் பெருங்கருணையால் அருளிச் செய்ததும், தத்துவக் கட்டளை என்று வேறு பெயர் வழங்குவதுமான, நாநாஜீவவாதக் கட்டளை வசனமானது, தன்னைத் தெளிந்துணர்ந்தபின் முமுக்ஷுவைக் கிரந்தத்தில் பிரவர்த்திக்கச் செய்கின்ற ஜீவ பிரம ஐயிக்கிய மென்னும் விஷயத்தைத் தன்னிற் கொண்டது. இதனுள் சாத்திர ஞானம் என்னும் சம்பந்தம், அனர்த்த நிவிர்த்தி, ஆநந்தப் பிராப்தி யென்னும் இரண்டினது பிரயோசனம், அந்தக் கரண சுத்தியுடைய அதிகாரி விவரணம் முதலியவாய இவைகளைச் செவ்வனே அறிந்தவர்கட்கே அல்லாமல் ஏனையோர்க்கு இதன் பொருள் நன்கு புலப்படாது. அந்தக் கரணத்தில், மல விட்சேபதோஷம் நீங்கி, ஏகாக்கிர சித்தமுடையவனாய், ஆவரணமட்டும் உடையவனாய், சாதன சதுட்டயம் அடைந்து, அசாத்திரப் பிரபஞ்சத் தவாவினை அறவே வொழித்து, விதி நிஷேதங்களைக் கடந்து, தாபத் திரயாக்கினியினாலே மிகவுங் கொளுத்தப்பட்டு வெதும்பி, விதிவது பசனத்துவமாய், அஷ்டமந்திர பூர்வகமாய், அஷ்டாங்க பஞ்சாங்க சாஷ்டாங்க நமஸ்காராதிகளுடன் நான்கு விதியான பணிவிடைகளையும் பக்தி பூர்வமாக நெறிமுறை வழுவாவண்ண மியற்றி, "நானரோ!" வென்று விசாரிக்கின்ற மாணக்கனுக்கு இஃது விளங்குவதாம்.

நோக்கின், மழை ஆலங்கட்டியானதுபோல் அவன் ஜீவகாருண்ணியம், ஈசுர பக்தி, பாச வைராக்கியம், பிரம்ம

ஞானம் என்கிற இந் நான்குமே ஒரு திருமேனியாய்ச் சற்குண சம்பந்நராய் எழுந்தருளியிராநின்ற பிரமவித்து, பிரமம் என்னும் சிறப்பு நாமம்பெற்ற சற்குருவானவர், அத்தியாய அபவாத வாயிலாக நீயே சுத்தப் பிரமம் என்று அநுக்கிரகஞ் செய்யத் தொடங்கினர்.

இந்நூல் கேட்டற் குரியவன் யாரெனின், அந்தக் கரண தோஷ நிவர்த்தி முதல் சதுர்வித கைங்கரியம் இறுதியாயுள்ளவற்றைக் கைக்கொண்ட மாணுக்கனே, இந் நிலையற்ற பதார்த்த போதநூலை எளிமையாக வுணர்ந்து ஞான வைராக்கியபரனுய், அதன் காரணமான சிரவணம் மனனம் நிதித்தியாசனம் முதலியவற்றையும், அதன் சொரூபமான தத்துவ மித்தியா பாவனையையும், அதன் காரணமான அகங்காரக் கிரந்தியின் நிவர்த்தியையும், அதன் இறுதியவாய 'பிரஹ்மைவாஹம்' (சிவோஹம்) என்கிற உண்மை ஞானத்தையும் முறையே பெற்று, அதன் பயனுகிய அப்ராக்ருத வுலகப்பேற்றை யடைந்துய்வான் என்பது திண்ணம்.

முதல் நூலிலுள்ள ஆந்திர (ரகசியா)ர்த்தத்தை இந் நூலகத்துத் தெளிவாயும் பிரகாசமாயும் வெளிப்படுத்துகின்றமையால், இதற்கு **'ரகஸியார்த்த தீபிகை'** என்று ஒரு நாமம் இட்டு வழங்கலாயிற்று.

இந்நூலின்கண் உதாரணங்களும், அவைகட்கு இன்றியமையாப் பொருள் விளக்கமும், தேவையான பல விடங்களில், இலக்கமிட்டு வேண்டுவனவாய மேற்கோள்களையும் விரித்துந் தொகுத்தும் அமைத்திருக்கிறது.

தேனீக்கள் பல மலர்களின்கண்ணுள்ள மதுவை ஒன்று சேர்ப்பதுபோலக் குருவின் அருளால் பல நூல்களினின்றுந் திரட்டிய பொருளை ஆராய்ச்சியாலும், சொந்தமான யுக்தி அனுபவத்தினுலும் இந் நூலகத்து வரைந்து சேர்க்கப்பட்டது.

நாநாஜீவவாதக் கட்டளை

திறவுகோற் சருக்கம்

கடலினுங் கவின்பெற்ற கல்வியறிவாற் றுலங்கி வருண பேதமின்றிய வள்ளலாய் வந்த எனக்குரிய பிம்பமே! இது காறும் தேவரீர் திருவாய்மலர்ந்தருளியவைகளை யெல்லாம் அடைவுடன் கேட்டும் என் மனம் சாதனங்களை அறிய முடியவில்லை. இனி அரைக்கணமும் அவையிற்றை அறிந்து கொள்ளாமல் அகலகில்லேன். ஏனெனில், தேவரீர் ஞானத்தினால் அன்றி ஏனைய சாதனங்களினால் முக்தியுண்டாகா தென்று பன்முறை அருளியிருப்பதால், எத்தகைய ஞானத்தினால் முக்தியுண்டாகும்? எவ்வாறு ஒழுகுபவனுக்கு அந்த ஞானம் உண்டாகும் எனச் சீவன் வினவலும்.

குரு:—நிஷ்காம கர்மத்தினால் மலமும், ஈசுவர உபாசனையினால் விட்சேபமும், நிவிர்த்தியாகிச் சொரூபா வரண மாத்திர முடையவனாகியும், பூரணமாய சாதன சதுஷ்டய முடையவனாகியும், யான் யார்? எனக்கு இச் சம்சாரம் எவ்வாறு வந்தது? இஃது யாவரால் நிவர்த்தியாம்? என்று சகல பிரபுத்தனமும் விட்டு மனைவி, மக்கள், பொருள் என்னும் ஈஷணாதித்திரயங்களினின்றும் உள்ளவாறு விலகிக், "கானவர் வலையிற்பட்டுக் கைதப்பி யோடுமான் போல்" விரைந்து சென்று சந்திப்பிற்குரிய பத்திரம் புஷ்பம்

பலம் முதலியவற்றை யேந்திய கரதலதை யுடையவனுய்ச் சற்குருவை யடைந்து,

"சைதந்நியம் ஶாஸ்வதம் சாந்தம்
வியோமா தீதம் நிரஞ்சனம்
நாத பிந்து களாதீதம்
தஸ்மை ஸ்ரீ குரவே நம:"

என்னும் அஷ்ட மந்திரபூர்வகமாய்ச் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து பின்னர் எழுந்து பயபக்தியினுலே அடிமைத்தன்மை மிகுந்து கும்பிட்டுக்கொண்டு நின்று அடியேனுக்கு இப் பிறவித் துன்பம் எவ்வாறு ஒழியும் என்று வினவி குரு நாதன் கடாக்ஷம் செய்யும்வரை சாயைபோல் விடாது இருப் பவனுக்கே பிரம்மாத்ம ஐக்கிய ஞானத்தினுல் முத்தியுண் டாகும். இந்த ஞானம் அந்தரங்க சாதனங்களாற் சித்திக்கு மன்றிப் பகிரங்க சாதனங்களால் சித்தியாது.

சி:—சின்மயானந்த குருவே! அவ் வந்தரங்க பகிரங்க சாதனங்களை அடியேன் உள்ளத்து அமையுமாறு அருள் செய்யும்படி பிரார்த்திக்கிறேன்.

குரு:—வாதனையும் வேதனையும் விலகாத வாலிபனே! நித்தியா நித்திய வஸ்துவிவேகம், இகபர போகவிராகம், சமாதிசட்க சம்பத்தி, முமூட்சுத்துவம், சாதன சதுஷ்டயம் என்னும் நான்கும், சிரவண மனன நிதித்தியாசனம் என்னும் மூன்றும், தத்துவம் பதார்த்தங்களின் சோதனம் ஒன்றுமாகிய எட்டும் பிரமாத்ம ஐக்கிய ஞானத்திற்கு

அந்தரங்க சாதனங்களாம். கர்மோபாசனைகள் பகிரங்க சாதனங்களாம்.

சி:—அச் சாதனங்கள் இரண்டிற்கும் உள்ள வேற்றுமை யாதோ?

குரு:—அப்பா குழந்தாய்! இப்போதுதான் என் மனம் பூரிப்பை அடைகின்றது. நீ வயதிற் சிறியவனேனும், அறிவிற் சிறந்தவனே ஆவாய். இளையவனாதலின் முன்னர் சொல்லியவற்றையெல்லாம் ஆலோசியாமல் பேசுகின்றாய். ஆனாலும் அதையும் ஒருவாறு சுருங்கச் சொல்லுகிறேன். மறதியோய்! வில்லினின்றும் விடுபட்ட அம்பு இலட்சியத்தைத் துளைப்பதிற் சமீபித்த சாதனமாயும், வில் அம்பை விடுதல் வாயிலாக அதற்குத் தூரசாதனமாயும் இருத்தல்போன்று நித்தியா நித்தியவஸ்து விவேகமாதி எட்டும் ஞானத்தை உண்டு பண்ணுவதற்கு அடுத்து இருப்பதுபற்றி அந்தரங்க சாதனமென்றும், கர்மோபாசனைகள் அந்தரங்க சாதனத் துற்பத்திக்கு அடுத்து இருப்பதாயும், ஞானத்தை உண்டு பண்ணுவதற்குத் தூரத்தில் இருப்பதுபோன்று இருப்பது பற்றிப் பகிரங்க சாதனமென்றும் சொல்லப்படுகின்றன. சிலனே! இங்குக் கூறிய சாதனம் இரண்டனுள் அந்தரங்க சாதனத்தைச் சம்பாதித்த பின்னர்ப் பகிரங்க சாதனத்தை அவசியம் விட்டு விடுதல் வேண்டும். அந்தரங்க சாதனத்தை அடைவதன் முன்னர் ஒருவன் பகிரங்க சாதனத்தை விட்டு விடுவானாயின் அவன் கிணற்றில் தவறி விழுந்து மரவேர் முதலியவற்றைப் பிடித்துக்கொண்டு தொங்குகிற

ஒருவன் தன்னைக் கரையேற்றுவதற்கு விடும் கயிற்றைப் பிடிப்பதற்கு முன்னர் அவற்றை விட்டு விடுவானாயின், அவன் கிணற்றில் விழுந்து மூழ்கிப்போவது போன்று உபயப் பிரஷ்டனாய்த் துன்புறுவான் என்க.

சி:—ஐயனே! தேவரீர் பகிரங்க சாதனங்களாய கர்மோபாசனைகளைப் பற்றித் தாங்கள் விரிவாய்க் கூறியிருப்பவற்றை மறக்கவில்லையேனும், மறந்தவன் கேட்டதைச் சகிப்பீர். அவற்றின் தன்மைகளை நன்கு உணர்ந்தேன். அவைகளுக்கும் இவற்றிற்கும் சம்பந்தம் உண்டென்பதை எளிதில் உணரும் ஆற்றல் இலனேனும் இனித் தேவரீர் கருணையால் தெளிவேன். ஏனைய நான்கும் மூன்றும் ஒன்றுமாகக் கூறிய அந்தரங்கங்களுக்குள் முன்னர் நான்கு சாதனங்களையும் விளங்கக் கூறுமாறு வேண்டுகின்றேன்.

குரு:—குழந்தாய்! கீழேவரும் வினு விடைகளைக் கவனித்தால் அவற்றின் தன்மை நன்கு விளங்கும். அவை வருமாறு:—

வினு:—மோக்ஷத்திற்கு அதிகாரி யார்?

விடை:—பிள்ளாய்! இராஜசூய யாகத்திற்கு அரசர்களே அதிகாரியாயும், மற்றவர்கள் அல்லராயும், பிரகஸ்பதி வசனம் என்னும் கிரந்தத்தில் யாகத்திற்குப் பிராமணன் அதிகாரியாயும் மற்றவர்கள் அல்லராயும் இருத்தல் போன்று, அந்தக் கரணத்திலுள்ள மலம் நிஷ்காம கர்மத்தினுலும் விட்சேபம் ஈசுவரோபாசனையினுலும் நீங்குமாறு

செய்து தனது எதார்த்த சொரூபத்தை மறைத்திருக்கின்ற அஞ்ஞானத்தோடும் நான்கு சாதனங்களோடும் கூடியிருக்கின்றவனே மோக்ஷத்திற்கு அதிகாரியாவன்; மற்றவர் அதிகாரியாகார்.

சி:—சுவாமி! அடியேன்மேல் கருணைபாலித்து நித்தியா நித்திய வஸ்து விவேகமாவதென்ன?

குரு:—அப்பா! நித்தியவஸ்து இன்னதெனவும், அநித்திய வஸ்து இன்னதெனவும் விசாரித்து அறியலாம்.

சி:—நித்திய வஸ்து எத்தகையதாய் இருக்கும்?

குரு:—நாசமின்றி யிருக்கும் வஸ்து யாதோ அதுவே நித்திய வஸ்துவாம். இதனைத் தர்க்க நூலார், "அழிவுபாட்டு அபாவத்திற்கு எதிர்மறை யாகாதது நித்தம்" என்று கூறுவர்.

சி:—தர்க்கநூல் என்றால், அதனை வர்க்கநூல் எனக் கொண்ட எளியன் அதனை எங்ஙனம் அறிவேன்? ஆயின், அநித்திய வஸ்து எத்தகையதாய் இருக்கும்?

குரு:—அழிவு பட்ட பாவத்திற்கு எதிர்மறையாவது அநித்தம். அதாவது, நாசத்தை அடைவதாக விருப்பது யாதோ அதுவே அநித்திய வஸ்துவாம்.

சி:—அப்படியாயின், நித்தியவஸ்து என்பது எதனை?

குரு:—ஆத்துமாவை.

சி:—அநித்திய வஸ்து என்பது எதனை?

குரு:—விஷயங்களை.

சி:—சுவாமி! பின்னின்மையும், ஒன்றிலொன்றின் மையும், முழுதுமின்மையும் நாசமின்றியிருத்தலின் அவைகளும் நித்தியமாமே; அழிவுபாட்ட பாவம்—பின்னின்மை. அந்நியோந்நியா பாவம்—ஒன்றிலொன்மை. அத்தியந்தா பாவம்—முழுவது மின்மை.

குரு:—அப்பனே! அழிவுபாட்ட பாவம்தனது எதிர்மறையின் சமவாயிற் காரணத்தில் இருத்தலினாலும், அக்காரணம் நாசமுடையதாய் இருத்தலினாலும், அதனை நித்தம் எனல் கூடாது. மண்ணாகிய காரணம் கெட்டபோது, அதிலுள்ள அதின் காரிய கடத்தின் அழிந்து பின்னில்லாமற்போதல் அழிவின்றி இருக்கும் எனல் யுத்திக்குப் பொருந்தாது.

சி:—சுவாமி! விஷயங்கள் என்றீரே; அவை எவை?

குரு:அஞ்ஞானமும் அதன் காரியமாகிய உலகமுமாம்.

சி:—ஆண்டவனே! ஆத்மாவை நித்தியமென்றும், விஷயங்களை அநித்தியமென்றும் கூறுதல் எக்காரணத்தால்?

குரு:—ஆன்மா அழிவற்றதாயும், தொழிலற்றதாயும் இருத்தலினாலும், விஷயங்கள் அழிவுள்ளதாயும் தொழிற் சகிதமாயும் இருத்தலினாலும், ஆன்மா நித்தியப் பொருளென்றும், விஷயங்கள் அநித்தியப் பொருள்களென்றுங் கூறப்படுகின்றன.

சி:—நாசமுடையது நித்தியம் ஆகாவிடினும் தொழிலுடையது ஏன் நித்தியமாகாது.

குரு:—குழந்தாய்! தொழிலுடைய வடிவுடைப்பொருள்களெல்லாம் கண்டபொருளாயிருத்தலின் அவையெல்லாம் பின் முன் மேல் கீழ் என்றற் றொடக்கத்து அவயவங்களையுடையனவாம். அவயவங்களையுடையன வெல்லாம்,

"காரிய மவயவத்தாற் கண்டனங் கடாதிபோல" என்றவாறு காரியங்களாய் உற்பத்தியின்றியிருந்து நாசம் அடைவதும் உற்பத்தியாகி நாசம் அடைவதும் அநித்தியமாம் என்னும் நியமப்படி முன்பு இல்லாதிருந்து பின்பு உண்டாகுங் காரியங்களும் அநித்தியமாம். ஆகாயம் முதலியன தொழில் இல்லாதிருந்தும் நாசம் அடைவதாய் இருத்தலின் அவையும் அநித்தியங்களாம்.

சி:—குருநாதரே! பிரமத்தை நித்தியம் என்று கூறாமல் ஆன்மாவை நித்தியம் என்றது எற்றிற்கு?

குரு:—நித்திய பதார்த்தம் அறுத்மா வன்று என்று உணர்த்த, ஆத்மா நித்தியமானது என்று கூறப்பட்டது.

சி:—நன்று; நன்று; அங்ஙனமாயின் ஆன்மாவே பிரமமோ?

குரு:—அதற்கென்ன தடை?

சி:—இறைவ! எங்ஙனம்.

குரு:—வியாபகமாய் இருப்பது பிரமம் என்று சொல்லப்படும். அங்ஙனமே ஆன்மாவுமாம். இடத்தால் எதற்கு முடிவில்லையோ அது வியாபகம் எனச் சொல்லப்படுகிறது.

ஆத்மா பிரமத்திற்கு வேறுபட்டதாயின் அது இடத்தினால் முடிவுடையதாம். எது தேசத்தினால் முடிவுடைய தாகின் றதோ அது காலத்தினாலும் முடிவுடையதா மென்பது நிச்சயம். அன்றி, நியமம் ஆதலால், தேசத்தானும் காலத்தானும் முடிவுடைய அவ்விரண்டும் (ஆன்மாவும் பிரமமும்) கடபடம்போலக் கண்டமாய்க் - காரியமாய் அநித்தமாய் ஒழியும். இவ் வேதுவினால் ஆன்மா பிரமத்திற்கு வேறுபட்டது அன்று என்பது பெறப்படுகின்றது. ஆன்மாவிற்கு வேறாய்ப் பிரமம் இருக்கும் பட்சத்தில், பிரமம் ஆன்மா வல்லாத அனாத்மாவாம். அப்போது, ஆத்ம பேதத்தை யுடைய அனாத்மா சடம் ஆவதுபோலப் பிரமமும் சடமாகும். ஆன்மாவிற்கு வேறுபட்டது பிரமம் எனக் கூறின், அப்போது அது காரியமாயும் அனாத்மாவாயும் இருத்தலை ஏற்றலின் அவ்வாறு கூறல் தகுதியன்றாம். ஈண்டு ஆத்மா என்றது சீவசாட்சியான கூடஸ்தனை. ஆத்துமாவே பிரமம் என்பது பிரமகீதை. ஐதரேய உபநிஷதார்த்தத்தில்,

"சின்மாத் திரமா யுள்ளவெறுஞ்
 சிவனே திகழ்வா ணியாதுக்கு
முன்மாத் திரமும் வேறில்லை
 முற்று மவனே மொழிவுற்ற
நன்மாத் திரமா யான்மாவென்
 றுரைக்கு நாமத் தினையுடையான்
றன்மாத் திரமே யாகியவத்
 தன்மை யான சங்கரனான்" என்று கூறுவதால்

அறிக.

சி:—நான் என்னும் சொல்லுக்குப் பொருளாக விருப்பது ஆன்மாவன்றோ?

குரு:—ஆம்.

சி:—அங்ஙனமாயின், அது பலவாக விருப்பானேன்.

குரு:—அது அங்ஙனம் உபாதியால் பலவாய்ச் சொல்லப்படுகிறது. நான் என்பதற்குப் பொருள் மயக்க காலத்தில் தேகத்தின் கண்ணும், இந்திரியத்தின் கண்ணும், கரணத்தின் கண்ணும், பிராணவாயுவின் கண்ணும், சீவனின் கண்ணும், தெளிவுகாலத்தில் இவைகளைப் பற்றின்றி அறிகிற சாட்சியின் கண்ணும் பொருந்துகிறது. அச்சாட்சி அல்லது ஆத்மா ஒன்றாயிருந்துவரும், ஸ்தூல சூட்சும காரண தேக வேற்றுமையால் நான் நான் என்று பலவாய்ச் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு பிராணிக்கும் நான் நான் என்னும் போதம் வெளிப்படையாயும் அவ்வியத்தமாயும் இருத்தலின் நீ என்னும் முன்னிலையும், அவன், அவள், அது என்னும் படர்க்கையும் தன்மையாகிய நான் என்பதற்கு வேறாய் உண்டென்று பெறப்படவில்லை. படவே, நான் என்னும் தன்மையொருமைப் பொருளன்றி வேறு எப்பொருளும் உண்டு எனல் மயக்கமாகின்றது. நான் என்பது யாதார்த்தத்தில் பிரம வடிவப் பொருளாகிய ஆத்மாவாக யிருத்தலின் அது பலவகைப் பட்டதன்றாம்.

சி:—நான் நான் என்னும் வியவகாரம் மயக்கமின்றி நிகழுதலின், அதனை எங்ஙனம் ஒன்றென்று கொள்வது?

குரு:—உற்பத்தியுடையது நாசமுடையதாம் என்னும் நியமத்தை ஸ்திரமென்னும் சாக்கிரவுலகும் அ-ஸ்திரமென்னுஞ் சாக்கிரவுலகும் ஏற்றலின் அவை அநித்தியமாம். இவைகளுக்குக் காரணமான அஞ்ஞானம் பிரம விசாரத்தில் தனக்கென ஓர் வடிவு இன்றி ஒழிதலின் இதுவும் அநித்தியமாம். மேலும் இவை ஒன்றிலொன்று இல்லாமையினுலும் அநித்தியமாம்.

சி:—ஐயனே! தேவரீர் விளம்பியது சரியாகப் புலனுயிற்றேனும், ஐயமுளதாகையால், அவையிற்ரு லாவதென்றீரே அஃதெங்ஙனம்.

குரு:—குழந்தாய்! சாக்கிரத்தில் சொப்பனமும் சுழுப்தியும், சுழுப்தியில் சாக்கிரமும் சொப்பனமும் இல்லாமையால் இவை அநித்தியமாய் இருக்கின்றன.

சி:—நான் என்னும் சொல்லுக்குப் பொருளாயுள்ள ஆன்மாவும் இங்ஙனம் இருப்பதால் அதுவும் அநித்தியமாமே.

குரு:—அப்பா! அங்ஙனங் கொள்ளாதே. நான் ஒன்றும் அறியாது உறங்கினேன் என்றும், நான் சொப்பனங் கண்டேன் என்றும், நான் விழித்துக்கொண்டேன் என்றும், விவகரிப்பதின்கண் நான் என்பது மாத்திரம் மாருது ஒருபடித்தாயும் ஏனையவை மாறிமாறி விகாரப்பட்டும் வருதலின் ஆத்மா அநித்தியம் என்பது ஏற்காதென்க.

சி:—இதனல் என்ன சித்தித்தன?

குரு:—குழந்தாய்! நான் சிசு, நான் கௌமாரன், நான் யுவா, நான் விருத்தன் என்னும் வியவகாரத்தில் நான் என்பது சிசு முதலிய அவஸ்தாபேதம் நோக்கிப் பலவாய்ச் சொல்லப்படினும் அது பலவாதலின்றி உண்மையில் ஒன்றாகவே இருத்தலான், நான் நான் என்று விவகரிப்பதுபற்றி அது பலவாதல் கூடாது. நான் என்பதற்குப் பொருளாயுள்ள வாத்மா சித்தாயிருப்பதாலும், சித்திற்கு உற்பத்தி நாசம் இன்றாதலாலும், உற்பத்திநாசம் இல்லாதது மற்றொன்றை யவாவாத வியாபகமாய் இருத்தலாலும் அது பலவாதல் எவ்வாறாம்? பலவாயின் கடபடம்போல நிலையற்றதாகும். ஆகவே பிரம வடிவ ஆத்மா நித்தியம் என்னும் விஷயத்தில் சங்கையின்றாம்.

சி:—அஞ்ஞானமும் அதன் காரியமாகிய உலகும் என்னும் விஷயங்கள் எத்தனை வகையாம்?

குரு:—அஞ்ஞானம் ஒன்றாயும் அதன் காரியவுலகு இருவகையாயும் இருக்கும். ஒன்றென்பது சொல்லாமலே விளங்கும். உலகானது நிச்சயமென்றும், நிச்சயமில்லாததென்றும் இருவகையாம். சாக்கிரவுலகு ஸ்திரமென்றும் சொப்பனவுலகு அ-ஸ்திரமென்றும் கொள்ளல்வேண்டும். சாக்கிரவுலகு சொப்பனவுலகைக் காட்டிலும் நீடித்திருப்பதாகக் காணப்படுதல் பற்றி அது ஸ்திரமென்று சொல்லப்படுகிறது.

சி:—இவை மூன்றும் அநித்தியமாதல் எப்படி?

குரு:—மாணவ! ஆத்மா நித்தியம் என்றும் விஷயங்கள் அநித்தியம் என்றும் சித்தித்தன.

சி:—சுவாமி! நித்தியா நித்தியப் பொருளின் நிலையறிந்தேன்; இனி, இக முத்திரார்த்த பலபோக விராக மாவதென்னை?

குரு:—அப்பா! இம்மையிலும் மறுமையிலும் அடையத் தருவதாயுள்ள விஷய போகங்கள் எல்லாம் நிலையற்றன வென்றும், உண்மையில் துன்பத்தைத் தருவனவென்றும் அறிந்து அவற்றின்கண் ஆசையில்லாது இருத்தலாம். ராகம்—ஆசை; விராகம்—அஃதில்லாமை.

சி:—இகலோக பரலோக போகங்கள் எதனுல் உண்டாகின்றன?

குரு:—குழந்தாய்! நல்வினையால் உண்டாகின்றன.

சி:—சுவாமி! போகம் என்றுல் என்ன?

குரு:—இன்ப துன்பங்கள் புலப்படத் தோன்றல் போகமெனப்படும். சீவனது உடல் அதற்கு இடமாம். வாசனையென்பதும் குணம் என்பதும் வகுப்பை நோக்காவிடத்து நற்கந்தத்தையும் நற்குணத்தையும் உணர்த்துவதுபோல ஈண்டுப் போக மென்பதும் இன்பம் புலப்படத் தோன்றலையுணர்த்தி நின்றதென்க.

சி:—கருணுமூர்த்தியே! இகலோகபரலோகபோகங்கள் நிலையற்றன வென்றும் துன்பந் தருவதென்றும் அறிவது எப்படி?

குரு:—இகலோகமும் பரலோகமும் காரியவடிவாய் இருத்தலினால் நிலையற்றதாம். எது அநித்தியமோ அது நிலையற்றது என்பதில் யாதுஞ் சங்கையின்றாம். இகலோக பரலோகங்களே நிலையற்றனவாயின், ஆண்டு நிகழும் போகங்கள் நிலையற்றன வென்று சொல்லுதல் கூடாது. மதுவுண்டார் மகிழ்ச்சி துன்பத்தைத் தருவதா யிருத்தல்போன்று நிலையற்ற அப் போகங்களும் துன்பத்தைத் தருவனவாம் என்பதில் யாதுஞ் சங்கையின்றாம்.

சி:—கருணைக்கடலே! ஞானவுருவமே! இம்மைக்கண் அரசர்களும் பிரபுக்களும் சுகானுபவிகளாய் இருத்தலின், அவர்களுக்கு அச்சுகம் துன்பத்தைத் தருவதெங்ஙனம்?

குரு:—பிள்ளாய்! எனப் புன்னகைகாட்டி, அப்பா தாங்கள் அனுபவிக்கும் இன்பம் நிலை யற்றது என்று உணர்ந்துழி அவர்களுக்கு அச்சுகம் போய்விடுமே என்று துக்கம் உண்டாதல் நிச்சயமாதலின், அது அவர்களுக்குத் துன்பத்தைத் தருகிறது என்று கூறப்பட்டது. மேலும் புலியானது பசுவின்தோலைப் போர்த்துக்கொண்டு இருத்தல்போன்று துக்கம் என்பது சுகப்போர்வையைப் போர்த்துக் கொண்டிருக்கிறது என்று அறிதல் வேண்டும். இகலோகத்தில் சுகம் என்பது வாஸ்த்தவத்தில் இல்லை. அரசர்களுக்குத் தேகத்திலுண்டாகும் பிணிகளாலும், பிள்ளையில்லாமையாலும், துர்க்குணப்பிள்ளை இருப்பதினாலும், அன்புள்ள பிள்ளை இறந்து போவதினாலும், சத்துரு பயத்தினாலும், தேசத்தில் பருவமழை யில்லாததினாலும், பெண்களினாலே

உண்டாகிற பிணக்கினுலும், கிழத்தனத்தினுலும், தேகத்தில் பரவுகின்ற கொடிய நோய்களினுலும், ஐசுவரியங்களை நமக்குப் பிறகு காப்பாற்றுகிறவர் யாவர்? என்னும் சிந்தனையாலும், இறக்கப்போகிருேமே என்னும் ஏக்கத்தாலும், பிறவற்ருலும் துன்பமே உண்டாவதன்றி இன்பம் உண்டாவதில்லை; மோகத்தால் துக்கம் சுகமாய்க் காணப்படுகிறது.

சி:—இறைவ! நீர் விளம்புவது விந்தையே! அஃதெங்ஙனம்?

குரு:—சிவிகை தாங்குவோர், பணி செய்வோர், பிரயாணஞ் செய்வோர், மாவுத்தர் முதலியோர் அதிகக் கூலியால் சந்தோஷமும், குறைந்த கூலியால் துன்பமும் அடைகிருர்கள். அவர்களுக்கு மோகத்தினுல் துக்கம் சுகமாகக் காணப்படுகிறதோ அங்ஙனமே அரசர்களுக்கும் பிரபுக்களுக்கும் துக்கம் சுகமாய்க் காணப்படுகிறது. இதனுல், போகமே துக்கத்திற்குக் காரணமாம் என்க.

சி:—முக்காலமறிந்த முதல்வனை யொத்த முத்தனே! இகலோக போகம் துக்கமூலமாயினும் பரலோகபோகம் அங்ஙனம் உரைத்தல் சாலுமோ?

குரு:—குழந்தாய்! நன்கு வினவினுய். பரலோக வின்பமும் அத்தன்மைத்தே. பரலோகம் என்பது தேவலோக வாழ்க்கையேயாம். அது துக்கமயமானதென்றே உரைக்கலாம். பரலோகத்திலுள்ள தேவர்கள் தம்முள் பொருமையுடையவர்களாய் இருக்கிருர்கள் என்று சாத்திரங் கூறுவ

தனுல், அவர்கள் துக்கமுடையவர்கள் என்பது சொல்லாமலே விளங்கும். பிறர் ஆக்கங்கண்டு சகியாமையினுல் அல்லவோ பொருமையுண்டாகின்றது. தேவர்களிற் சிலர் சாபம் பெற்றிருக்கிருர்கள். அவர்கள் அரக்கர்களால் படும் உதைக்கு அளவின்று. ஒருவன் பாரியை மற்ருெருவன் அபகரித்துக் கொள்ளுவதும், சுராபானஞ் செய்வதும் அவர்களது தொழிலாம். இதனை,

"பொதுமாதர் தோளே புணர்வ தமிர்த
மதுபான முண்டே மகிழ்வ—தெதுகோடி
சாவார் பிறப்பார் சதுமுகனேர் நாளிலிது
தேவாதிப ரெய்துஞ் சீர்."

என்று சொல்லும் அமிர்த சாரத்தை அமைதியுடன் நோக்குவாய். புண்ணியம் நசிக்க மண்ணிடை மாந்தராய் வந்து தோன்றுவர். புண்ணியக் கழிவை நோக்கி வருந்துமவர்கள் அனுபவிக்கும் சுகம் சுகமாகாது.

சி:—சுவாமி! தேவர்கள் ஆனந்த வடிவினரென்று சில கிரந்தங்கள் விளம்புகின்றதே. அது எவ்வாறு ஒக்கும்?

குரு:—குழந்தாய்! மக்களினும் தேவர்களுக்கு விசேஷ திரவியம் இருத்தல்பற்றி அவ்வாறு சொல்லப்படுகிறது. பொன் விலங்கும் இருப்பு விலங்கும் தம்முள் தாரதம்மியம் இன்றித் துக்க சாதனமாய் இருத்தல் போன்று சாமானிய ஐசுவரியமும் விசேஷ ஐசுவரியமும் துக்க சாதனமேயாம். மற்றும் ஆனந்த வடிவினரென்றது, சரீரத்திற் கூடியிருத்

தல்பற்றி விவேகிக்குத் துக்கமுண்டானாலும் அவ் விவேகி அத் துக்கத்தை அந்தக்கரண தருமமாகக் கண்டு எங்ஙனம் இருக்கிறானோ அங்ஙனமே உத்கிருஷ்ட தேவர்கள் ஆண்டுண்டாகும் துக்கத்தை அந்தக்கரண துக்கமாகக் கண்டிருக்கிறார்கள். அவர்களையே ஆனந்த வடிவின ரென்றனர்.

சி:—அப்படியானால் யாது உண்மையினால் துக்கம் உண்டாகின்றது?

குரு:—அப்பா வாலிபனே நாற்றத் துருத்தியும், ஆபாசக் கொட்டிலுமான இச் சரீரம் உண்மையினால் துக்கமுண்டாகிறது.

சி:—இறைவனே! அஃது எங்ஙனம்?

குரு:—இச் சரீரத்தின் உண்மைநிலை உணராத குழந்தாய்! சரீரமுள்ள இடத்தில் துக்கமும், அஃது இல்லாத இடத்தில் அஃது இன்மையும் இருத்தல் அவஸ்தாத் திரயத்தினால் உணரலாம். சுருதி அவஸ்த்தையில் சரீரம் இல்லாதபடியினால் ஆண்டு துக்கமில்லாமல் இருக்கிறது. ஜாக்கிரதாவஸ்த்தையிலும், சொப்பனவஸ்த்தையிலும் சரீரம் இருக்கிறது. சரீரம் இருக்கின்ற இடத்தில் துக்கம் உண்டாகாமற் போகாது. ஜீரணித்துப் போவதால் சரீரம் எனப் பெயர் வந்தது. சரீரம் உள்ளவரையில் துக்கம் இருந்தே தீரும்.

சி:—ஐயனே இச்சை இல்லாமை என்னும் பொருளாகிய விராகம் எத்தனை வகை?

குரு:—அபர விராகம், பர விராகம் என இரண்டு. அபர விராகம் நான்கு பிரிவினையும், பர விராகம் ஒரு பிரிவினையும் உடையது. இவ் விரண்டிற்கும் உள்ள பேதாபேதம் குரு வாயிலாக அறிக. ஆயின் பர விராகமானது சம்ஸ்கார மாத்திரமாய் அந்தக்கரணத்தில் இருக்கும் ஆசையைப் புனர் ஜென்மமுண்டென்று எவ்வுலக போகத்தையும் விரும்பா திருத்தலைக் கூறுதலினால் அதுவே நீ அறிந்துகொள்ள வேண்டுவது. மற்றையவற்றால் உலக இயல்பில் வெறுப்பு உண்டாவது திண்ணம்.

சி:—குருநாதரே! மேலே கூறியதில் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. அதனால் அடையும் பயனை எனக்கு விரித்துச்சொல்ல வேண்டுகிறேன்.

குரு:—வாலிப உத்தமனே! நான் இதுகாறும் கூறியதின் பயன் யாதெனில், விஷய போகங்களை விஷம் என வெறுத்து ஒன்றிலும் ஆசையில்லாமல் இருக்கவேண்டுமென்பது. இதனை அடையவேண்டித் திருமூலர்,

"ஆசை யறுமின்க ளாசை யறுமின்கள்
ஈசனோ டாயினு மாசை யறுமின்கள்
ஆசை படப்பட வாய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட வானந்த மாமே."

என்று அருளியதையும் அறிக.

சி:—சமாதிசட்க சம்பத்தியாவ தென்ன?

குரு:—அது சமம், தமம், திதிட்சை, உபரதி, சிரத்தை, சமாதி என ஆறுவகையாம். இவ்வாறும் ஐசுவரியங்கள் என்று சொல்லப்படும். சமாதி என்பது சம+ஆதி எனப் பிரிவுபட்டு நிற்கும்.

சி:—அருமறை நன்குணர்ந்த ஐயனே! சமம் ஆவது என்ன?

குரு:—குழந்தாய்! மனம், புத்தி, சித்தம், அகங்காரங் களை விஷயங்களில் புகவிடாமல் தடுத்து உலக வியாபார மின்றி மனத்தைத் திருப்பி வேத வேதாந்த சிரவணத்தில் ஒருவனை அழுந்தச் செய்வதற்கு இவ்வுட்கரணங்களே காரணமாவது என்று அறிவாய்.

சி:—தம மாவது என்னவோ?

குரு:—அதனை நீ அறியாயா? செவி முதலிய புறக் கரணங்களை சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் முதலிய விஷயங்களில் புகவிடாமல் தடுத்தலாம்.

சி:—திதிட்சையாவ தென்ன?

குரு:—வாலிபனே! இது காமக் குரோதாதிகளைத் தலை யெடுக்கா வண்ணம் மடக்கி, சீதம், உஷ்ணம், பசி, தாகம் முதலியது வந்தும் சகித்துக் கொண்டிருத்தலாம். அன்றியும் எக்காலத்தில் எதுவருமோ அக்காலத்தில் அதை அநுபவித்தே தீரவேண்டும் என்கிற முடிபும் தன்கைப் பொருள் தன்னைவிட்டு நீங்கும்போது வருத்தமும், தனக்கு மேன்மை உண்டாகுமாறு கிட்டுகிற பொருளைப்பற்றி சம புத்தியுடனிருப்பதும் இதுவேயாம்.

சி:—அப்படியாயின் உபரதியாவ தென்ன?

குரு:—வாலிபத்தால் வாடி அலேந்து திரியும் அசடனே! பெண், தனம், ஜாதி, அபிமானம் முதலிய சாதனங்களோடு கூடிய சகல கர்மங்களே விட்டும், விஷய போகங்களே விஷமாகக் கருதியும், பெண்களே வெறுத்தும் இருத்தலாம்.

சி:—சிரத்தையாவ தென்ன?

குரு:—குழந்தாய்! இதுதான் நீ முக்கியமாகத் தெரிந்து கொள்ளவேண்டியது. இஃதில்லாதவன் இவ்வுலகத்தில் மேன்மையடையவே முடியாது. இது மாதா பிதாக்களிடத்தும், குருவினிடத்தும், வேதத்தினிடத்தும் பூரண விசுவாசத்தை வைத்திருத்தலாம்.

சி:—சமாதியாவ தென்ன?

குரு:—குழந்தாய்! விஷயங்களில் அகக் கரணங்களேப் போக விடாமல் சாஸ்த்திர சிந்தனேயால் இந்திரியங்களே அடக்கி ஆசாரியன் அநுக்கிரகத்தை அநுஸந்தித்துச் சலிப்பில்லாமல் ஒருமுகப்பட்டிருத்தலாம்.

சி:—ஐயனே! இச் சம தமாதிகள் வெவ்வாருகப் பிரிவு பட்டு நிற்கையில் அவைகளின் அபேட்சத்தைத் தேவரீர் ஒரு முகமாக்கிக் கூறியது ஏன்?

குரு:—குழந்தாய்! தமம் சமத்தை அபேட்டித்தலும், திதிட்சை சமத்தை அபேட்டித்தலும், உபரதி சமத்தை அபேட்டித்தலும், சிரத்தை சமத்தை அபேட்டித்தலும், சமாதி சமத்தை அபேட்டித்தலும், சமம் தமத்தை அபேட்

டித்தலும், திதிட்சை தமத்தை அபேட்டித்தலும், உபரதி தமத்தை அபேட்டித்தலும், சிரத்தை தமத்தை அபேட்டித்தலும், சமாதானம் தமத்தை அபேட்டித்தலும், சமதமாதிகள் திதிட்சையை அபேட்டித்தலும், சமதமாதிகள் உபரதியை அபேட்டித்தலும், சமதமாதிகள் சிரத்தையை அபேட்டித்தலும், சமதமாதிகள் சமாதியை அபேட்டித்தலும் உண்டு. இவைகள் இப்படி அபேட்டிப்பதனாலே ஒன்றற்கொன்று சககாரியாய் இருக்கின்றன என்பதனை அறிவாய்.

சி:—ஆரியனே! முமுட்சுத்வம் என்றால் என்ன?

குரு:—கூரிய அறிவுள்ள மகனே! மோட்ச விருப்பத்திற்கு முமுட்சுத்வம் என்று பெயராம். மோக்ஷமாவது பிரமத்தை யடைதலும், துக்க நிவர்த்தியுமாம்.

சி:—சுவாமி! சாதனசதுட்டயங்களின் அடைவு எப்படி?

குரு:–குழந்தாய்! சுருதி, ஸ்மிருதி, இதிகாசம், புராணம் முதலியவைகளைத் தெளிவுற அறிந்திருக்கின்ற பண்டிதர்களுக்கு நித்யா நித்ய வஸ்து விவேகம் இருந்தும் அவர்கள் விஷயங்களில் ஆசையுடையவர்களாய், காமிய கருமங்களைச் செய்கின்றபடியால் ஆசக்தி ஒழிய இகமுத்திரார்த்த பல போக விராகமென்னும் இரண்டாவது சாதனமும் வேண்டியதாக இருக்கின்றது. இவ்விரண்டு சாதனங்கள் உடையவர்களும் மன அடக்கம், புலன் அடக்கம் இல்லாமல் கோப தாபங்களை யுடையவர்களாய் இருக்கிறபடியால் அவைகளை ஒழிக்க சமாதி சட்க சம்பத்தியும் வேண்டியதாய் இருக்

கின்றது. இம் மூன்று சாதனங்கள் உடையவர்கள் மான் தோல் முதலியவற்றை கட்கத்தில் இடுக்கிக்கொண்டு சடை முடியுடையவராய் யோகியரென்னும் பெயரைத்தாங்கி குடும்பபந்தங்களை ஒழித்து விரக்தியும் உபசாந்தியும் உடைய வர்களாய் ஒருவர்மாட்டு ஒன்றையும் பெறாது இருக்கிறார்கள். அவ்வாறு இருந்தும் அவர்கள் சிரவணத்தில் இச்சை இல்லாது இருத்தல் பற்றி நான்காம் சாதனமாகிய முமுட்சுத்வமும் வேண்டியதாக இருக்கின்றது. இம் முமுட்சுத்வத்தை நன்கு தெளிவிப்பது, "நாநா சிவவாதக் கட்டளை" என்பதே யாம். இதனை பிரமகீதை, விவேக சூடாமணி, சூதசங்கிதை, விஞ்ஞானசாரம், அத்துவிதவுண்மை, கைவல்ய நவநீதம், பசுபதி பாச விளக்கம் முதலியவைகளில் நன்கு விளக்குவதோடு திருமந்திரத்தும்,

"சீராரு ஞானத்தி னிச்சை செலச்செல்ல
வாராத காதற் குருபரன் பாலாகச்
சாராத சாதக நான்குந்தன் பாலுற்றோன்
ஆராயு ஞானத்த னுமடி வைக்கவே." என்றும்,

"சற்குணம் வாய்மை தயாவிவே கந்தன்மை
சற்குரு பாதமே சாயைபோ னீங்காமே
சிற்பர ஞானந் தெளியத் தெளிவோர்தல்
அற்புத மேதோன்ற லாகுஞ்சற் சீடனே."

சீ:—சுவாமி! தேவரீர் சொல்லியவற்றை யெல்லாம் செவ்வனே அறிந்தேன்; ஆயின் இவற்றைத் தெளிவுறுத்தும்

குருவின் இலக்கணத்தை அடியேனுக்கு உபதேசித்தல் வேண்டுமென்ருன்.

குரு:—அப்பா குழந்தாய்! நீ கேட்ட வினுவினுல் அகம் மகிழ்ந்தேன். ஆயின்,

"மேலாஞ் சதுஷ்ட சாதனங்கண் மேவிநிறைந்த
பேர்க் குரைக்கின்
மேலா மதுநா மெனத்திடமாய் விளங்குமவையில்
லாத வர்க்கு
மேலாம் பரமன் மான்மழுவாய் விளங்கியுரைத்தும்
விளங் காது
மேலாஞ் சாதனங்கள்வர மேவ வேண்டுஞ்
சாது சங்கம்"

என அத்துவித வுண்மையிற் கூறியபடிச் சாது சங்கமும் நல்லாசிரியரும் இன்றியமையாதனவாக வேண்டுவதேயாம். நீ வினவியபடி, ஆனு நற்கல்வி அறிவு அடக்கமாதி யுடையவராய், ஜீவப்பிரம ஐக்கிய நிச்சயத்தால் ஆத்மஞானத்தில் நிலைத்தவராய்ச், சிஷ்யனுடைய புத்தியிற்ருேற்றும் ஜீவேசுவரபேதம், ஜீவர்களின் பரஸ்பரபேதம், ஜீவ ஜடபேதம், ஈசுவர ஜடபேதம், ஜடஜட பேதமென்னும் ஐவகைப் பேதங்களையும் நாநாவித யுக்திகளால் கெடுப்பதிற் சமர்த்தராய் இருப்பவரே குருவாவர் எனத் திருவாய்மலர்ந்தருளினுர்.

சீ:—சுவாமி! அறிந்தேன். ஆனுநற் கல்வியாதி யுடையவராயும், ஆத்மஞான நிஷ்டையுடையவராயும், பேதத்தை நிராகரித்தலால் அத்வயமாயும் அவித்யாதி மலரகிதமாயு

முள்ள ஆன்ம சொருபத்தை ஐயந்திரிபின்றி உள்ளவாறு தரிசிப்பித்துச் சகல சமுசாரத்தையும் மித்தியா வடிவமாக்கி அறிவிற் கரைத்து அறிவாகரமாகவே என்னை நிலைக்கச் செய்விப்பவர் எவரோ அவரே குருவாவார் என்பதனை அறிந்தேன். ஆயின் முன்னர் அதிகாரிபேதம் சூக்குமமாகச் சொன்னீரே அதனைக் கொஞ்சம் விரித்துச் சொல்லும்படி வணங்கிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

குரு:—அப்பா வாலிபனே! அவ்வதிகாரிகள் உத்தமோத்தமர், உத்தமர், மந்தர், மத்திபரென நான்கு பிரிவினராகச் சொல்லப்படுகிறார்கள்.

சி:—சுவாமி! அப்படியாயின் உத்தமோத்தம வதிகாரி எவ்விதமாய் இருப்பன்?

குரு:—அப்பா! உத்தமோத்தம அதிகாரி நித்தியாநித்திய வஸ்து விவேகத்தினால் யதார்த்தத்தில் அநித்தியமாய் இருக்கிற தேகாதி பிரமலோக பரியந்தமான சகல போக்கிய வஸ்துக்களிலும் நாய்கான்ற அன்னத்தைப்போல அத்தியந்த வைராக்கியத்தை யடைந்து, சகல விஷயங்களையும் விஷம்போலவும் அக்கினிபோலவும் நரகம்போலவுங் கண்டு, ஒரு விஷயத்திலும் பிரவிருத்தியின்றி நிவிர்த்தியை யடைந்து, சுழுத்தி யவஸ்தையைப்போன்று விஷய ஞானமின்றி இருக்கப்பெற்று, சாட்சாத்கார மின்மையினால் அடிக்கடி பகிர்முகப்பட்டு, தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிரைப்பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவும் ஆகிய தாபத்திரயங்களால் சிரசில் அக்கினி பற்றினவனைப்போன்று

வருந்தி, ஒரு விஷயத்திலும் இன்பத்தை அடையாது, ஒரு கணப்பொழுதாயினும் பிறவித் துன்பங்களாகிய தாபத் திரயங்களைச் சகிக்கமுடியாது, "எப்போது இந்தச் சம்சார சாகரத்தினின்றும் நீங்கப்போகின்றோம், எப்போது இதை விடப் போகின்றோம், எதனாலே இந்தத் துக்கத்தினின்று விடுபடுவோம்" என்றிப்படி அத்தியந்த மோட்ச விச்சை யோடு கூடியிருப்பவன் எவனோ அவன் ஆத்ம தத்துவ விசா ரத்திலே உத்தமோத்தம அதிகாரியென்று சொல்லப்படு கிறான். இதனால் நான்கு சாதனங்களிலும் அவதிபரியந்த முள்ளவனே உத்தமோத்தம அதிகாரியென்று பெறப்பட்ட தென்க.

சி:—உத்தமாதிகாரி எப்படிப்பட்டவன்?

குரு:—உத்தமாதிகாரி சாதன சதுஷ்டயங்களில் காரிய பரியந்தம் உள்ளவனாக இருப்பான். இவ்வதிகாரியே ஆத்ம விசாரம் செய்து, இந்த வஸ்து அழிவற்றது; இந்த வஸ்து அழியத்தக்கது என்கின்ற அறிவு. இவ்வுலகத்திலும் சுவ முதலிய பரத்திலு முள்ள விஷயங்களில் ஆசையிருத்தல், சமம், தமம், உபரதி, திதிக்ஷை, சிரத்தை, சமாதானம் இவ்வாறுடன் கூடி விளங்குவன்.

சி:—சுவாமி! தேவரீர் சொன்ன இவ்வதிகாரியினை அறிந் தேன்; இனி மற்ற அதிகாரிகளையும் அறிய வேண்டுகிறேன்.

குரு:—நீ வினவினால் வீண்காலம் போக்குவதால் பிர யோசனங் கிடையாது. மற்றைய அதிகாரிகளின் பேதங்களின் விவரத்தைச் சமயம் நேரின் எடுத்துரைப்பேன்.

சீ:—சுவாமி! மேலே தேவரீர் சொல்லிவந்த நான்கு சாதனங்களின் பழக்கத்தால் ஒருவன் அடையக்கூடிய பயன் தான் என்னோ?

குரு:—அப்பா! இங்குக் குறித்த சாதனங்களில் நான்காவது சாதனம் முமுட்சுத்துவம் அல்லவா? அந்த முமுட்சுத்துவம் எய்தினவன் முமுட்சு. இந்த முமுட்சுவால் அடையத்தக்க முதல் மோட்சம், சாலோகம், இரண்டாவது மோட்சம் சாமீப்யம், மூன்றாவது மோட்சம் சாரூப்பியம், நான்காவது மோட்சம் சாயுச்யம். இதுவே முடிந்த மோக்ஷமென்று அறிவாய்.

சீ:—மோட்சத்தின் பாகுபாட்டினை அறிந்தேன்; இவைகளைப் பெறுவதற்கு நான் இன்னுஞ் செய்யவேண்டிய கடமைகள் தான் என்னவோ? அவைகளைச் செவ்வனே திருவாய் மலர்ந்தருளுதல் வேண்டும்.

குரு:—அப்பனே! உன் கருத்தறிந்தேன்; நீ உத்தமன் என்றுந் தெரிந்தேன். உன் மனதைப் பூர்த்திசெய்கிறேன். மேலே சொன்ன மோட்சங்களைப் பெறுவதற்குச் சரியையாதிகளைச் செய்து சாதன சதுஷ்டய மடைந்த பின்னர் சரியை யாதிகள் அடையவேண்டியது. இந் நெறியினைச் சிறிது வேறுபாடாகக் கூறுவாருமுளர். அவைகளை யெல்லாம் பின்னர் அறியலாம். இந்த நெறியே முத்திக்கும் பத்திக்கும் ஆன நெறியெனக் கொள்வாய்.

சீ:—சரியையாதி நான்கும் தெரிவிப்பனயாவை; அவற்றைச் சுருக்கித் திருவாய்மலர்ந்தருள வேண்டுகிறேன்.

குரு:—அவைகளே ஒருவன் அடையவேண்டிய இறுதி இன்பத்திற்குச் சோபானம் என்று தெரிந்துகொள்.

சி:—சோபான மென்று லென்ன?

குரு:—அதுதான் ஒருவன் படிப்படியாக மேலுறும் வழி என்பது. இதுவே வேதங்களிற் குறித்த சாதனங்கள். இந்த நெறிகளை அணுபட்சம் முதலிய வாயிலாகவும் விரித் துரைப்பர்.

சி:—இப்போது தேவரீர் சொன்னமை என் சிற்றறி விற்கு எட்டவில்லை; அவைகளின் இயைபையும் எடுத்துப் புகட்ட வேண்டுகின்றேன்.

குரு:—அப்பா குழந்தாய்! இந்த 'நாநா சீவவாதக் கட் டளையைச்' செவ்வனே ஓதினையானால், என்னால் சொல்லிவந்த வைகளை நன்றாய் அறிந்து கொள்ளலாம்.

சி:—சுவாமி! எந்நூலைக் கற்கப்புகினும் அந்த நூலி லுள்ள விஷயங்களைச் சுருக்கமாக அறிந்து, பின்னர் அத னுள் புகுந்து பார்த்தல் நலமன்றோ? அப்படியிருக்கப் படித் தால் தெரியும் என்கிறிரே! இது என்ன கதையா எளிதாகத் தெரிந்துக் கொள்வதற்கு எவ்வளவோ ஆண்டுகள் தவங் கிடந்த தபோதனரின் விவேகத்திற்கும் எட்டவில்லையாமே. அப்படியிருக்க அறியாமை நீங்காத எனக்கு அதன் இறுதி எளிதில் மனதிற்கொள்ள முடிவதோ? அணுபட்சமாவ தென்ன?

குரு:—அப்பா! சரியை முதிரக் கிரியையும், கிரியை முதிர யோகமும், யோகம் முதிர ஞானமும், ஞானம் முதிர முத்தியும் எய்துதலின், இதனைச் சோபான மென்றேன். அப்பா! இவ்வுலகில் உயிர்கள் தாமே பக்குவப்பட்டு முத்தி பெறும் வழியை அறிதலேயே அணுபக்ஷமென்றும் கூறுவர். இது, பிரேரகப்படுபவையென்றும், அபரமென்றும் இரு வகையாகச் சொல்லுவர்.

சி:—சுவாமி! இன்னும் என்னென்ன பக்ஷங்களுளவோ?

குரு:-அப்பா! அவைகளின் விரிவை யெல்லாம் நீ சமயம் நேர்ந்துழி அறிவதே தகுதி; ஆயினும் இரண்டொன்றை மாத்திரம் கூறுவேன். சம்புபக்ஷமென்று ஒன்றுண்டு; அது இறைவன் திருத்த ஆன்மா பக்குவப்பட்டு அடையும் நெறி என்பர். இதனைப் பிரேரக் கருவியென்றும், பர மென்றுங் கூறுவர். இன்னும் மாயாதிசேவை ஒன்றுண்டு; அது மாயையின் காரியமாகிய தத்துவ தரிசனமாம்.

சி:—சுவாமி! மாயை என்பதோடு அமையாமல், ஆதி என்றீரே அஃதென்ன?

குரு:—அதனால்தான் வேதாந்த ஞானிகள் பர தரிசன மும் ஆன்ம தரிசனமும் அடையலாவது என்றனர்.

சி:—சுவாமி! இம் மூன்றினையும் கூறினீரே. இத் தரி சனங்கட்கு முன்னும் பின்னும் அமைந்துள்ளவை இருக் கின்றனவோ?

குரு:—மாணவனே! வேதாந்த விசாரத்தில் புத்தி புகுவதோ மிகவும் கஷ்டமானது; அதிலும் ஒன்றின்

நிச்சயம் தெளிந்தால்தான் வேறொன்றின் விசாரணையில் மனம் பிரவர்த்திக்கும். அப்பா! மாயாகாரியமாகிய தத்துவ தரிசனத்திலேயே ஆன்ம தரிசனமும் பரதரிசனமும் அடங்கும். இவைகட்கு முன்னும் பின்னுமாய் அமைந்துள்ளவை தத்துவரூபமும், தத்துவ சுத்தியும், ஆன்ம ரூபமும், ஆன்ம சுத்தியும், பர ரூபமும், பர போகமும் ஏற்படும், இவைகளையே தசகாரியம் என்று சொல்லுவர். இத் தசகாரியத்தின் உண்மையினைத் தேர்ந்தவரே மனவிகற்பம் சிறிதும் இல்லாமல் ஏகம் இரண்டு என்னாத அத்துவித உண்மையினை அறிந்தவர் என்று தெரிந்துகொள்.

சி:—மதி கொளுத்தவந்த மகானுபாவரே! அத் தசகாரியத்தை விளக்கவேண்டுகின்றேன். அப்போது தான் தெளிவுண்டாகும்.

குரு:—உன்மனம் தெளிதல் வேண்டுமாயின், முதலாகச் சோபானமாகிய, ஞானாஜீவவாதத்தை உணருதி; பின்னர் அவைகளை அறிவாய்.

சி:—அறிவை விளக்கவந்த இறைவ! அடியேன் மனம் நாடியதை அறிவுறுத்தலாகாதா? மனக்குரங்கு அயலிடத்தில் தாவிப்பாய்ந்து ஓடாதிருக்கையிலேயே அதற்கு உண்மை விளங்கச் செய்ய வேண்டாமா?

குரு:-புன்னகைகொண்டு, அப்பா! எவ்வளவு புசித்தால் தேகம் சுகமடைந்து வாழலாமோ அவ்வளவு தான் புசித்தல் வேண்டும்; அதனை விடுத்து, அளவிற்குமேல் புசித்தால் அமுதமும் நஞ்சாகிவிடு மென்னும் ஆன்றோர் வாக்கின்

பொருள் நுட்பம் அறியாய்போலும். ஆயின், தெரிவிக்கின்றேன்.

தத்துவரூபமாவது:—பிருதிவிமுதல் நாதம் ஈருக முப்பத்தாறு தத்துவங்களும், தனுவும், கரணமும், புவனமும், போகமும், செயலும், பிரேரகமுமாய் நின்ற பொருளும் குணமுந் தொழிலும் தனக்கு வேருகக் காண்பது என்றறிவை.

தத்துவ தரிசனமாவது:—பிருதிவி முதல் நாதம் ஈருன முப்பத்தாறு தத்துவங்களையும் சுத்த மாயா அசுத்த மாயா மலங்களினது காரிய மென்றுஞ் சடபதார்த்த மென்றுந் தன்னுலே அறியப்பட்டதென்றுந் தன்னறிவிலே விளங்கக் காண்பது.

தத்துவ சுத்தியாவது:—பிருதிவி முதல் நாதமீருன முப்பத்தாறு தத்துவங்களின் விகற்பமாகிய சுட்டறிவுகளில் தானில்லாமல் தத்துவங்கள் தன்னைத் தாக்காமல் கானலைத் தண்ணீரென்று கண்டவன் கானல் என்று அறிந்த விடத்துத் திரும்ப விரும்பாதவன் போலவும், சொப்பனத்தில் யானையேறி மாலையிடக் கண்டவன் விழித்த விடத்து மெய்யாகக் காணுமல் பொய்யாகக்கண்டது போலவும், தன்னறிவிலே கண்டு நீங்கித் தான் அசைவின்றி அங்கியனுய் எங்கும் நிறைபவனுய் நித்தியமாய் அறிவாய் உள்ள முறைமையை அறிந்து நிற்பது.

ஆன்மரூபமாவது:—தேசிக மூர்த்தியினது அனுக்கிரகத்தாலே தன்னையுந் தன்னிடத்திலே பந்தமாயிருக்கிற தத்துவ

ஞானக்கிரியையின் செய்தியாகிய மாயா தத்துவங்களினால் சிருஷ்டித்தும் திதித்தும் சங்கரித்தும் மலபரிபாக வொழி விலே இந்தத் தத்துவங்கள் வேறும்படிக்குச் சத்திநி பாதத்தை விளைவித்துச் சத்திநி பாதத்தின் வழியிலே புறம்பே கட்புலனுக்குத்தோன்ற மானிடச் சட்டை சாத்தி எழுந்தருளிவந்து தான் வேறற நிற்கிற முறைமையைத் தருகிறவன், ஆன்மாக்களுக்கெல்லாம் அறிவிற்கறிவா யிருக் கிறவன் இறைவனே என்று பிரதிக்கினை ஏது திட்டாந்தங் களினாலே மயக்க விகற்பம் அறத் தன் அறிவிலே விளங்கக் கண்டு நிற்பது.

பரதரிசனமாவது:—ஆன்மா என்பது எவ்விடத்திலும் தோன்றாமல் என்னதென்றும் யானென்றும் நின்ற அசத்திய போதம் நீங்கத் தேசிக மூர்த்தத்தின் அனுக்கிரகஞானம் பிரகாசித்து நின்ற அவதாரம் இறைவனது பாதமாம். தன்னை உணர்த்தும் பகுதியாகத் தாக்குவதான விஷய போகங்களை அவனவனதுவாய் நோக்கும் இடமெல்லாம் அவன் அநுக்கிரகத்தையே கண்டு அனுபவிப்பது அவனது திருமுகமாம். அந்த அனுக்கிரகத்திலே தற்செயல் தோன் றாமல் பரவசப்படுவதே இறைவனது திருமுடியாம் என்று அறிந்து இந்த உண்மையைச் சந்தேக விகற்பமற உள்ளபடி விசாரித்து அறிந்து, இதுவும் அல்லாமல் சத்தியமாகவுள்ள பொருள் வேறேயும் ஒன்று இல்லை என்று தெளிந்து என்னது யான் என்னும் விகற்பமாகிய பிருதிவி முதல் நாதம் ஈறாகச் சொல்லப்பட்ட சகல வித்தையிலும் பொருந்

விவகாரங்களையும் எவ்விடத்திலும் தோன்றாமல் சகசமாய் நின்ற ஆணவமலத்தினையும் நீங்கித் தான் அறியும் முறைமையையும், அவனது ஞானம் அறிவுக்கு அறிவாய் நின்று பரிகரிக்கிற முறைமையும் தன் அறிவிலே விளங்கக்காண்பது.

ஆன்ம தரிசனமாவது:—ஆன்ம செய்தி எவ்விடத்திலும் தோன்றாமல் தத்துவ தாத்திகங்களை என்னுடையதென்றும், பசுஞானத்தினை யானென்றும் நின்ற அசத்தியபோதம் நீங்கிப் பழைய சிற்றறிவாகிய சுட்டுப்போதங் கழன்று நிற்பது.

ஆன்ம சுத்தியாவது:—தனக்கெனச் செய்தி இல்லாத ஆன்மா தன்னுடைய சுட்டறிவு எவ்விடத்திலும் தோன்றாமல் கெட்டுத் தன்னிடத்திலே விளங்கப்பட்ட அனுக்கிரக ஞானத்திலே தற்பூரணமெல்லாம் அடக்கித் தனது செய்தியெல்லாம் அனுக்கிரகத்தினுடைய செய்தியாய்த் தன்னை அந்த ஞானம் அடக்கின முறைமையும், தான் அந்த ஞானத்திலே அடங்கின முறைமையும், எவ்விடத்திலுந் தோன்றாமல், பந்தத்தினாலே தேகமே தானாயும், தானே தேகமாயும் நின்ற முறைபோலச் சிவமே தானாய் நிற்கவந்த வவசரம்.

பரரூபமாவது:—சடசித்துக்களாகிய தாவர சங்கமங்களுள் எல்லாந் தான் வேறற நின்று பெருமை பொருந்தியிருக்கப்பட்ட காருண்ணிய சத்தியே தனக்குத் திருமேனியாகி ஆணவமலம் சகசமாய் இருக்கப்பட்ட வான்மாக்கள் பாகபேதங்களைத் திருவுளத்து அடைத்துத் தனது இச்சா

தாமல் இக் கருவிகள் நீங்கினல் தனக்குள்ள சகசநிலையாகிய கேவலாவத்தையிலும் பொருந்தாமல், இக் கேவல சகலம் நீங்கினவிடத்து விளங்குவதான போதபூரணமாகிய அகம் பிரமஞானத்திலும் பொருந்தாமல், தேசிக மூர்த்தத்தின் அனுக்கிரக ஞானத்தாலே தற்பூரணமெல்லாம் அடங்கித் தனது செய்தியெல்லாம் அவன் அனுக்கிரக ஞானத்தினது செய்தியாய் அறிதற்கு அறிதாகிய மேலான பூரணவின்பந் தோன்ருமல் ஏகதேச வியாபாரமாகிய தனுகரணுதி இன் பமே தோன்ற, அந்த இன்பங்களையே மெய்யென்று அனுபவித்து நின்ற முறைமைபோலத் தனுகரணுதி இன்பம் எவ்விடத்திலும் தோன்ருமல் பூரணவின்பத் தொடர்ச்சியாகிய தேசிகமூர்த்தத்தின் அனுக்கிரகஞானத்தை எவ்விடத்திலுங் கண்டு அனுபவிப்பது.

பரயேசகமாவது:—சடசத்துக்கள் இரண்டினும் நின்று விளங்குவதாகிய இதாஹிதங்களுக்கு ஏற்ற சத்தாதி விஷயங்களிலே எந்த விஷயங்கள் வந்து தாக்கினுலும், அந்த விஷயங்களை எதிரிட்டுப் பார்த்து, இது தனு காண புவன போகங்களினது விகற்பம் என்றும், இந்த விஷயங்களினின்றும் விளங்குவதாகிய விஷயங்கள் கன்மத்தினது விகற்பமென்றுங் கண்டு தனக்கெனச் சற்றுஞ் செய்தியில்லாத சடரூபமாகையினுலே தானுகச் செயற்பட வறியாது, அந்த விஷயங்களை அதுவதுவாகப் புசிக்கும் ஆன்மாவானவன் நித்தியனுய்ப் பூரணனுய் அறிவாய் இருந்தாலும் தானுக ஒன்றையும் அறிதற்கு அறிவில்லை என்னும் முறைமையை உள்ள

படி தரிசித்து, அந்த ஆன்மாவினது அறிதற்கு அறிவாய் நின்று இந்த விஷயபோகங்களை இடைவிடாமற் பாகம் அறிந்து உணர்த்தி நிற்கிற திருவருளையும் உள்ளபடி தரிசித்து, அந்த அருளினது நிறைவு எல்லாம் தனது வடிவாகவுடைய பூரண வின்பமெனக் கண்டித்துக் குரு மூகூர்த்தமாய் எழுந்தருளி மாணிடச் சட்டை சாத்தி வந்து அனுக்கிரகித்தவன் அனுக்கிரகத்தை உள்ளபடி தரிசித்து, இவ்விடத்திலே வந்து பொருந்தப்பட்ட சத்தாதி விஷயங்களை யெல்லாம் அந்த அனுக்கிரகத்தினாலே பொருந்திப் பார்த்து, இந்த விஷய போகங்களின் வழித்தாய்த் தீவினையைச் செய்விக்கிறது அனுக்கிரகமாகிய திருவருள் தானே, நல்வினையைச் செய்விக்கிறதும் அந்தத் திருவருள் தானே, ஆகையால், இந்தத் தீமை நன்மைகளை அறியும்படிக்குப் புசிப்பாகி வந்த விஷய பேதங்களும் அவ் வனுக்கிரகமாகிய அருள் தானே யென்று, உள்ளபடி அறிந்து தரிசித்து, இந்த முறையன்றிலே சித்தாகிய ஆன்மவர்க்கத்துக்கும் சடமாகிய பாசசாலங்களுக்கும் ஒன்றையொன்று அறியவும் ஒன்றை யொன்று பொருந்தவும், ஒன்று சற்றும் தனக்கெனச் செய லில்லை யென்கிற முறைமையை உள்ளபடி தரிசித்து, அந்தப் பொருளோடு இயைவது.

பரபோகமாவது:—எத்தகைய செய்திகளைச் செய்திடினும் தற்செயல் எவ்விடத்திலும் தோன்றாமல் அனுக்கிரகமாகிற அருள் நிறைவிலேயே வேறற நிற்கில், அந்த அரு

ளிற்கு முதன்மையாகிய நேயம் அவனது அறிவு பூரணமெல்லாம் தனது வடிவாகக்கொண்டு, தான் அறிந்த அறிவு பூரணத்திற் கெல்லாம் உயிராய் இவனது அறிவு தொழிலாகிய இந்திரிய போகங்களாய்வரும் புசிப்புத்தொழிலும் தனது புசிப்பும் தொழிலுமாகவே புசித்துத் தொழிற்படும் நாநாவிதமாகிய போகங்களை யெல்லாம் அவனுக்குத் தனது பூரணவின்பமாகிய நேயவடிவமாகவே காட்டி, இவனது அறிவு பூரணமெல்லாந் தனது இன்பப் பூரணமாகவும், தனது இன்பப் பூரணமெல்லாம் இவனறிவு பூரணமாகவும் வேறறத் தோன்றி நின்று, தனது இன்பநிறை வெல்லாம் இவனது போகபூரணத்தை அழித்து நிற்பது இவ்விபவங்களை அறிந்தனுபவித்தலே நீ அறியவேண்டுவ தென்றார்.

சி:—எல்லாம் வல்ல இறைவர் நீரேயாவீர். உமது திருவருள் பெற்ற நான், எல்லாம் அறிந்தும் ஒன்றும் அறியாதவனே யாவன்; இவைகளின் விரிவை அறிவது எளியேனுக்குச் சாதனத்தைக் கடைப்பிடியாவிடில், புலனாவது மிகவும் அசாத்திய மென்பதை உணர்ந்தேன். இனி, அச்சாதனங்களின் வாயிலாக யாவற்றையும் அறிந்து நாநா ஜீவவாதங்களையுந் தெரிந்து கொள்ளுகிறேன்.

குரு:—குழந்தாய்! உன் மனப்பாங்கின்படியே நாநாஜீவவாதக் கட்டளையை விரித்துரைப்பேன் என்றார்.

நாநாஜீவவாதக் கட்டளை

அரும்பொருள் விளக்க விசேட விருத்தியுரை

1. மலமாவது

மலமென்பது:—தொன்று தொட்டுவந்த பிறவிகள் தோறும் சேர்த்துத் திரட்டிய அசுத்தாதி வாசனைகளாம். மற்றும் அது திடபாவனையால், முன்பின் எண்ணமில்லாமல் உண்டாகும் குரோதாதி அந்தக் கரணங்களது சூட்சுமா வஸ்தையின் சம்ஸ்காரம்.

இன்னும் இது பதார்த்தவஸ்து ஞானத்தினாலே வெளிப்படுத்தப்பட்டதாயும், அந்தப் பதார்த்தத்தை அனு சரித்ததாயும், சித்தத்தினது உற்பத்திக்குக் காரணமாயும் உள்ளது.

இவ்வாறு புகன்றதில், தேக வாசனை, உலக வாசனை, சாஸ்திர வாசனை, அசுர வாசனை என நான்கு வகைகளுண்டு. அவைகள் முறையே தேக வாசனையானவை-அழகு, ஆயுள், ஆரோக்கியம் என்னும் மூன்றினை உடைமையாக வுடையது. அழகென்பது - பீதாம்பராதி வஸ்திரங்களினாலும், பொன் னாதி ஆபரண வகைகளினாலும், தேகத்தை அலங்காரஞ் செய்துகொள்ளுதலாம். ஆயுளென்பது-கற்பாதி ஔஷ தாதிகளினாலும், அறுவகைய சுவைகொண்ட உணவாதிகளி

யென்பதன் பொருள் என்னையெனில், தம்மேல் மோகங் கொண்டவனைப் பற்றுதலும், அபிமானத்தை மேன்மேல் எழச் செய்தலுமாம்.

மேலே சொன்ன இவ் வாசனைகளானவை, ஒரு மயிர் நுனிப் பிரமாணத்தில் பதினாயிரத்தில் ஒரு பகுதியதாய் மிகவும் சூக்குமமாய்க் கண்டத்தினில் அஹிதை என்னும் நாடியில் பொருந்தி அடங்கியிருக்கிறது. இவைகள் நோக்கின் ரஜோகுண தமோகுணங்களின் அமிசமாகி நிற்பவை. இந்த நான்கு வாசனைகளும் நீங்கவேண்டுமாயின், நிஷ்காமிய கர்மங்களைத் தெள்ளிய மனவமைதியோடு செய்தல்வேண்டும். நிஷ்காமிய கர்மத்தைச் செய்யாராயின் அவர்களை மேலே சொல்லியதாகிய அபிமானாதிகள் அகலா தென்பதாம்.

2. விட்சேபம்

விட்சேபம்:—ஒரு சத்தி; அது சுருங்கி விரியத்தக்கது. ஒன்றை சொல்லத்தொடங்கி வேறு ஞாபகத்தால் சொல் லாமல் விடுதல். பொய் என்று ரூபித்தல் முதலிய பொருள் களைத் தருவதாம். இது மனமானது விஷயாதிகளிற் சென்று ஒரு நிலைபெறாமல் எப்போதும் சலித்துக்கொண்டே யிருக்கும். இச் சலனமற்று ஒரு நிலைப்படவேண்டுமாயின், அதற்கு மூர்த்தி உபாசனை செய்வதனாலும், ஈச்சுவர நாமங் களை இடைவிடாமல் உச்சாரணம் செய்வதாலும், அஜபா மந்திரத்தைக் கடைப்பிடிப்பதாலும், குருவினிடம் சேவை செய்வதாலும், குருவின் தியானத்தாலும் அதனை நீக்கிக்

ஞலும், தேகத்திற்குப் பலவீனம் வராமலும் ஒளி குறையா மலும் போற்றி வளர்த்தல். ஆரோக்கியமென்பது—புஷ்பம், சந்தனம், வனிதாதி விஷயங்களினுல் தேகத்தின்மாட்டு ஆரோக்கியாதிகள் குறையாமல் வைத்துப் போற்றி வருதல்.

உலகவாசனை:—உலகின் கண்ணுள்ள மக்கள் அனை வரும் தம்மைப் புகழ்ந்துகொள்ள வேண்டும் என்கிற கொள் கையும், பகைவரேயாயினும் தம்மை எவ்வாற்ருனும் நிந்தனை செய்யாமல் இருத்தல்வேண்டும் என்கிற பெருமிதமுமாம். உலகம்-மக்கள், பெரியோர் என்ற பொருளில் வந்ததாம். வாசனை-போற்றல்.

சாஸ்திர வாசனை:—ஆத்மஞான சாஸ்திரங்களில் ஆராய்ச்சி செய்வதைவிட்டு, இதரமான சாஸ்திரங்களை யெல்லாம் ஒருங்கே கற்றுப் பண்டிதராகிப் பரிமளிக்க வேண்டும் என்னும் சிந்தனையைச் சதா மனதில் கொண்டிருத் தலாம். சாஸ்திரவாசனை-சாஸ்திராதிகளில் தமக்குண்டான மனநிலை.

அசுர வாசனை:—இது, ஆடம்பரம், கர்வம், அகங்காரம், மமகாரம் முதலியவைகள். இவைகள் பெரும்பாலும் சூர பதுமன், இராவணன் முதலியோரைக் குறிப்பிடத்தக்கது. அவர்கள் செய்தற்கரிய தவங்களைச் செய்தவர்களாகவிருந்தும் மேலே சொல்லியவைகளினுலே கெட்டொழிந்தனர். அசுர வாசனை-கெட்டவைகள் செய்ய இடந்தருமவைகள். வாசனை

கொள்ளலாம். இவ் விட்சேபம் அப்பால், நானே கர்மத்தைச் செய்பவன், நானே கர்மகம் என்றும் சொல்லப்படுவது.

3. சாதன சதுஷ்டயம்

சாதன சதுஷ்டயம்:—இன்றியமையாத நான்கு வகையதான துணைக்கருவிகள், அவை:—நித்தியா நித்திய வஸ்து விவேகம், இகமுத்திரார்த்த பரபோகவிராகம், சமாதி சட்க சம்பத்து, முமுக்ஷுத்துவம் ஆகிய கருவிகள் நித்தியா நித்திய வஸ்து விவேகம்-பிரமமே நித்திய வஸ்து, மற்ற ஜகத்து முழுவதும் அநித்திய வஸ்துவென்று அறிதல் இவ்வாறு அறிவதற்கு ஏதுவாக விருப்பது சித்தசுத்தி. நித்தியம்-அழிவில்லாதது. அநித்தியம்-அழிவுடையது. வஸ்து விவேகம்-பொருளை அறியும் அறிவு. இகம்-இம்மை. ராகம்-ஆசை. விராகம்-ஆசையில்லாமை. பரலோகம்-மறுமை. சமாதியென்பது, சம + ஆதியெனப் பிரிவுபட்டு நிற்கும்; மூன்றுஞ் சாதனமானது, சமதமாதி சிறந்த குணங்களையுடைத்தாயிருத்தலினாலும், அறுவகைய சம்பத்துக்க ளென்பனவாம். முறையே அவைகள்,

(1) **சொரூபம்:**—பிரமம் ஒன்றே சத்தியம். மற்றைய சீவ ஈச்சுர சகத்துக்கள் எல்லாம் அசத்தியமான தென்று சாத்திரங்களின் வாயிலாக விதி நிஷேத வாக்கியங்களைக் கொண்டு நிச்சயிக்கிறது.

(2) **காரியம்:**—சாத்திர வாயிலாக நித்தியம் இன்னது, அநித்தியம் இன்னது என்று நிச்சயித்ததைச் சதா சிந்தித்துக் கொண்டிருத்தலே காரியமாம்.

(3) **அவதி:**—எல்லை; அதாவது-நாமரூப வடிவங்கள் யாவும் அநித்தியம்; அவைகள் இன்றியது நித்திய மென்று நிச்சயித்தது எவ்வாற்ருனும் நீங்காது நன்ருய்த் திரட்டப் பட்டிருப்பதே அவதி யென்பதாம். நாமரூப வடிவங்கள் யாவும் அநித்தியம். அவையின்றியது நித்தியமென்று நிச் சயித்தது எவ்வாற்ருனும் நீங்காது நன்ருய்த் திடப்பட் டிருப்பதேயாம்.

4. இகமுத்திரார்த்த பரபோகவிராகம்

இகமுத்திரார்த்த பரபோகவிராகம்:—இந்த உலகத்திலும் சுவர்க்கம் முதலிய பரலோகத்திலு முள்ள விஷயங்களில் ஆசையில்லா திருத்தல்.

இவ்வாசைகள் உண்டாவதற்குக் காரணமாக நின்று துணை செய்வது, இவ்வுலகின்கண்ணும் மேலுலகின் கண்ணுமுள்ள மாதராசை முதலியவைகளா லெழுவதாகிய, அசுத்தம், துக்கம், அந்நியத்துவம் முதலானவைகளை விசா ரித்து அவற்றின் உண்மையான நிலைமை தெரிந்து அவற்றில் வெறுப்புடையவனுதல், பல வகைய போகங்கள் இருக்கை யில், கண்டு ஸ்திரீ சம்பந்தம் கீழ்ப்போன பிறவிகளிலும் அதிக மாதலினுலும், மாதர்களிடத்தில் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், மைதுனம் என்னும் இவ்வாறு விஷயங்களை அடையப்படுவதாலும், ஒருகாலத்தில் ஒருங்கே இவ்வாறு விஷயங்களையும் அடையச்செய்யும் ஸ்திரீ மற்ற விஷயங் களைக் காட்டிலும் பிரபலமாக விருக்கிருள். அப்படி பிரபலம்

பற்றி ஸ்திரீயை வெறுத்தல் நலமெனக் கூறப்பட்டது. படவே, மாதராசையை விட்டவன், மற்ற வாசையை எளி தில் விட்டு விடுவான் என்பது பெறப்பட்டது. இதனை,

“பாரியை யுடையோன் யாவ
னவனுக்கே பற்றும் போகம்
நாரியை யில்லா தாற்குப்
போகத்தி னலமெங் குண்டாம்
காரிகை தன்னை நீங்கிற்
கருத்துறு சகத்து நீங்கும்”

என்று ஆன்றோர் கூறியதினாலும் உணரற்பாற்றும். ஆகவே, இதர விஷய போகங்களுக் கெல்லாங் காரணமாயிருக்கும் ஸ்திரீயினிடத்தில் அதிக வெறுப்பு இருக்கவேண்டு மென் பது சித்தாந்தமாயிற் றென்க.

சொரூபம்:—தன்மையினை உள்ளபடி யறிதல். அந்த விஷயங்களின் உண்மையைச் செவ்வனே உணர்ந்து, அவை களை நாய் தின்று கக்கின உணவு போலவும், காலாக்கி நரகம் முதலானது போலவும் கண்டு வெறுத்துவிட வேண்டியது.

காரியம்:—எந்த விடயாதிகளில் வெறுப்பு கொண்டு விட்டு விட்டோமோ, அவைகளில் மீண்டும் அவாவைச் செல்ல வொட்டாமற் றடுத்திருத்தல்.

அவதி:—யாண்டு யாண்டு நாமரூபமுண்டோ, ஆண் டாண்டுத் துக்க முண்டென்று காண்டல் கருதல் உரைவாயி லாகலால் உணர்ந்து, நாம ரூபமுள்ள விடங்களை யெல்லாம் நரகமாகக் காண்டலாம்.

பிரம்ம நிர்ணயம்



சிவ
சைதன்யம்.
சத்தி
சுத்தப்பிரமம்.
பிரமசன்
பாசுமான
அஞ்ஞானம்
சிவகாரண சரீரம்
ஆவாணசத்தி
ஈஸ்வரன
விஷ்ணு
ருத்திரன்
பிரம்மா
மூக்குணமுள்ள
விட்சேபசத்தி
சத்துவம்
ரஜசு
தமசு
ரஜசு
மா. க
உள்ளம்
மனம்
புத்தி
சித்தம்
அகங்

5. சமாதிஷட்க சம்பத்து

சமாதிசட்க சம்பத்து:—சமம், தமம், உபரதி, திதிக்ஷா, சிரத்தை, சமாதானம்; இவ்வாறுகளுடன் கூடியிருப்பது. இவைகள் மோக்ஷத்தில் இச்சையுள்ளவன் அநுசரிக்க வேண்டியவைகள். இதனை,

"ஈதுமெய் யீதுபொய்ம்மை யெனும்வத்து விவேகமெய்திப்
பூதலத் தாசைமேலைப் புவனத்தி லாசை போக்கிச்
சாதுநற் சமமே யாதி சட்குண தரனாய் மீளா
மோதுவெங் கலியை மாய்ப்பன் முத்தியில் விருப்ப முற்றான்"

என்றதுங் காண்க.

இதில், சமத்தை, சாந்தியென்றும், தமத்தை, தாந்தியென்றும், உபரதியை, விடுதலென்றும், திதிக்ஷையை, சகித்தலென்றும், சமாதானத்தை, சமபுத்தியுட னிருப்பதென்றும், சிரத்தையை, பூரண விசுவாசமென்றுங் கொள்ளுதல் வேண்டும்.

மேலே சொன்னவற்றுள் முதலாவதான சமம்-மனதை வேதாந்த விசாரத்தில் அழுந்தும்படிச் செய்வது. இதனையே மனோ நிக்கிரகம் செய்தலென்பர்.

தமம்:—பாக்கிய இந்திரிய நிக்கிரகம்; அதாவது-சுரோத்திராதி ஞானேந்திரியங்களைந்தும், வாக்காதி கர்மேந்திரியங்களைந்தும் விஷயங்களைப் பின்பற்றிக் கவராமல் இருத்தல்.

உபரதி:—ஈடணாத் திரயத்தியாக பூர்வக சர்வ கன்ம சந்நியாசமாம். ஈடணாத்திரயம் - மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை யென்பவை.

திதிக்ஷ:—சுகதுக்கங்களை ஒன்றாகவே எண்ணுதல். அதாவது-சுகமுண்டாகுங் காலத்தில் அதிகமாகச் சந்தோஷ மடையாமலும், துக்கமுண்டான காலத்தில் அதிகமாகத் துக்கமடையாமலும் ஒருபடித்தாய் இருத்தலுமாகும். இதனைச் சமத்துவ மென்பதாம்.

சமாதானம்:—சடேந்திரியங்களைச் சிரவணத்தில் நிலை யுறப் பதித்தல். அதாவது-வேதாந்த தத்துவஞானிகளாகிய பெரியோரிடத்தில் சேர்ந்து சிரவணஞ் செய்கையில், கண்ட வாறுதிரிபும் மனதைப் பாக்கிய இந்திரியங்களிற் செல்லவொட்டாமற் றடுத்துச் சிரவணத்தின் பேரிலேயே ஏகாக்கிர சித்தமாக நிலைபெறச்செய்வது.

சிரத்தை:—குருவினிடத்தும் வேதத்தினிடத்தும் தாய் தந்தையரிடத்தும் உண்டாகிய விசுவாசம். இதில், குருவிடத் தும் வேதத்திடத்தும் உண்டாகும் சிரத்தையானது, பக்தி யெனக் கொள்ளுதல்வேண்டும். தாய் தந்தையரிடம் உண் டாகும் சிரத்தை, அன்பு எனக் கொள்ளுதல்வேண்டும்.

விசுவாசம்:—மகா விசுவாசம்; சத்குரு, வேதாந்தம், இவற்றினில் ஓடுமனத்தைப் பொருந்தும்படியாக நிறுத்து வது. "அன்பே சிவம்" என்கிற திருமந்திர வாக்கியம்

காண்க. இதற்குக் காரணமாவது - இயமமும் நியமமு மாகியன.

சொரூபம்:—விடத்திலே பிரவிருத்தியற்று இருக்கிற சித்தநிரோதம்; அதாவது - சர்வேந்திரிய வர்க்கம் நஷ்டம் அடைந்து மனோ நாசமாகுதல். மனம் ஒடுங்குதலுமாம். இதற்கு, அமநஸ்கம் எனப் பெயர் கூறுவர். அவாவின்றி விஷயங்களைப் பற்றற விடுதலுமாம்.

காரியம்:—ஒன்றிலேயும் பிரவிருத்தியற்ற படியினாலே விவகார வெற்றியாம்; அன்றி, விஷயவாகார க்ஷயமே காரிய மாதலாம்.

முமுட்சுத்துவம்:—மோக்ஷ விருப்பத்திற்கு முமுட்சுத் துவம் என்று பெயராம். மோக்ஷமாவது-பிரமத்தை அடை தலும், துக்க நிவிர்த்தியுமாம். இது, சுபேட்சை, விசாரணை, தனுமானசி ஆகிய பூமிகளை முறையடைதல்.

முமுட்சுத்துவத்திற்கு ஏது:—சாதுசங்கப் பழக்கம் இல் லாதபோது அத்தியந்த துக்க நிவிருத்தியும், தடையற்ற ஆனந்தமுமாகிய மோக்ஷத்தின்கண் தீவிரவிச்சை வுண்டாகா மையின் சாதுசங்கப் பழக்கமே முமுட்சுத்துவத்திற் சிறந்த காரணமாக நிற்பதென்க.

சொரூபம்:—மனைவி மக்கள் அர்த்தம் இவைகளில் சிறி தேனும் இச்சை இல்லாமல், மோக்ஷ மாத்திரத்திலுள்ள விச்சையே சொரூபமாகும்.

காரியம்:—ஆனநற் கல்வி, அறிவுடைமை, வயிராக்கிய மாதிகளையுடைய பிரமநிஷ்ட குருவை அடைதலே காரிய மாகும்.

அவதி:—குருவிற்குச் செய்யுந் தொண்டு ஒன்றையே கைக்கொண்டு மற்றக் கருமங்களையெல்லாம் விட்டு விடலே அவதியாம்.

பலம்:—புண்ணியலோக மடைதலே பலமென்க. இவ் வாறு சொல்லிய நான்கு சாதனமும் ஒருமித்துக் கூடியிருந் தால் இங்குத்தானே விரைவினில் ஆன்மவிசாரமே இதற்குத் தக்க பலமென அறிந்துணர்வையாக.

6. அசாத்திரப் பிரபஞ்சம்

அசாத்திரப் பிரபஞ்சம்:—இது, தீவிரம், மந்தம் என இரண்டுவகை. இவ்விரண்டில் தீவிரம், காமம், குரோதாதி கள். மந்தம்-மனோகற்பிதசாதி கன்மாதிகளேயாம். இந்த அசாத்திரப் பிரபஞ்சமான ஆன்ம சாக்ஷாத்காரத்திற்கு விரோதமானதால் இவற்றை ஞானப்பியாஸம் செய்வதன் முன்பே விடுதல்வேண்டும்.

7. விதி நிஷேதம்

விதி நிஷேதமாவது:—சாத்திரங்களில் இதைச் செய்; இதனைச் செய்யாதே என்று வரையறுத்துக் கூறியுள்ளன. அவ்வாறு கூறியுள்ளவற்றைச் செய்தலே விதியாம். சாத் திரங்களில் செய்யாதே என்று சொல்லியிருக்கும் பாவங் களைச் செய்யாமல் இருத்தலே நிஷேதமாம்.

8. தாபத்திரயாக்கினி

தாபத்திரயாக்கினி:—இது செய்தவனைத் தபிக்க விடுகிற மூவகைய கன்மங்களாம். அவை - ஆத்யாத்மீகம், ஆதி பௌதிகம், ஆதி தெய்வீகம் என்பன.

இதற்றுள், ஆத்யாத்மீகமாவது - அரசர்களினாலும், மிருக வர்க்கங்களினாலும், பறவைக் கணங்களினாலும் நேரிடும் துன்பம்.

ஆதி பௌதிகமென்பது-பிருதிவி முதலிய பூதங்களி னால் நேரிடுந் துன்பம்.

ஆதி தெய்வீகம்:—தேவதைகளினால் வருந் துன்பம். மற்றும் அந்தக் கரணாதிகள், ஞானேந்திரியங்கள், கன்மேந் திரியங்கள் இவைகளால் வரும் துன்பங்களுமாம். இவை களைத் தன்னைப்பற்றி வருகின்ற துன்பமெனவும், பிறவுயிர் களைப்பற்றி வருகின்ற துன்பமெனவும், தெய்வத்தைப்பற்றி வருகின்ற துன்பமெனவும் பிரித்துச் சொல்லுவதுவுமுண்டு. ஆதி பௌதிகத்தின் தேவதைகளே ஆதி தெய்வீகமாம். இதனையே, ஞாதுரு, ஞானம், ஞேயம் என்கிற திரிபுடி என்பர்.

9. விதிவது பசனத்துவமாவது

விதிவது பசனத்துவமாவது:—சற்குரு சிஷ்யருடைய மத் தியில் யாதாமொரு அதிகாரி, தாபத்திரியாக்கினியின் வன் மையிலகப்பட்டு வருந்தி மனம் கரைந்து வெம்பி வியாகூல

சித்தனுய், நான் யாரோ?, எனக்கு இந்தச் சம்சாரம் எக் காரணத்தால் வந்து சூழ்ந்ததோ? இது யாவர் முகத்தால் நிவிர்த்தி அடையுமோ என்று விசாரணைபுரிந்து சகல பிரபுத் துவமும்விட்டுப் பத்திரம் புஷ்பம் பலம் முதலியனகொண்ட கரமுடையவனுகி, தசாவஸ்தைகளுண்டாய்த் தேகம் மயிர்ச் சிலிப்புடையவனுய் வித்தியா வினய வைராக்யாதி சர்க்குண சம்பன்னராய் ஸ்ரீ பரம சீலத்வமுடைய குருவை அடைதல்.

10. அஷ்ட மந்திரம்

சைதந்நியம் ஶாஶ்வதம் ஶாந்தம்
வியோதீதம் நிரஞ்சநம்
நாதபிந்து கலாதீதம் தஸ்மை
ஸ்ரீ குரவே நம:

இதில், குருவினைச் சைதன்னியப் பொருளெனவும், அழியாப் பொருளெனவும், சாந்தக் கடலெனவும், ஆகாயத் திற்கும் மேம்பட்டவனெனவும், குற்றமற்ற நாத பிந்து கலாத ஸ்வரூபியானவனெனவும் வணங்கிப் போற்றியதாம்.

11. அஷ்டாங்க பஞ்சாங்க சாஷ்டாங்கம்

இது, நமஸ்கார வகைகள் கூறினது. அஷ்டாங்கம்- எட்டுறுப்புக்கள் நிலத்தில் படிய வணங்கல். பஞ்சாங்கம்- ஐந்துறுப்புக்கள் பூமியிற் படிய வணங்கல். சாஷ்டாங்கம்- எல்லா உறுக்களுந் தரணியில் தண்டத்தையொப்ப விழுந்து படிந்து வணங்கல்.

இவை முறையே, இரண்டு கரங்களும், இரண்டு பாதங்களும், இரண்டு தோள்களும், மார்பும், சிரசும் பூமியிற்றோய வணங்கல். பஞ்சாங்கம் - இரண்டு பாதங்களும், இரண்டு கரங்களும் சிரமும் பூமியிற்படிய நமஸ்காரஞ் செய்தல்; இந்த நமஸ்காரம் மிகுதியும் பெண்களுக்கேயாவது. சாஷ்டாங்கம் - தடியைப்போற் றரையில் விழுந்து நமஸ்கரித்தல்.

12. பணிவிடை நான்கு

இவைகள், ஆப்தம், அங்கம், தானம், சத்பாவம் என நான்குவகை. ஆப்தமென்பது - குருவிற்கு அநுகூலமாகிய காரியங்களைச் செய்தல். அங்கமென்பது - குருவிற்கு பாத சுசுரூஷையாம். தானமென்பது-குருவினுடைய மனை நிலம் முதலானவைகளைச் சிறிதும் பழுதுபடா வண்ணம் காத்தல். சற்பாவம்-குருவைச் சாட்சாத் இறைவனெனக் கருதுதல்.

13. ஜீவ காருண்ணியம்

ஜீவ காருண்ணியம்:—பிற வுயிர்களின்மேல் அருள் பாலித்துக் காத்தல். அவை-பிற வுயிரைக் கொலை செய்யாமை, இம்சை கொடாமை, குருவசனத்தை மறவாமை முதலியவைகள்.

14. ஈசுவர பக்தி

மனம், வாக்கு, காயம் என்கிற திரிகரண சுத்தமாய் எங்கும் பிரகாசமாய் விளங்கும் இறைவனிடம் மனத்தை நிலையுறும் வண்ணம் வைத்தல்.

15. பாச வைராக்கியம்

பாசம்:—அன்பு; இச்சை; இது பூதப் பிரதி பந்தம், வர்த்தமான பிரதிபந்தம், ஆகாமியப் பிரதிபந்தம் என்பன வாம். பிரதிபந்தம்-தனக்கு வேருக நின்று பந்திப்பது; தடை. இவை முக்காலத்திலும் நடை பெறுவன வாதலின் விரியுமென விடுத்தனம். வைராக்கியம்-வனிதாதி வஸ்துக் களில் தோஷ புத்தியை யுண்டாக்குதல்; அது காரணமாக நிகழ்கால பிரதி பந்தத்தைக் கெடுத்துப் பிரமலோக பரி யந்தம் நிரணமாக எண்ணுதல். தியாகஞ் செய்யும்; இச்சை; அல்லது இச்சையில்லாமை.

16. பிரம ஞானம்

தனக்கு மேலாக வேறொரு பொருள் இல்லையென்றும், தானே எங்கும் நிறைந்தவனென்றும் அறிதல். மற்றும் எது ஞான வடிவமாய்ச் சகல கடாதிப் பிரபஞ்சங்களை அறி கிறதோ, எதை அந்நியமாகிய மனம் முதலிய அந்தக் கரணங்களும் இந்திரியாதிகளும் அறியமாட்டாவோ அதுவே ஆன்மஸ்வரூபம்; அதுவே பரிபூரணனந்தம் என அறி வது. இவ்வாறு அறிவதன்றி, நான் சின்மாத்திர ஸ்வரூப னென்பது.

17. சற்குண சம்பன்னர்

சற்குண சம்பன்னர்:—எல்லா நற்குணங்களும் பூரணமாக நிறைந்தவர்; அவை-ஞானம், வைராக்கியம், பலம், ஐசு வரியம், கீர்த்தி, சம்பத்து (ஸ்ரீ) இவைகளாறுமாம்.

18. சற்குரு

சாதகரான சிஷ்யர்களுக்கு உபதேசஞ் செய்யும் அதிகார பேதம் பற்றிக் குரவர், போதககுரு, வேதககுரு, நிகிதகுரு, காமியகுரு, சூசககுரு, வாசககுரு, காரககுரு, விகிதகுரு எண்வகைப்படுவர். ஈண்டு ஆறு நற்கல்வி அறிவு அடக்க மாதி யுடையவராய் ஜீவப்பிரம்ம ஐக்கியத்தை நிச்சயத்தால் ஆத்ம ஞானத்தில் நிலைத்தவராய்ச் சிஷ்யனுடைய புத்தியிற் றோன்றும் ஜீவேசுவரபேதம், ஜீவர்களின் பரஸ்பரபேதம், ஜீவஜடபேதம், ஈசுரஜடபேதம், ஜடஜடபேதம் என்னும் ஐவகைய பேதங்களையும் நானாவித யுக்திகளாற் கெடுப்பதிற் சமர்த்தாயிருப்பவர். இதனை,

"கறையுறு பிறவிவெங் கடலு ளேவிழுந்
தயர்வுறு துயருழந் தவரை யோவென
விரைவொடு வினைகெட நோக்கி வேதகக்
கரையினை யருள்பவன் கருணை நன்குரு."

என மெய்ஞ்ஞான விளக்கத்திலும்,

சற்குருவைப் போற்றுமற் சற்குருவைச் சாற்றுமற்
சற்குருவைச் சந்ததமுஞ் சாராமற—சற்குருவை
நின்று தரியாம னீள்பிறவி நீங்கிடுமோ
மன்று சிதம் பரதே வா"

என்ற குரு நமச்சிவாயர் பாடலுங் காண்க.

பிரமசரியம்:—கற்று விரதங்காத்து விவாகமின்றி யிருக்கும் நிலை; இது, காரணவாயிலாக, காயத்ரீ, பிரஜாபத்தியம், வைதிகம், நைட்டிகம் என நான்கு உட்பிரிவினை யுடையது.

கிரகஸ்தன்:—இல்லொழுக்கத் திருப்பவன், சங்கையுள்ளவன், நிருவாகி, இது வார்த்தா விருத்தி, சாலீன விருத்தி, ஆயவரன், கோரன்யாசி ஆகிய விருத்தி நான்கினை யுடையவன்.

வானப் பிரஸ்தன் :—ஔதும்பரன், கேகஸன், சம்பிட்சாளீ, பௌரமணன் என நான்குவகைப் பிரிவினை யுடையவன்.

சந்நியாசி:—குடீசகன், பகூதகன், அம்சகன், பரமஹம்ஸகன் என நான்கு வகைப் பிரிவுடையவன்; இவைகளின் விரிவை தர்ம சாத்திரங்களினுல் அறிக.

19. விவர்த்தம்

விவர்த்தம்:—திரிவு; அது மூன்று வகையாம். அவை, ஆரம்போதானம், பரிணமோபதானம், விவர்த்தோபதானம் என்பன. ஆரம்போதானம் என்ற தொடர்மொழி; ஆரம்பம்+உபாதானம் எனப் பிரிந்து, முயற்கு முதற்காரணம் எனப் பொருள். பரிணமோபதானம்-வேறுபாட்டின் துணைக் காரணம். விவர்த்தோபதானம்-திரிவின் முதற்காரணம். மேலே சொன்னவைகளை உதாரணவாயிலாக மெய்ப்பித்துக் காட்டல்.

(1) துணிக்குநூல்—ஆரம்போதானம்.

(2) தயிருக்குப்பால்—பரிணமோபதானம்.

(3) கயிற்றினிடத்தில் பாம்பென்ற தோற்ற முண்டாகிறது; ஆனால் உண்மைநோக்கில் அக்கயிறு பாம்பு ஆகவுமில்லை. கயிற்றில் பாம்பும் இல்லை. அப்படியுண்டான தோற்றம் தப்பாக இருந்தாலும் பிரமை குடிகொண்டிருக்கிறவரையில் உண்மையாய்ப் பாம்பு என்றே நம்பப்படுகிறது. இவ்வாறுண்டான மயக்கத்திற்கு ஆதாரம் கயிறுதான். ஆகையாலே கயிறு விவர்த்தோபாதானம்.

ரிபு கீதையிலுள்ள உபமான உபமேயம்

1 மலடிமகன்போல.
2 பரியின் கோடுபோல.
3 மனுடக் கொம்புபோல.
4 கானல் நீர்போல.
5 கந்தர்வ நகர்போல.
6 ககன நீலம்போல.
7 சுத்தியில் ரசிதம்போல.
8 ரச்சு சற்பம்போல.
9 ககன குசுமம்போல.
10 அக்கினிப் பிரகாசம் துன்றுவது.
11 இருளினால் சித்ரதீபம் குன்றுவது.
12 விருட்சம் வித்தில்லாமல் உண்டாவது.
13 அரம்பக் கட்டையினால் பாகசித்தி யுண்டாவது.
14 அதிமூடனுக்குக் குறைவில்லாச் சுகம் உண்டாவது.
15 அறிவுடையோர் மனதை அஞ்ஞானி அறிவது.

16 இன்று பிறந்த குழந்தை பாகசித்தி செய்வது.
17 இன்று பிறந்த குழந்தையின் சேர்க்கையால் போக சுகம் உண்டாவது.
18 புழுதியால் சிந்துநீர் சுவருவது.
19 ஆதித்தன் சந்நிதியில் அந்தகார மிருப்பது.
20 இரசத்தினுல் இரும்பு சுவர்ணமாகாது போவது.
21 மறித்தோன் பிழைப்பது.
22 வனாந்தரத்தில் போனகம் கிடைப்பது.
23 பசுவில் கரந்தபால் மறுபடியும் முலைக்கண்வழி யேறுவது.
24 கடைந்தமோர் பாலாவது.
25 மஹா மேருவைத் தாமரைநூலால் அசைப்பது.
26 வாரியைத் தரங்கத்தால் பிணிப்பது.
27 கூர்ம ரோமத்தால் மத்த மாவைப் பிணிப்பது.
28 உசுவாசத்தினுல் ஓங்குஞ் சைலம் அசைவது.
29 மஹாமேரு பத்மவிதையி லொடுங்குவது,
30 வன்னி இடத்தில் பதுமமுண்டாகி வளர்வது.
31 சிறு மசகம் சிங்கத்தைச் சங்கரிப்பது.
32 வண்டு மேருவைக் கனியைப்போல் உண்டுமிழ்வது.
33 அணுவின் உதரத்தில் அனந்தகோடி பிரமாண்டங்கள் இருப்பது.
34 கனவில் கண்டபொருள் நனவில் இருப்பது.
35 விரைவான கதியின் வேகம் நலியாதிருப்பது.
36 பிறவிக் குருடனுக்கு மணியின் நேர்மை தெரிவது.
37 வருத்தவிதை விருக்ஷத்துக் கேதுவாவது.
38 முயற் கொம்பினுல் மதமாதங்க முயிர் நீங்குவது.

39 தரித்திரன் செல்வவந்தனின் பதத்தை அடைவது.
40 அன்னத்தைப்போல் காகம் நடப்பது.
41 சிங்கத்தோடு வேசரி சண்டை செய்வது.
42 இந்து சம்பந்தமின்றி ராகு வெளியாவது.
43 மலடிக்குக் கருவுண்டாகி அதற்கு நாமமுண்டாவது.
44 நபுஞ்சகனுக் குரிய மைந்தனுண்டாவது.
45 நபுஞ்சகருக் குரிய மைந்தனுண்டாவது.
46 கனகத்தின் விந்துவினால் சிங்கமுண்டாவது.
47 கனகத்தால் சாகரநீர் பருகப்பட்டுப் பெருக்கறுவது.
48 தாருசிலை அன்னம் புசிப்பது.
49 ஆகாயம் ஜனங்களின்மேல் விழுவது.
50 பெரிதாகிய ஆகாசம் பூமியில் விழுவது.
51 விண்மலரைச் சூடிக்கொண்டு வேசியைச் சேர்வது.
52 ககனத்தைக் கயிற்றினால் சுருக்கிப் பிணிப்பது.
53 ககனத்தின் பிரதிபிம்பம் மெய்யாவது.
54 மேடத்தின் வயிற்றில் யானை பிறப்பது.
55 மஹாசேருற்ற புவியில் யாரும் நடப்பது.
56 முகூர்த்தத்தில் நிகழ்வு மிகும் பிரதிபிம்பம் நிலைபெற்றிருப்பது.
57 திகழ் கனவில் பஞ்சு சாம்பலாகா திருப்பது.
58 மூடருக்கு மேலான வஸ்துவின் நிலைதெரிவது.
59 அகண்டாகார விருத்தியின்றிப் பரப்பிரம்மம் திகழ்வது.
60 அகண்ட ஞானமின்றி மோக்ஷமுண்டாவது.
61 அத்துவித சுருதியின்றி மற்றச் சுருதியால் பொருளாவது
62 வஸ்து ஞானமின்றி மற்ற ஞானத்தால் பாவம்நீங்குவது.

63 உத்தம யோகமின்றி உளம் அசையா திருப்பது.
64 பரமசிவம் கருணையன்றி போகமோக்ஷம் கிடைப்பது.

20. பிரபஞ்ச வொடுக்கம்

பிரபஞ்ச உற்பத்திக் கிரமத்தில் கடைசியிலுற்பத்தி யானவைகளாகிய பஞ்சீகிருத ஸ்தூல பூதங்களாகிய தேகேந்திரிய அந்தக்கரணாதிகளை அபஞ்சீகிருத காரண பூதங்களாகிய தன்மாத்திரைகளில் லயிக்கச்செய்து, அந்தப் பஞ்ச பூதங்களில் பூமியை ஜலத்திலும், ஜலத்தை அக்கினியிலும், அக்கினியை வாயுவிலும், வாயுவை ஆகாசத்திலும், ஆகாசத்தை அகங்கார தத்துவத்திலும், அகங்கார தத்துவத்தை மக தத்துவத்திலும், மக தத்துவத்தை மூலப்பிரகிருதியாகிய அவ்வியக்கத்திலும், அவ்வியக்கத்தைப் புருஷனிலும் லயிக்கச்செய்கிறது. இது முத்திகோபநிஷத் 2-வது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

நாநாஜீவவாதக் கட்டளையின்
விசேடவுரை என்னும் இரகசியார்த்த தீபிகை

சொரூப வணக்கம்

காப்பு-வெண்பா

ஓதுநா நாஜீவ வாதவுய ரொண்ணுகலே
தோதுறுவி சேடவுரை சொல்லவே—யாதுமொளிர்
சத்தியாய்ச் சித்தாய்ச் சதானந்த மாயிலகு
முத்தியாய் நிற்குமதே முன்.

உபாசனுமூர்த்தி வணக்கம்

கலி விருத்தம்

அண்ட வாணற் கசுரற் றடிந்தவன்
தொண்டர் வல்வினை தூரத் துறந்தவன்
புண்டரீக வரைப்பரி பூரணன்
தண்ட பாணிச ரோருகப் பாதமே.

குருமரபின் வணக்கம்

அறுசீர் விருத்தம்

சதுரயுகந் தனில்முதலிற் றனிமுதலே
கபிலதபோ தனராய்வந்து
புதினவிரண் டாமுகந்தத் தாத்ரேய
முனிவரராய்ப் போந்தமூன்றும்

விதிசெயுகந் தனில்வேத வியாசரா
யத்துவிதம் விளங்கநாலில்
அதிதசிவ சங்கரரா யவதரித்த
குருமரபிற் கன்புசெய்வாம்.

குருவணக்கம் அவையடக்கம்

கலி விருத்தம்

சுந்த ரகுரு தூய மலரடி
எந்த னுள்ளும் புறமு மிலகுக
விந்த நூலுக் கியானுரை யோதுவ
தந்தரத்தை யுண்பேனெனு மாமைபோல்.

நாநாஜீவவாதக் கட்டளை

நாநா ஜீவவாதக் கட்டளை என்கிற கிரந்தத்தின் உட்பொருள் விரிவாவது-இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்கிற நான்கினில் மூன்றும் வேதமாகியும், "வேதாநாம் சாமவே தோஸ்மி" என்று மேலாகச் சொல்லப்பட்டன வாயும் உள்ள அச் சாமவேதத்தின் முடிவான சந்தோக்கிய உபநிஷத்தில் எடுத்துக் கூறப்பட்ட, 'தத்துவமசி' என்னும் மகா வாக்கியத்தின் பொருளினைச் சொல்லுவது.

தத்துவமசி யென்பது உபதேச வாக்கிய மாகலின், அது ஏனையவற்றிலும் சிறந்ததாகக் கொள்ளப்பட்டது. அதுதத், துவம், அசி யென மூன்றுவகையாய்ப் பிரிபட்டிருக்கும். தத்-ஈசன்; துவம்-சீவன். அசி-அது நீயாகிறாய்.

நாநாஜீவவாதக் கட்டளை:—நாநா ஜீவவாதம்—பற்பல ஜீவர்களினது விஷயத்தைப் பற்றி வாதித்து ஆணையிடல் என்பது. ஆனால், வேதாந்த சாஸ்திரத்தில் கூறியபடி வாதங்கள் பல வகைகளிருப்பினும், இந் நூலார் ஈண்டு எடுத்துக்கொண்டுள்ள வாதங்கள் எட்டேயாகும். அவை:- அஜாதவாதம், அவச்சேதவாதம், ஆபாஸவாதம், சிருஷ்டி திருஷ்டிவாதம், திருஷ்டி சிருஷ்டிவாதம், ஏக ஜீவவாதம், பிம்பப்பிரதி பிம்பவாதம், நாநா ஜீவவாதம் என்பன.

சிருஷ்டி திருஷ்டிவாத மென்பது:—ஜகத்துப் பூர்வ மிருந்து தான் தோற்றப்படுகிறதெனக் கூறுவது.

திருட்டி சிருட்டிவாத மென்பது:—எப்போது திருட்டியுண் டாகிறதோ அப்போதுதான் ஜகத்துண்டாகிறது, பூர்வ மிருக்கவில்லை யெனக் கூறுவது.

ஏக ஜீவவாத மென்பது:—இந்தச் சேதனு சேதன பிர பஞ்சமுழுவதும் ஒரு ஜீவனுடைய கற்பனை, எப்படியெனில்; சொற்பனத்தில் காணப்பட்ட சேதனுசேதனப் பிரபஞ்சமுழு வதுஞ் சொற்பன புருடனை யன்றி மற்றொரு புருடனால் எப்ப டிக் கற்பிக்கப்படவில்லையோ அதுபோல ஜாக்கிரத்திலுள்ள சேதனுசேதனப் பிரபஞ்சமுழுவதும் ஒரு ஜீவனுடைய கற் பனையெனக் கூறுவது.

பிம்பப் பிரதிபிம்ப வாத மென்பது:—பிம்பத்தைத் தவிர ஆரோபமே யில்லையென்றும் கூறுவது.

நாநா ஜீவவாதமென்பது:—மாயை, அதின் குணம், அதின் காரியமாகிய ஜீவேஸ்வர ஜகத்துக்க ளென்னும் நாநா

ஜீவர்களை யொப்பி ஏக ரூபமாயிருக்கின்ற வஸ்துவைத் தெரிவிக்கிறதற்குச் சோபான (படிக்) கிரமமாயிருக்கின்றதால் நாநா ஜீவவாதம் இன்னும் நான் கர்த்தா, போக்தா, ஞாதாவென்கிற நாநாவித ஜீவபேத வேறுபாடுகளை நான் அகர்த்தா, அபோக்தா, அசங்கன், சின்மாத்திரன் என்கிற தத்துவ ஞானத்தால் வாதித்து ஏக சொரூபமா யிருக்கிற வஸ்துவைத் தெரிவிக்கிறதில் சோபானக்கிரமமா யிருத்தலின் நாநா ஜீவவாதம்.

வாதம் முற்றுப்பெற்றது

சுத்தமாவது:—தெய்வ மருந்துபோலவும், கலப்பில்லாத பால்போலவும், மாயை அதின் குணம், அதின் காரியமாகிய ஜீவேஸ்வர ஜகத்துக்களென்னும் முப்பத்தைந்து தத்துவங் களுக்குள்ள அசுத்தமில்லா திருப்பதுவேயாம்.

அசுத்தமாவது:—சுத்த மின்மை, முப்பத்தைந்து தத்து வங்களுள் சீவனுக்கு அசுத்தம் எவ்வாறுண்டாவ தென்றால், சாதியினடியாகவும், வருணத்தினடியாகவும், ஆச்சிரமத்தி னடியாகவும், தர்மா தர்மங்களினடியாகவும், இவற்றினால் உண்டாகும் பிரயோசனத்தால் அடையும் சுவர்க்க நரகம், அவ்விடங்களை அடைவதால் எஞ்சி நிற்கும் கன்மத்தாலாகிய கணக்கில்லாத இறப்பும் பிறப்புமாகிய கடலனைய சம்சாரத் தில் தொடக்குண்டு அலைவதே அசுத்தமாம்.

ஜாதியாவது:—இடமடியாக வுண்டாவது; அது, மகா ராட்டிரத்தான், கன்னடத்தான், ஆந்திரத்தான், திராவிடத் தான் என்கிற பகுப்பாதி யுடையவை.

வர்ணமாவது:—பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென நான்கு. இந்நான்கு வருணமும் முன்சொன்ன ஒவ்வொரு ஜாதியிலுமுண்டு.

ஆச்சிரமம் 17:—பிரம்மசாரி, கிருகஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசி என நான்கு. இந்த ஆச்சிரமங்களொவ்வொன்றிலும் நான்குவித முண்டு.

ஈசுரனுக்கு அசுத்தம்:—சுத்தப் பிரம்ம பராத்பரனாகிய இறைவனுக்கு உண்டாகிய சுத்த மின்மை, அவன் ஒவ்வொரு சமயவாற்றா லெடுக்கின்ற அவதாராதிகளினாலும், ஒவ்வொரு வாற்றால் கிருபை செய்கின்ற விபவ விசேஷத்தாலும், பஞ்ச கிருத்தியாதிகளை இயற்றுதல் முதலானவைகளா லுண்டாவதாம். மற்றும் இதற்குக் காரணமாவனவற்றைச் சிவானந்த சுவாமிகள் தாம் விரித் தெழுதியுள்ள வியாக்கியான பத்தியில், தான் தோன்றுவதற்கு மாயையே காரணமாகவும், அதிஷ்டான ஆச்சிரய வாபாஸ சங்காதமே சொரூபமாகவும், சிருஷ்டியாதி பஞ்சகிருத்திய நடனங்களே காரியமாகவும், பிரஹ்மாத்ம ஐக்கிய ஞானத்தால் மாயை கெடும்போது பிரம்மத்தில் லயமாகவே எல்லையாகவும், பிரஹ்ம ருத்திர விஷ்ணுவாதி முகூர்த்தங்களாக ஆவிற்பவித்தலே பிரயோசனமாய் இருத்தலாம்.

மாயைக்கு அசுத்தம்:—பிரபஞ்ச முண்டாவதற்குக் காரணமாய்ச் சுருங்குதல் விரிதல் என்றும் சங்கோச விகாசாதிகளைப் பெற்றுச் சத்துவ சம்ஸ்காரமாய்ப் பிரம்மத்திலிடத்தில் உண்மையிற் கற்பிதம் முதலானவைகளாகக் காணுதலே யாம்.

அவித்தைக்கு அசுத்தம்:—அறியாமை, அசுத்த வாசனை, அதிஷ்டானத்தை மறைத்தல். தத்துவ ஞானத்தால் கெடுதல் முதலானவைகளேயாம்.

ஸ்தூலசரீரத்துக்கு அசுத்தம்:—வாதம், பித்தம், சிலேத்துமம்; நவத்துவாரம், ரோமத்துவாரங்களில் மலமொழுகுதல், பிறத்தல், வளர்தல், இருத்தல் பரிணமித்தல் (பருத்தல்) மெலிதல், காலாந்தரத்தில் பிணமாகுதல் முதலானவைகளேயாம்.

சூட்சுமசரீரத்துக்கு அசுத்தம்:—இராகத்துவேஷாதி பதின் மூன்று குணங்கள், துர்ப்பலம், ஊமை, செவிடு, குருடு, முடம் முதலானவைகளேயாம். அதாவது, குருடு, செவிடு, முடம் இவைகளுக்கு அந்த மந்தப் படுத்துவமென்றும் பெயர்.

பதின்மூன்று குணங்களாவன:—இராகம், துவேஷம், காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம், ஈரிசை, அசூயை, டம்பம், தர்ப்பம், அகங்காரம், எனப் பதின்மூன்றுமேயாம். இராகம்-பரதாரம் விரும்பல்.

இராவணன் சீதையை இச்சித்து இராகவனால் மடிந்தது.

துவேஷம்:—பதிலபகாரம் செய்தல்.

இரணியகசிபன் தன் தமயனைக்கொன்ற துவேஷத்தால் நாராயணனை எதிர்த்து நாசம் அடைந்தான்.

காமம்:—ஐஸ்வரியத்தை மென்மேலும் விரும்புதல்.

நரகாசுரன் லக்ஷம் ஸ்திரீகளை விவாகம்செய்ய இச்சித்துப் பதினோராயிரத் தறுநூறு ராஜஸ்திரீகளைச் சிறை பிடித்துவர அவர்கள் வேண்டுகோளின்படி பகவானால் நாசம் அடைந்தான்.

குரோதம்:—தான் சம்பாதித்த பொருளுக்கு விக்கினஞ் செய்தவர்பேரில் சீறுதல்.

பகாசுரன் தனது புசிப்புக்கு விக்கினஞ்செய்த பீமராஜனைச் சீறி அவனால் நாசம் அடைந்தான்.

உலோபம்:—ஒருவருக்கும் ஈயாமை.

துரியோதனன் பாண்டவர்களுக்கு வசித்திருக்கக்கூட ஓர் வீடும் கொடுக்கமாட்டேனென்றதால், அவன் நாசம் அடைந்தான்.

மோகம்:—பிரியம், மோதம், பிரமோதம், நினைத்தல், கிடைத்தல், அனுபவித்தல், தனதான்ய புத்திர விருப்பம்.

தசரதன் இராகவன்பேரில் பெரும் பிரியத்தால் அவன் காட்டிற் செல்லத் தான் நாசம் அடைந்தான்.

மதம்:—கிருத்தியம், அகிருத்தியம் தெரியாமை.

கார்த்த வீரியார்ச்சுனன் நாரதபகவானை உபசரியாததால் பரசுராமனால் நாசம் அடைந்தான்.

மாற்சரியம்:—தன் செவ்வத்தினும் மற்றவன் அதிகம் பெற்றால் பொறாமை.

சிசுபாலன் தருமராஜன் செய்த ராஜசூய யாகத்தில் பகவானுக்குச் செய்த பூஜையைச் சகியாமல் பொறாமையால் நாசம் அடைந்தான்.

ஈரிசை:—பிறர் துன்பமடையவும் தான் அத்துன்ப மடைய லாகாதெனவும் விரும்பல்.

அருணுக்ஷதன் தனக்குவந்த துன்பம் தன்னிஷ்டனுன வாணுசுரனுக்கு வரட்டுமென்று நினைத்ததால் தான் நாசம் அடைந்தான்.

அசூயை:—தனக்குவந்த சுகம்போல் பிறர்க்கு வரலாகா தென்பது.

பௌண்டரீக வாசுதேவன் என்ற பெயரிருப்பதுபற்றி பகவானேடு எதிர்த்து உயுத்தம் செய்து நாசம் அடைந்தான்.

டம்பம்:—தான் செய்கின்ற தருமத்தைப் பார்த்து யாவரு மெச்சவேண்டுமெனல்.

நகூர்வமஹாராஜன் தான் செய்த யாகத்தைப் புகழ்ந்து கொண்டதுபற்றித் தூர்வாச முனிவரால் ஏவப்பட்ட பூதத் தால் நாசம் அடைந்தான்.

தர்ப்பம்:—நானே செல்வத்தில் பெரியவன் எனக்குச் சரி யொருவருமில்லை யென்பது.

ஐஸ்வரியத்தால் கெர்விக்துச் சதகண்டராவணன் தேவர் களை உபத்திரவம்செய்ய, அதை நாரதமுனிவரால் இராகவ னுக்கறிவிக்கச் சீதையால் நாசம் அடைந்தான்.

அகங்காரம்:—பிடிவாதம்.

மது, கைடவர் என்ற இராக்ஷதர்கள் மகாவிஷ்ணு வோடு பதினுயிரவருஷம் யுத்தம்செய்துத் தோல்வியடைந்த விஷ்ணுவானவர் அவர்களைப் பார்த்து நீங்கள் மகா பராக்

கிரமசாலிகள் வேண்டும் வரம் தருகிறோமென்று சொல்ல, அதற்கு அவர்கள் நகைத்து தோல்வியடைந்த நீயா எங்களுக்கு வரங்கொடுக்கிறது? நாங்களுனக்கு வேண்டும் வரந் தருகிறோமென்று சொல்ல, அவர்களுடைய உறுதிமொழியை அறிந்துகொண்டு உங்களிருவர் உயிரையும் கொடுங்களென்று கேட்க அதனாலவர்கள் நாசம் அடைந்தார்கள்.

இப் பதின்மூன்றும் சூட்சுமசரீரத்தின் தொழிலானதால் அசுத்தம். இவை தவிர, இச்சை, பக்தி, சிரத்தை, இம் மூன்று குணங்களும் சூட்சும சரீரத்தின் அசுத்தமென்றே சொல்லப்படும்.

பஞ்சபூதங்களுக்கு அசுத்தம்:—பிருதிவிக்கு; மலம், மூத்திரம், குப்பை, சேரி, மசானம், உவர், கடினம், ஐந்திணை (மருத முதலிய நிலங்கள்) ஐந்திணைக் கருப்பொருள் அப்புவில் கரைந்தொடுங்குதல் முதலானவைகளேயாம்.

அப்புவுக்கு:—அலை, திவலை, குமிழி, நுரை, பிண்டீகரணம் செய்தல் (இழுத்தல்) சேறு, கலங்குதல், பாசிபடலம், அக்கினியிற் சுவறியொடுங்குதல் முதலானவைகளேயாம்.

தேயுவுக்கு:—புகை, பொரி, மூடல், பாகஞ்செய்தல், சுடர்விடுதல், வாயுவில் அணைந்தொடுங்குதல் முதலானவைகளேயாம்.

வாயுவுக்கு:—நற்கந்தம், துர்க்கந்தம், மிச்சிரகந்தம், புழுதிபடலம், சலித்தல், ஆகாயத்திலோய்ந்து ஒடுங்குதல் முதலானவைகளேயாம்.

ஆகாயத்துக்கு:—அவகாசம் (இடங்கொடுத்தல்) திக்கு இடி, மின்னல், குமுறல், மேகபடலம், குவிதல, விக்ஷேப சத்தியிலொடுங்கல், முதலானவைகளேயாம்.

சூக்கும சரீரத்தின் அசுத்த மென்று சொல்லப்பட்ட இச்சை என்பது, சிரவணம் முதலியவைகளில் விருப்பத் தைக் கொடுப்பது.

பக்தி:—கடவுளிடத்துப் பூசிக்கத்தக்க புத்தியோடுண் டாகும் அன்பே பத்தி யெனப்படும். இது மனத்தினாற் செய்யப்படும் பத்தி, வாக்கினாற் செய்யும் பத்தி, காயத் தினாற் செய்யும் பத்தி, இலௌகீகபத்தி, வைதிக பத்தி, அத்தியாத்மிக பத்தி யெனப் பலவாம். ஈண்டு கூறிய பத்தி தியானம் தாரணைகளோடுகூடி வேதங்களின் ஸ்மரணங்களி னால் கடவுளுக்குப் பிரீதியை யுண்டுபண்ணும் பத்தி மனத் தினாற் செய்யும் பத்தியாம்.

சிரத்தை என்பது:—எங்கும் வியாபித்து விளங்கா நிற்கும் இறைவன், தன்னை விளங்கவைத்த ஞான பிதாவாகிய குரு, நன்மை தீமைகளை இவையென விளக்கும் சாத்திரங்கள் ஆகியவைகளின்மேல் அன்புவைத்தல். இவை மூன்றும் மோக்ஷ ஸாதனத்திற்குச் சாதனமாக இருந்தாலும் முடி வினில் இல்லாமையாலே அசுத்த மென்று கொண்டதாம்.

இவ்வண்ணம் நோக்கு மிடத்துச் சுத்த மின்மையாக வுள்ள முப்பத்தைந்து தத்துவங்களுக்கு விலக்ஷணமாயும் சாக்ஷியாயு மிருக்கும் பிரம்மமானது, இவைகளுடன் கூடி யிருந்தும், இவைகளின் அசுத்தங்கள் எவ்வகையிலும் பற்

ருததினுல், இவைகள் 'ரஜ்ஜுவிற் சர்ப்பம்போல்' விவர்த்த மான படியினுலும், முப்பத்தாறுவது தத்துவமாக நின்று பொலிவதுவான பிரம்மமே சுத்தம் எனவறிக.

இரஜ்ஜுவினிற் கற்பிதமாகிய சர்ப்ப திருஷ்டாந்தத்தால் விகாரப் பிராந்தி யுண்டாவது. இரஜ்ஜுவிற் கற்பிதமாகத் தோன்றிய சர்ப்பத்தால் இரஜ்ஜு விகாரம் அடையாது இருத்தல் போன்று, பிரமத்தில் கற்பிதமாகத் தோன்றிய சகத்தால் பிரமம் விகாரம் அடைகிற தின்று என்பதனுல் விகாரப் பிராந்தி நிவிர்த்தியாகின்றது.

பிரம்மமாவது:—பெரிய தென்று புகலும் பொருள்களுக் கெல்லாம் பெரியதாகி விளங்குவது. அதுவே நித்தம், சுத்தம், புத்தம், முக்தம், சத்தியம், பரமானந்தம், அத்வை -தம் என்கின்ற இவ் விலக்கணங்களை யெல்லாம் தன்னில் கொண்டிருப்பது. இதில், அண்டம், புவனம், அகிலாண்டம், பிரமாண்டாதிகளைக் காட்டிலும் சொல்லரிய பெரியதாக விருப்பதால், இதனை ஞானிகள் 'பிரமம்' என்று பெயர் வழங்கினர். இஃது, நோக்குவோர்க்கு மங்களமாகத் தோற்றுதலுடைமையால், இருபான் மூன்று திருநாமங்களினுலே சிவமென்றனர். அவையாவன:-சிவன், மகாதேவன், ஈசுரன், சங்கரன், நீலகண்டன், திரிநேத்திரன், சந்திரசூடன், கங்காதரன், கபர்த்தி, பகவன், திரியம்பகன், திரிபுராரி, காலற்கரி, கிரீசன், மிருகதரன், பசுபதி, சாம்பன், கிரிசன், நடேசன், கௌரீசன், காலபைரவன், உன்மத்த சேகரன், சரபன்

என்பன. இவைகள் ஒவ்வொன்றும் காரணப் பெயர்களாகித் தன்னை நோக்கும் அடியார்களை மங்களமாகச் செய்விப்பவனு மாவான்.

இறைவன், வியாபகமாக விருப்பதால் வைணவர்கள், அப்பிரானை இருபானொரு திருநாமமிட்டு விஷ்ணு வென்கின் றனர். அவைமுறையே-நாராயணன், அச்சுதன், கோவிந்தன், பத்மநாமன், மாதவன், மதுசூதனன், கேசவன், அனந்தன், வாமனன், இருஷீகேசன், இராமன், திரிவிக்கிரமன், கிருஷ்ணன், ஜநார்த்தனன், தாமோதரன், பங்கஜாக்ஷன், நரசிம்மன், வராகன், மச்சியன், கூர்மன், கற்கி ஆகிய இவைக ளனைத்தும் அவ்விஷ்ணுவே என்றுங் கூறுப. இந்நாமாதி களைப் பிரமவாதிகள் பிரமன் எனச் சொல்லுவர். கர்ம வாதிகள் இந்திரன் என்பர். தத்துவவாதிகள் அக்ஷரன் என்பர். பிரகிருதி புருஷவாதிகள் பரமன் என்பர். பத்தி செய்பவர்கள் பகவான், ஸுவராட்டு என்பர். இன்னும் பல பல மதப்போக்கினில் அபிமத முள்ளவர்கள், காரண காரி யங்களைக்கொண்டு பற்பல திருநாமங்களை உச்சரிக்கின் றனர். மேலே விளம்பிய நாமங்கள் மிகுதியும் இடுகுறிப் பெயராகவும் காரணப் பெயராகவும் வருதல் காண்க.

பெரியதிற் பெரியது பிரமம்

உலகின் இயற்கை யமைப்பை உற்றுநோக்கின், ஓர் கிராமத்தை நோக்க, அதன் அருகிலுள்ள ஊர் பெரியது; அவ்வூரை நோக்க, தேசம் பெரியது; அதனை நோக்க, கண் டம் பெரியது; அதனை நோக்க, தீவு பெரியது; அதனை

நோக்க, ஏழுகடலும், ஏழுதீவும், ஏழுகுல பருவதமும், ஈரே ழுலகும், மகாமேருவும், சக்கரவாளகிரியும், சந்திர சூரியர் உதித்து ஒடுங்குகின்ற அண்டமும் பெரியது; அதனினும் இப்படி ஆயிரத்தெட்டு அண்டங்கள் அடங்கிய வொரு புவனம் பெரியது; அதனினும் இருநூற்று இருபத்துநான்கு புவனங்களடங்கிய அகிலாண்டம் பெரியது, அதனினும் அகி லாண்டங் கோடிகொண்ட ஒரு பிரமாண்டம் பெரியது; அத னினும் அநந்தங்கோடி பிரமாண்டங் கொண்ட நவகோடி பிரமாண்டம் பெரியது; அதனினும் விட்சேபசத்தி பெரி யது; அதனினும் மாயை பெரியது; அதனினும் மூலப் பிர கிருதி பெரியது; இந்தப் பிரகிருதியும் பூதாகாசத்தின் ஏக தேசத்திற் சலிக்கின்ற வாயுவினைப் போலும், சமுத்திரத்தில் ஏக தேசத்திற் றோன்றுகின்ற அலையைப் போலவும், ஒரு தேகத்தில் ஏகதேசத்திற் றோன்றுகின்ற மறுவைப் போல வும், மச்ச ரேகையைப் போலவும், சிதாகாசமான பிரமத் தின் ஏகதேசத்தில் இவையெல்லாந் தோன்றுகின்றபடியால் பிரமமே பெரிதிற் கெல்லாம் பெரியதாம். இதனை,

“ஏகோவஸீ ஸர்வ பூதாந்த ராத்மா
ஏகம் பீஜம் பஹுதாயஃ சுரோதி”

என்கிற கடோப நிஷத்தின் பிரகாரம் பிரமத்தின் விரிவை வகைப் படுத்தியதாம்.

நித்தமென்பது:—பிராக பாவம், பிரத்தொம்சா பாவம், அன்னியோன்யா பாவம், அத்தியந்தா பாவம் இந்நான்கு அபாவமுமின்றிச் சுகோதயமாய் இருப்பது. இவற்றுள்;

பிராக பாவமாவது-சிருஷ்டிக்குமுன் ஜகத்தில்லை யென்பது. அதாவது மண்ணுக்குமுன் கடமில்லை யென்பதுபோல.

பிரத்தொம்சா பாவமாவது:—உண்டாகிய ஜகத்து அழிந்த பின்பு இல்லையென்பது, அதாவது உண்டான கடம் உடைந்த பின்பு இல்லையென்பதுபோல.

அன்னியோன்னியா பாவமாவது:—எப்படிக் கடத்தில் படமும் படத்தில் கடமும் அன்னியோன்னியமாகவிருந்தும் பிரிகிற காலத்தில் கடம் வேறு படம் வேறு ஆகிறதோ அது போலப் பிரமத்தில் பிரபஞ்சமும், பிரபஞ்சத்தில் பிரமமும் அன்னியோன்னியமா யிருந்தாலும் பிரமத்திற்குரிய சச்சிதானந்த லக்ஷணத்தையும் பிரபஞ்சத்திற்குரிய அனுர்த ஜடதுக்க லக்ஷணத்தையும் விசாரிக்கிற காலத்தில் பிரம்மம் வேறு பிரபஞ்சம் வேறு ஆகிறபடியால் அன்னியோன்னியா பாவமாம்.

அத்யந்தா பாவமாவது:—இப்படித் திரிகாலத்திலும் ஜகத்து வாதிக்கப்பட்டு அசத்தாகிறபடியினுல் அத்யந்தா பாவமாம்.

இந்நான்கு அபாவமுமின்றி என்றும் சத்தாமாத்திரமாய் இருப்பத்தால் நித்தமாம்.

சுத்தமென்பது:—பிரகிருதி முதலான மலமில்லா திருப்பதுவே.

புத்தமென்பது:—அக்தக்கரண வறிவைப்போலத் தோன்றித் தோன்றி மறையாமல் என்றும் ஒரேபடித்தாய் இருப்பதுவேயாம்.

முத்தமென்பது:—அஞ்ஞானம் அதன் காரியமான சகல பாச பந்தங்களும் விடுபட் டிருப்பதுவேயாம்.

சத்தியமென்பது:—கலை, காஷ்டை, விநாடி, நாழிகை, முகூர்த்தம், நாள், வாரம், பக்ஷம், மாதம், அயனம், வருஷம், யுகம் முதலிய கர்ப்பாதி காலங்களுக்கும், அக்காலங்களி லுள்ள ஜனனங்கடோறும் வாராநின்ற அவஸ்த்தாத்திரய பிரபஞ்சங்களிற் றோன்றப்பட்ட பஞ்சபூத பௌதிகங்களுக் கும் வேறாகியும் அவைகளுண்டாகிறதற்கு முன்னும், உண்டாகி யழிந்த பின்னும், கெடாமல் ஒரே பிரகாரமா யிருப்பதுவேயாம்.

பரமானந்தமென்பது:—எதெதைக் கைவிட்டாலும் தன் னை (ஆத்மாவை) க் கைவிடாமல் அதிகப் பிரியமாய் இருப் பதுவேயாம்.

அத்வைதமென்பது:—'ஏகமே வாத்துவிதப் பிரம'மென் னும் வாக்கியப்படி சுஜாதிக, விஜாதிக, சுவகத, பேத ரகித மாய் இருப்பதுவேயாம்.

இவற்றுள் சுஜாதிகமென்பது:-மரத்துக்கு மறுமரம் சுஜாதியில் பேதம். அதாவது ஆலமரம், கல்லாலமரமென் பதுபோல. விஜாதிகமென்பது-பாஷாணம் (கல்) விஜாதிகம் (வேறுபேதம்). சுவகதபேதமென்பது; மரத்துக்குப் பத்திரம் புஷ்பம் முதலியன (ஒன்றில்லாமல் பலபேதமாம்) இது போலச் சத்துக்கு வேறு சத்தில்லாமையினால் சுஜாதிக பேத மும் சித்திரக்காரனுடைய சித்திரசக்தி எப்படிச் சித்திரக்

காரனுக்கு வேருகத் தோற்றப்படவில்லையோ அதுபோல மாயையும் பிரமத்தில் வேருக இல்லாமையால் விஜாதிக பேத மும், நிரவயமாய் இருப்பதால் சுவகதபேதமுமின்றி ஏகமா யிருப்பதால் அத்வைதமாம்.

மேலேகூறிய நித்த முதலியவைகள் இத்தியாதி லக்ஷ ணங்களை யுடையதுவே பிரஹ்மம்.

"ஏகமேவாத்துவிதம்" என்றது:—ஏகம்-ஒன்று, ஏவம்-தேற்றம், தெளிவு; அத்துவிதம்-இரண்டல்லாத வொன்று.

சர்வசாக்ஷி:—இதன் பொருளைச் சாமவேதத்தின் சிரப் பொருளாக விளங்கும் சாந்தோக்கிய உபநிடதத்தில் சொல் லப்பட்ட 'தத்துவமசி' என்கிற மகா வாக்கியத்திலுள்ள, தத்பதம், துவம்பதம், அசிபதம் ஆகிய இந்த மூன்று பதங் களுக்கும் சாக்ஷியாக விருப்பதால் சர்வசாக்ஷி என்றதாம். மேலே சொன்ன முப்பதமாகிய துவம்பதத்துள் வாச்சி யார்த்தமாயுள்ள தூல சூக்கும காரணமாகிய சரீராதித் திரய மும், விசுவ தைசத ப்ராக்ஞன் என்னும் அபிமானத் திரய மும், சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி என்னும் அவஸ்தாத் திரயமுமாகிய இவை ஒன்பதிற்கும் விலக்ஷணமாகியும், சாக்ஷியாயுமுள்ள லக்ஷியார்த்த கூடஸ்த பிரம்மமும், தத் பதத்தில் வாச்சியார்த்தப் பொருளாயுள்ள விராட்டு, இரணிய கர்ப்பன், அவ்யாகிருதன் (மாயை) ஆகிய சரீரத்திரயமும், வைசுவானரன், சூத்திராத்மா, அந்தர்யாமி என்கிற அபி மானத் திரயமும், சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம் என்னும் அவஸ்தாத் திரயமும் ஆகிய இவை ஒன்பதுக்கும் வில

க்ஷணமாயுள்ள லக்ஷியார்த்த பிரமமும், அசிபதத்தில் வாச்சி யார்த்தமாய் உள்ள சத்ரூபசத்தி, சித்ரூபசத்தி, ஆனந்த ரூபசத்தி என்கிற சரீரத்திரயமும், பரன், பரிபூரணன், பர மானந்தன் என்னும் அபிமானத் திரயமும், சர்வ வியாபகம், சர்வப்பிரகாசம், சர்வானந்தம் என்னும் அவஸ்தாத் திரயமு மாகிய இவ் வொன்பதிற்கும் வேறாகியும், சாக்ஷியுமாகிய லக்ஷியார்த்தப் பரப்பிரம்மமும் ஆகிய இம் மூன்றிற்கும் நோக்குமிடத்து சாக்ஷியாக விருக்கிறபடியால் சர்வசாக்ஷி என்றதாம். அன்றியும்; பிரமன் முதல் பிபீலிகாதி பரியந்த முள்ள ஜீவ சிதாபாஸர்கள் சரீரங்களிலுள்ள அந்தக் கரணங் -கள் தோறும் ஆங்காங்குச் சாக்ஷியாய் இருப்பதினால், சர்வ சாக்ஷி யென்பது பொருந்துவதாம்.

அக்கினியிற் சூடுபோல

இவ்வுபமான வாக்கியத்தின் பொருள் விளக்கம் யாதெனின், அக்கினிக்கு வெம்மை இயற்கையாக வுண்டா யிருக்க, மாந்திரீக வலியாமையால் அச்சூடானது எங்ஙனம் கொளுத்தாமல் இருக்கிறதோ அத்தன்மைபோல, பிரம்மத் தில் தனக்கு வேறாகாமல் இயற்கையாகவே வன்மையுண்டு. அதுவே அபின்ன சத்தியாம். இதனையே அருள் என்பர். அநுப்பிரதானம், பிரகிருதி, மாயை, அவித்தை, தபசு முத லிய பற்பல விகாரங்கள் அடையாமல் அடைந்து, அந்த அதீதப் பிரம்மத்தில் அடங்கியிருக்கும்போது, அதனைச் சுத்தப் பிரம்மம் என்பார்.

அதீதம்

வாக்கினால் வசனிக்கப்படாமலும், மனத்தினால் சிந்திக்கப்படாமலும் இருப்பதுவேயாம். அதாவது ஜாதி, நாமம், ரூபம், குணம், கிரியையின்றி நிர்ஜாதி, நிர்நாமம், நிர்ரூபம், நிர்க்குணம், நிஷ்கிரியையாய் இருப்பதால் வாக்குக்கு விஷயமாகாமையும் (எட்டாமையும்) ஜடமின்றி நிர்விஷயமாயும் சுயம் சித்தாயும், மனதிற்கு அகோசரமானதால் அதீதமாம்.

விசிரிம்பித்து வியாபித்தல்

சுவாசிரய சுவ விஷயத்தால் பிரமமாகிய தன்னை இடங்கொண்டு தன்னை மறைத்தலால் கூறப்படும். அதாவது நெருப்பினிடத்தில் தூமம் (புகை) உண்டாகி அது அந்த நெருப்பை மறைப்பதுபோலும், ஆகாயத்தை ஆசிரயித்துக் கட படாதிகள் தோன்றி அவ்வாகாயத்தையே மறைத்துக் கொண்டதுபோலும், ஒரு விதத்தில் விருக்ஷமுண்டாகி அவ் வித்தையே மறைத்ததுபோலும், சொரூபத்தை ஆசிரயித்து (இடங்கொண்டு) அதிலிருந்து விசிரிம்பித்து (விகாரமாகி) அச் சொரூபத்தையே வியாபித்தல் (மறைத்தல்) விசிரிம்பித்து-அதிக்கிரமித்து, வெளிப்பட்டு என்று பொருள்.

உதாரணச் செய்யுள்

செய்யபெய ருருவமிலா திரண்டற் றொன்றாய்ச்
சிறந்தசுத்தப் பிரமசர்வ சாட்சி தன்னில்
வெய்யநெருப் பினிற்சூடொத்த பின்ன மாயோர்
விளங்குசத்தி யுளததுதான் சுழுத்தி தன்னில்

நெய்யகுணத் திரயங்க ளடங்கு மாபோல்
நுவலதீ தத்துறைய வந்த வேலை
செய்யலற நிற்கையிலச் சொரூப நாமந்
திகழ்சுத்தப் பிரமமெனத் தெரிப்பர் மேலோர்.

பரம்பிரமம்:—நாம் நித்திரை தெளிந்து சாக்கிரத்தில் ஒரு குணம் வெளிப்பட அதன் வயப்பட்டு நமது சுயரூப மாகிய நிர்க்குணத்தை மறந்து விகாரமானதுபோல, அவ் வபின்னசத்தி வெளிப்பட்டு அந்தப் பிரம்மத்தை வியா பிக்கும் காலத்து அப் பிரமம் அப் பரை வியாபகத்துள் அடங்கினபடியால் அதற்குச் சுத்தப் பிரம்ம மென்கிற பெயர் நீங்கிப் **பரப்பிரம** மென்கிற பெயர் வந்தது.

உதாரணச் செய்யுள்

உறைசுழுத்தி யோய்ந்தொளிரு நனவு தன்னி
லோர்குணந்தா னெங்கிடநம் முருவம் வேறுய்க்
குறையடைதல் போயபின்ன சத்தி தோன்றிக்
குறித்தபிர மத்தைவியா பிக்கும்போது
நிறைவுறுமச் சொரூபமது பரையிற் குள்ளே
நிற்கையிற்சுத் தப்பிரம மெனும்பேர் நீங்கி
அறைகின்ற பரப்பிரம மாகு மென்றே
யாதிமறை நூலறிந்தோ ரறைவர் மாதோ.

இலக்ஷண சூன்யம்

அனாதி. காரணமில்லாது; காரியப்பட்டுச் சொரூபத்திற் குரிய சச்சிதானந்த லக்ஷணமில்லாமல் ஜடமாயிருப்பது,

புருஷ சமூகத்தில் ஸ்திரீக்கு இன்பம் ஜனித்தாற்போல, பிரம சந்நிதானத்தில் ஆன்மாவிற்கு இன்பம் ஜனித்தல் என்பதின் பொருள். ஸ்திரீ புருஷர்களிருவரும் கலவியிற் சேர்ந்து அகமுகமாய் அநுபவித்த சுகத்தில் அவ்விருவர் எண்ணத்திலு மில்லாத சிசு எப்படி ஜனித்ததோ அது போலப் பரப்பிரம சந்நிதானத்தில் லக்ஷண சூனியமாய் இருக்கின்ற அப் பரையின் வியாபகத்துள் பரப்பிரம்மம் சேருங்காலத்தில் பரிசுத்தமான அவிகிருத சுத்த சாத்மீகம், சுத்த ரஜதம், சுத்த தாமதம் என்னும் முக்குணங்களுண் டாயின. இம் முக்குணங்களுக்கு முறையே ஆனந்தரூப சத்தி, சித்துரூப சத்தி, சத்துரூப சத்தி என்று பெயராம்.

உதாரணச் செய்யுள்

மாதருஞ்சே ராடவருங் கூடுங் கால
மகிழ்வரெண் ணுதகருத் தரிக்குமாபோல்
ஓதருமச் சத்திவியா பகத்திற் பிரம்ம
மொளிர்போதிற் சாந்ரசோ தமங்க ளென்னும்
நீதமுறு தூயகுண மூன்றும் நேர்ந்து
நிகழ்கின்ற வானந்த ரூப சத்தி
சாதமுறு சித்துருவ சத்தியோடு
சத்துருவ சத்தியெனத் தயங்கு மாதோ.

சுத்த சாத்மீகமென்னும் ஆநந்தரூப சத்திக்குப் பொருள்

சுத்த சாத்மீகம், ஆனந்தரூப சத்தி, இரண்டும் ஒரு பொருட் சொற்கள். ஆனந்தரூப சத்தியுடனே பரப்பிரமம்

கூடிக் காரண சரீரமாகிய சர்வாநந்த சுழுத்தி யவஸ்தை (காலத்தை) அடையும்போது பரப்பிரம்மமென்கிற பெயர் போய் பரமானந்த ரென்கின்ற பெயர் வந்தது.

கவி

சொல்லுமா னந்தரூப சுத்தமாஞ் சத்தியென்னும்
நல்லசாத் விகமோடு நவில்பரப் பிரமஞ் சேர்கால்
தொல்லையிற் சர்வானந்த சுழுத்தியை யடையுமப்போ
தெல்லையிற் பரமானந்தப் பெயரென வியம்புவாரே.

சுத்த ராஜதம், சித்துரூப சத்தி இரண்டும் ஒரு பொருட் சொற்கள். அந்தச் சத்தியுடனே சேர்ந்து சூட்சும சரீரமாகிய சர்வப் பிரகாசமென்னும் சொற்பனவஸ்தையைச் சேரும்போது பரமானந்த ரென்கின்ற பெயர்போய்ப் பரிபூரணரென்ற பெயர் வந்தது.

கவி

நவிலுறு பரமானந்த னிராசத குணமதான
துவறறு சித்துரூப சத்தியைத் தொடர்ந்துநீங்கா
தவிர்செயுங் கனவதான வவத்தையை யடையுங்காலம்
நுவல்பரி பூரணன்று னென்னநூ லுரைக்குமன்றே.

சுத்த தாமதம், சத்ரூப சத்தி இரண்டும் ஒரு பொருட் சொற்கள். அச் சத்தியுடனே கலந்து தூல சரீரமாகிய சர்வ வியாபக மென்னும் ஜாக்கிராவஸ்தையை நேருங்காலம் பரிபூரண ரென்கின்ற பெயர் போய் பர னென்கின்ற பெயர் வந்தது.

கவி

தகமைசேர் சத்துரூப சத்தியாந் தாமதத்தை
மிகபரி பூரணன்ருன் மேவிய வேலேதன்னில்
விகசித மானசர்வ வியாபகச் சாக்கிரத்தில்
திகழ்தரு போதிதன்பேர் பசப்புவர் பரனுமென்றே.

சர்வானந்த சுழுத்தி யென்பது:—சந்திரனிடத்தில் அநாதி களங்கமானது அச்சந்திரனை ஆசிரயித்து அதனை மறையாமல், அச்சந்திரனுல் எப்படி விளங்குகின்றதோ அது போலும், நான் என்னை யறியேனென்று உலகப்பிரசித்த வியவகாரத்தில் ஆத்மனை அடுத்து அவனை மறையாமல், அவ்வாத்மனுல் அறிவித்துக் கொள்வதுபோலும், ஒரு ஜீவனுடைய சுழுத்தியவஸ்தையில் அன்னமயனும், பிராணமயனும், மனோமயனும், விஞ்ஞானமயனும், லீனமாய் ஆனந்தமயனுய் அவ்வஞ்ஞானத்தையும் விளக்கித் தானும் சுகசொரூபமாய் விளங்குவதே ஒரு சுழுத்தி, அதை அனுபவிப்பவனே பிராக்ஞன், அவ்வனுபவமே ஆனந்தம். ஆனதால் ஈக்ஷணமுதல் அனுப்பிரவேச பரியந்தமுள்ள சர்வான்மாக்களும் தனித்தனியே அடைகின்ற சுழுத்தியின் சமட்டியே சர்வானந்த சுழுத்தியாம். சர்வானந்தமாவது, மேற்சொல்லிய சுழுத்தி அவஸ்தைகடோறும் ஜீவர்கள் தனித்தனியே அனுபவியாநின்ற வானந்த சமட்டியே சர்வானந்தம்.

சர்வப் பிரகாசமென்னும் சொப்பனமானது:—ஒரு ஜீவனுடைய சொப்பனவஸ்தையில் அன்னமயன் லீனமாய்ப் பிராணமயன் மனோவிஞ்ஞானமயனுய் ஜாக்கிரத்தைப்போலச் சூரியாதிப் பிரகாச சாதனந்திரங்களில்லாமல் தன்னுடைய

தேஜஸினுமேல சொப்பனப் பிரபஞ்சத்தையும் விளக்கித் தானும் பிரகாசித்துக்கொண்டிருப்பதே ஒரு சொப்பனம். இதன் அபிமானியே தைசதன். சர்வஜீவர்களும் தனித் தனியே அடையாநின்ற சொப்பனுவஸ்தையைச் சமட்டி யாய்த் தன்னுடைய பிரகாசத்தினுல் விளக்குவதே சர்வப் பிரகாசமென்னும் சொப்பனுவஸ்தை.

சர்வ வியாபக மென்னும் ஜாக்கிரமாவது:—ஒரு ஜீவனுடைய ஜாக்கிராவஸ்தையில் சர்வ இந்திரிய வியவகாரங்களையும் சம்பூரணமாய் விளக்கித் தானும் பிரகாசித்துக்கொண்டிருப் பதே ஒரு ஜாக்கிரம். இந்த ஜாக்கிர வபிமானியே விசுவன். இப்படிச் சர்வஜீவர்களும் தனித்தனியே அடையாநின்ற ஜாக்கிராவஸ்தையைச் சமட்டியாகத் தன்னுடைய பிரகாசத் தினுல் விளக்குவதே சர்வவியாபகமென்னும் ஜாக்கிரா வஸ்தை.

துவம்பத சிருஷ்டியாவது:—கூடஸ்தனும் அநாதி; பதி, பசு, பாசமும் அனுதி யென்பதாம். தத்பதி சிருஷ்டியா வது-பிரமம் ஒன்றுமே உள்ளதென்றும், பதி, பசு, பாசம் என்கிற இம் மூன்றும் பொய் என்றும் சொல்லுவர்.

அசிபத சிருஷ்டியாவது:—சிவ சத்தியின் திருவிளையாய் விளங்கும் இம் மூன்று பதங்களும் பின்னு சத்தியின் தொழிலாம்.

இம் மூன்று பதங்களும் ஒன்ருகியதே 'தத்துவமசி' என்ற மகா வாக்கியம். தத் என்பது, சர்வ சக்திமானும், சர்வஞ்ஞனும், விபுவும், சுதந்தரனும், பரோட்சனும், மாயி

யும், பந்தமோக்ஷ மின்றியவனுமாய ஈசனும். துவம் என்பது, அற்ப சக்திமானும், அற்பஞ்ஞனும், பரிச் சின்னனும், அநீசனும், கர்மாதீனனும், அவித்யா மோகிதனும், பந்த மோக்ஷமுடையவனும் பிரத்தியக்ஷனுமாய சீவனும். அஃதாவது, துவம்பதத்தின் வாச்சியார்த்தம் சீவனும் என்பது. அசி யென்பதன் பொருள் ஐக்கியம் அல்லது இருக்கிறாய். இங்கே 'தத்துவமசி' என்றதால், ஈசுவர ஜீவர்களின் அபேதம் வாச்சியார்த்தத்தால் விளங்குகின்றது. விளங்கினும் அது பொருந்தாது; ஏனெனில், தம்முள் மாறான தர்மமுள்ள மாயையைச் சுவாதீனத்தில் வைத்துள்ளவனாகிய ஈசனும், அவித்தியா மோகிதனான சீவனுமாகிய இருவரும் ஒன்றெனக் கூறுவது. ஆகாயம் கனத்திருக்கிறது; நெருப்பு குளிர்ந்து இருக்கிறது என்று சொல்லுவதற்கு ஒப்பாமாதலின், விரோதப்படுகின்ற வாச்சியார்த்தத்தை விட்டு லக்ஷணையால் லக்ஷியார்த்தத்தை அறிய வேண்டும். விட்ட லட்சணை, விடாத லட்சணை, விட்டுவிடாத லட்சணை யென்னும் மூன்றனுள் விட்டுவிடாத லட்சணையால்தான், 'தத்துவமசி' மகாவாக்கியத்தின் விரோதம் நீங்கி ஐக்கியம் சம்பவிக்கும்.

கவி

சுத்த சாதகம்

முன்பத சிருட்டி பதிபசுபாச மூன்றையும்
அனாதியாய் நிறுவும்
பின்பத சிருட்டி சகமித்தை அந்தப்
பிரமமே யுளதென நிறுவும்

சின்பத மான வசிபத சிருட்டி
சிவசத்தி லீலையா கிறுவும்
மன்பத மூன்றும் பின்னைய பிணையு
மாசறு சிவமுமென் றுணர்வாம்.

ஜீவன், வாச்சியார்த்தம் நீங்கினவுடனே கூடஸ்தனாகி றான்; அக்கூடஸ்தனே தற்பதத்தில் பிரமத்துடன் தாதாமிய மடைந்து, அதாவது பிரமமே கூடஸ்தனாய்க் கூடஸ்தனே பிரமமாய் ஆகிறான். அக்கூடஸ்த பிரமம் அசிபத சிவத்துக்கு அங்கமாகின்றது. இம் மூன்று பதங்களையும் அடைந்தால் பரமுத்தி அடைந்ததுவாகும்.

கவி

சுத்த சாதகம்

முன்பதமான தொம்பதப் பசுவை
மூடிரு ணீங்கிச்சுத் தமதாய்ப்
பின்பதமான தற்பத வருளில்
பிறங்குதா தான்மிய மடைந்தே
சிற்பதமான வசிபத சிவத்தைச்
சேர்ந்ததற் கங்கமாய் நின்றால்
மன்பர முத்தி முடிந்தது வாகு
மற்றவை தனில்நிற்கில் குறையே.

நான் துவம்பத லக்ஷியார்த்த கூடஸ்தனென்று இருந்தால் இச்சை யொடுங்கும். தற்பத லக்ஷியார்த்தப் பிரமமென்றிருந்தால் ஞானம் ஒடுங்கும். அசிபத லக்ஷியார்த்த

பிரமமென்றிருந்தால் கிரியை யொடுங்கும். இச்சையென்பது பிரகிருதியின் ரஜோகுணமாகிய அவித்தை. ஞானமென்பது பிரகிருதியின் சத்துவகுணமாகிய மாயை. கிரியையென்பது பிரகிருதியின் தமோகுணமாகிய விக்ஷேப சத்தி. இப்படி வரிசைக் கிரமமாய் அடையாத பட்சத்தில் மறுபடியும் ஜன்ம மெடுத்துத் தீரும்.

கவி

சுத்த சாதகம்

சுத்தமாய் நின்று லிச்சைசித் தியதாந்
தொல்லதிஷ் டானமாய் நின்றால்
சித்தமாய் ஞானஞ் சித்திய தாகும்
சிவத்தினுக் கங்கமாய் நின்றால்
மத்தமாய் கிரியைச் சித்திய தாகும்
வகுத்தவிம் மூன்றுமவ் வொழுங்கே
சித்தமாய்ச் சித்தி யிலாவிடில் மீட்டுந்
தேகமொன் றெடுக்குமென் றுணர்வாய்.

அபின்னசத்தியே யாதொரு தொழிலுமின்றிச் சர்வ சாக்ஷியாகிய சுத்தப்பிரமம்.

இன்னும் ஒருவிதம்:—யாதொன்றிலும் சம்பந்தப்படாத சுத்தப் பிரமத்திற்குத்தான் செயலொன்று மில்லையென்று செவ்வனே வெளிப்படுகிறதோ; அந்தப் பிரமம் இப்படி அகண்டாகண்டமா யிருக்கிற உலகங்களை எப்படி சிருட்டிக் கத் தொடங்கிற்று என்று வினவில், இந்நூலின் தலைப்பில்

வரைந்துள்ள பிரம நியமப்படத்தைப் பார்த்தால் இவ்வுலகத் தோற்றமாகிய ஜட ஜீவேஸ்வர உற்பத்தி, பட்டம் பகற்போல் தெளிவதாகும். யாதொரு களங்க ரகிதமான சிவ சைதன் னியமாகிய சுத்தப் பிரமமென்னும் சர்வசாக்ஷியினிடத்தில் அக்கினியிற் சூடுபோலவும், சலத்தில் சீதளம்போலவும், புட்பத்தில் வாசனை போலவும், மனதின் நினைப்புப்போல வும், கண்ணாடியிற் பிம்பம் போலவும், வித்தினுள் முளையைப் போலவும், முளையினுள் பயிரைப்போலவும், அபின்னமாக ஒரு சத்தி யுண்டோ அந்தச் சத்திக்கு யாதொரு செய லின்றி அச் சர்வசாட்சியினிடத்தி லடங்கி இருக்கும்போது, அதையே சுத்தப் பிரமமெனச் சொல்லலாகும். அந்தச் சத்தி விசிரிம்பித்துப் பிரமத்தைச் சூழ வியாபிக்கும்போது அப் பிரமம் சத்தி வியாபகத்திற்குள்ளானதால் அதைச் சத்திப் பிரமமெனச் சொல்லாமல் பரப்பிரமமெனப் பெயர் வகுத்துப் பேசலாயிற்றென்க.

இப்படிக்கான பிரம்ம சந்நிதானத்தில் கரும்பிற்கு அலரி லின்பங் கண்டதுபோலவும், ஸ்திரீக்குப் புருஷனிடத்தி லின்பம் பயந்தது போலவும், விகிர்த சூனியமா யிராநின்ற அந்தச் சத்தியினிடத்தில் அவிகிர்த சத்துவம், ரசசு, தமசு என்னும் முக்குணங்கள் ஜனித்தன. அந்தச் சுத்த சத்து வத்திற்கு ஆனந்தரூப சத்தியென்றும், சுத்த ரஜசுக்கு சித் ரூபசத்தியென்றும், சுத்த தமசுக்குச் சத்ரூபசத்தியென்றும் மூன்று சத்திகளுண்டாயின. அப்படிக்குண்டான மூன்றில்

பிரதமமான ஆனந்த சாக்கிரத்தை அடையுங்கால் பரனென்று விளக்கலாகும். ரூபசத்தியை அப்பிரமம் கலந்து ஆனந்த சுழுத்தியைப் பெறுங்கால் பரமானந்தன் என்றும், அப் பரமானந்தன் மேலே சொன்ன சித்ரூப சத்தியுடனே கூடி சர்வப்பிரகாச சொப்பனத்தை அடையுங்காலம் பரிபூரணன் என்றும், அந்தப் பரிபூரணன் மேற்கண்ட சத்ரூப சத்தியுடனே சேர்ந்த சர்வவியாபகமாகும். இங்ஙனம் சொல்லியதுகளெல்லாம் குணபேதத்தாற் பெயரும் வேறுபட்டனவென்றும் கொள்க; பிரம்மமே பரமாத்மா, சத்தியே சரீரமென்றும் அறிக. இப்படி அசிபத லட்சணம் சொல்லப்பட்டது.

மாயையெனு முபாதியுறு மீசன்றானே மருவியதற்
பதமுறைசெய் வாச்சியார்த்தம்
ஆயதன தவித்தையுறுஞ் சீவன்றானே யறைகின்ற
துவம்பதமோர் வாச்சியார்த்தம்
ஏயபதா முபாதியெலா மிழந்தபின்ன ரேகவிலக்
கணமான வத்துத்தானே
தூயபத மிரண்டுக்கு மிலட்சியார்த்தந் தொடர்புற்ற
வைக்கியமே யசிபதார்த்தம்.

அகண்டமாவது:—ஒன்றினாலும் கண்டிக்கப் படாதது. உலகினர் நிர்ணயமும், உலோகாயதர் நிர்ணயமும், அருகர் புத்தர் ஆகமங்களினால் கண்டிக்கப்படும். அவையும் தேவ கந்தருவர் ஆகமங்களினால் கண்டிக்கப்படும். அவையும் பிரமாகமத்தில் கண்டிக்கப்படும். அவையும் விஷ்ணுவாகமத்

திஞல் கண்டிக்கப்படும். அவையும் பதினெண் புராணங்களிஞல் கண்டிக்கப்படும். அவையும் இதிகாசங்களிஞல் கண்டிக்கப்படும். அவையும் வேதாகமங்களிலுள்ள கன்ம காண்டத்திஞல் கண்டிக்கப்படும். அவையும் உபாசஞகாண்டத்திஞல் கண்டிக்கப்படும். இவையெல்லாம் வேதாந்த உபநிடதத்திஞல் கண்டிக்கப்படும். இப்படிப்பட்ட உபநிடதங்களிஞல் நிர்ணயஞ் செய்யப்பட்ட சச்சிதானந்த பிரம்ம சொரூபத்தை வேறென்றிஞலும் கண்டிக்கக் கூடாமையிஞலும் அப்படிக் கண்டிக்க வேணுமாஞலும் உபநிடதத்துக்கு மேலான பிரமாணமில்லாத படியிஞலும் சகல பிரமாணங்களுக்கும். உபநிடதமே கொடுமுடியாய் விளங்குகிறபடியிஞலும் உபநிடதத்திஞல் பிரதி பாதிக்கப்பட்ட பிரமமே; அகண்டம்.

அவ்வகண்டம் என்பது:—தேசம், காலம், வஸ்து இம் மூன்றிஞலும் பரிச்சேதம் (எல்லை) அற்றது எனவும் பொருள் கூறுவர்.

ஒன்றினுக்கு மூன்றுவிசேடம் கொடுத்தமை எக்காரணங் கொண்டோ வென்ருல், தேசபரிச்சேதம் அற்றது பூரணமென்று சொல்லுமிடத்தில், ஆகாயம் எல்லாத் தேயத்தும் பரவுதலுற்றிருப்பதால் அவ்வாகாயத்திற்குப் பூரணம் வரும். அதை நிராகரிக்கும் பொருட்டுக் கால பரிச்சேதமற்றது பூரணமென்றுஞ் சொல்லவே இரண்டாவது விசேடம் வாலாயிற்று.

ஆயின், காலத்தினால் ஆகாயத்துக்கு அபரிச் சின்னத்துவம் இன்றோவெனில், ஆகாசம் படைப்புக் காலத்து உண்டாய்ப் பிரளயகாலத்தில் அழிதலினால் பூரணத்துவம் இல்லை.

இவ்விரண்டு விசேஷங்களோடு நில்லாமல் மூன்றும் விசேடம் எதற்கெனின், காலத்திற்குத் தேசத்தினாலும், ஆகாயத்தினாலும் பரிச்சேதம் கூடாமையின் அபரிச் சின்னத்துவம் வரும். அதை நிராகரிக்கும் வண்ணம் மூன்றாவதான விசேடம் வரலாயிற்று. அப்படியாயின் காலத்துக்கு வஸ்துவினால் அபரிச் சின்னத்துவம் இன்றோவெனில், காலமும் ஆகாசாதிகளும் வஸ்து வாகாமையினாலே பூரணத்துவம் இல்லை. வஸ்துவில் காலம் உற்பத்தி லயமாகையால் வஸ்துவுக்குப் பூரணத்துவம் உண்டோவெனில், வஸ்துவும் பிரம்ம சந்நிதானத்தில் விளங்கி, பிரமத்தினிடத்திலே ஐக்கியமாவதாலும், வஸ்துவாகிய பிரகிருதிக்குப் பூரணத் தன்மை கிடையாது. பிரமமே சர்வ வியாபகமானதால் தேச பரிச்சேதமும் நித்தியமாதலால், கால பரிச்சேதமும் சர்வான்மக மாதலால் வஸ்துபரிச் சேதமுங் கிடையாது. இது பற்றி பிரம்மமே அண்டமென்க. இதனை,

"நன்றாய்ஞான கனமாகி நானு
வெல்லாம் பிறப்பிடமா
யொன்றாய் வேறோர் பொருளின்றி
யொளியா யொன்றே டுவமிப்ப

தன்றுயகில சரா சரங்கட்
காதா ரந்தா ளுயென்றும்
பொன்று ததுவா யவிகாரப்
பொருளாய்ப் புலனுய்ப் புணப்பரிதாய்"

எனக் கூர்மபுராணம் அறிக.

தானே திசையொடு தேவருமாய் நிற்கும்
தானே யுடலுயிர் தத்துவமாய் நிற்கும்
தானே கடன்மலை யாதியுமாய் நிற்கும்
தானே யுலகிற் றலைவனு மாமே." என்றூர் திருமூலர்.

பரிபூரணமாவது:—எப்படி ஒரு கடத்தை ஜலத்தால் பூரிக்கப்படுகின்றதோ அப்படிப்போல ஒன்றையொன்றுல் நிரப்பப் படுகிறது. அதாவது அன்னமயத்தைப் பிராண மயத்தாலும், பிராணமயத்தை மனோமயத்தாலும், மனோ மயத்தை விஞ்ஞானமயத்தாலும், விஞ்ஞானமயத்தை ஆனந்தமயத்தாலும், ஆனந்தமயத்தை அவித்தையாலும், அவித்தையை மாயையினுலும், மாயையை பிரமத்தினுலும், பூரிக்கப்பட்டிருப்பதால் பிரமமே பூரணம்.

சத்து லக்ஷண மாவது:—எப்படிப் பழுதையி (கயிற்றி) னிடத்தில் பாம்பு தோன்றுவதற்கு முன்னும் தோன்றி யழிந்த பின்னும் விளங்குகிறதுமான காலத்திரயத்திலும் உள்ளதாய்ச் சர்ப்பத்தைப்போலத் தான் தோன்றினுலும் வாதிக்கப்படாமல் ஏகரூபமா யிருக்கின்றதோ அதுபோல ஜகத்துண்டாவதற்கு முன்னும் உண்டாய் அழிந்த பின்னும்

விளங்குவதுமான காலத்திரயத்திலும் உள்ளதாய் ஒன்றி ஞலும் வாதிக்கப்படாமல் ஏகரூபமாயிருப்பதுவே சத்து.

சித்து லக்ஷணமாவது:—சூரியனுனவன் தீபாதி அன்னிய சாதனுந்தரங்களை அபேட்சியாமல் தானே பிரகாசரூபமா யிருந்துகொண்டு பிரபஞ்சத்திலுள்ள கடபடாதி சர்வ விஷ யங்களையும் விளக்கிக் கொண்டிருக்கிருனே அப்படியே சித்து சூரியாதி அஷ்டப் பிரகாசங்களையும் விளக்குகிருன்; அதாவது—சூரியன், சந்திரன், நக்ஷத்திரம், அக்கினி, மின்னல், இந்திரியம் (நேத்திரம்) மனம் (புத்தி) ஜீவனுகிய வைகளை அபேட்சியாமல் சுயம்பிரகாசமாய் இருந்துகொண்டு சர்வத்தையும் பிரகாசிக்கின்ற தெதுவோ அதுவே சித்து.

ஆனந்த லக்ஷணமாவது:—நித்திய, நிருபாதிக, நிரதிசய, சுகசொரூபமாய் உள்ளதுவே பிரமானந்தம்; அப்பிரமானந் தத்தைப் பிரமநிஷ்டாள் பிரம நிஷ்டையிலிருந்து அனு பவிப்பதாகையால் முமுட்சுக்களுக்கு அனுபவமில்லாமை யினுல் அவர்களுக்கு ஆனந்தலட்சணம் அறிவிக்கும் நிமித்தம் சுழுத்தியானந்தத்தால் தெரிவிக்கப்படுகின்றது. அதாவது சுழுத்தியின்கண்ணுள்ள பிரமானந்தம் ஜாக்கிரத்திலுள்ள விஷயானந்தத்தைப் போலக் கெடாமையின் நித்தியமென் றும், அன்னுதி உபாதியின்மையின் நிருபாதிகமென்றும், அப்சர அரம்பா ஸ்திரீ முதலிய அதிசய மின்மையின் நிரதி சயமென்றும் சொல்லப்படுவதா லானந்தம்.

'சுத்தியில் இரசிதம்போல' என்று காட்டியது. பின் புறத்தில் நிலநிறமாயும் திரிகோணமாயும் உள்ள முத்துச்

சிப்பியில் தூரதிருஷ்டியினாலும் சூரியகிரணத்தினாலும் தோற்றப்பட்ட வெள்ளியை, சத் என்று சொல்லினால் அது ஆபரணாதிகள் செய்வதற்கு உதவுதல் வேண்டும். அசத் என்றால், அது தோற்றாமற் போதல் வேண்டும். இப்படிச் சத்தென்றும் அசத்தென்றுஞ் சொல்லமுடியாமல் யாதொரு வஸ்துவானது உற்பத்திக்கு முன்னும் நாசத்திற்குப் பின்னும் நில்லாமல் மத்தியில் தோன்றுகிறதோ அது அத்தி யந்தாபவ அநிர்வசனீயமென்று சொல்லப்படும்.

கவி

திகழ்கின்ற சச்சிதா னந்தப் பிரமத்திடத்
    திப்பிதனில் வெள்ளி தெரிவதேபோல்
நிகழ்மூலப் பிரகிருதி யெனுமோர் சத்தி
    நேரிதன்பே ராதிபிர கிரதி யோடு
புகழ்மூலம் விந்துதத்வ மாதி மூலம்
    பொருமகங் காரமூல வகங்கா ரந்தான்
மகிழிந்தியங் காலதத்வ மவ்வி யக்த
    மகாதத்வ மாமெனும்பே ரனேகமாமே.

மூலப் பிரகிருதியாவது:—எல்லாப் பிரபஞ்சத் தோற்றங் கட்கும் தானே ஆதிகாரணமாக விருத்தலின், காரணமூலம் என்றதாம். உற்பத்திக்குத் தானமாக விருத்தலின் பிர கிருதி என்றனர். இச் சொல்லினை, பிர-சத்துவகுணம்; க்ரு-ரஜோகுணம், தி-தமோகுணம் என்றும் பிரித்துப் பொருள் கொண்டு முக்குண சமூகத்தை யுடைமையாக வைத்து விளங்குவது. இதனைச் சத்தி யெனச் சொல்வாரு

முண்டு; அதற்குக் காரணம், அது தன்னிடத்தில் எல்லாப் பிரபஞ்சங்களையும் தோற்றுவித்தலின் அவ்வாறு சொன்னதாம். இதனை,

தன்மாத் திரைகளனைத்தினையு மோரொன் றிரண்டாய்ப்
பகுத் தொன்றை
நன்னு லாக்கித் தன்பாதி யொழிந்த நாலி
னுடன் கூட்டி
பின்னே யல்லா தவை நான்கி யியல்பிற்
கூட்ட வானுதி
பின்னே தூல பூதமெனப் பிறங்கு மெனவே
பெயர்த் துரைத்தான்.

என்று தத்துவராயரருளிய பிரமகீதையி லறிக.

"தத்ப்ரஹ்ம ஶக்திஃ ப்ரக்ருதி ஸ்ஸர்வஜீவ ஸ்வரூபிணீ
யதஸத ச்சக்தி மத்ப்ரஹ்ம சேதம் ப்ரக்ருதி லக்ஷணம்"

எனக் கூறியது காண்க.

எதனாலே பிரம்மமானது சக்தியுடையதோ அதனாலே அந்தப் பிரம சக்தியானது சகல ஜகத்திற்கும் காரண ஸ்வரூபி ரூபமானப் பிரகிருதியாக விருக்கிறது. இதுதான் பிரகிருதியின் இலக்கணம்.

"சத்தியுஞ் சிவமுமாகித் தாணுவாய்ச் சகத்துக் கெல்லாம்
முத்தியு மளிக்கவல்ல முதல்வனே நமச்சிவாயா"

என நமச்சிவாய மாலையிற் கூறிய தறிக.

பிரகிருதி, மாயை, அவித்தை, தமசு, அஞ்ஞானம் ஆகிய இச் சொற்களைந்தும் ஒரு பொருள் பயப்பனவேயாம்.

மேலே சொன்ன மூலப்பிரகிருதியும் வேவ்வேறு வகையினை யுடையதான குணாதிகளுடன் கூடியிருக்கும். இவ்வாறு பல்வகை மாறுபாடுடனே இருக்கின்றனவாய குணங்களை விகிர்தகுணம் என்பது. விகிர்தம்-ஒன்றினொன்றின் பேதம். அது, பிரகாசம், பிரவிருத்தி, மோகம் என்கிற தான சத்துவ ரஜஸ் தமஸ் என்று ஒன்றுக்கொன்று பிரிவுபட்டு விளங்குவதாகிய உருவங்களுடையது.

மாயையாவது:—கூடாதவைக் கூட்டிவைக்குந் தன்மையுடையது. சக்தனை விட்டுப் பிரியாதது. ஆகாசாதி பூதங்களை உண்டு பண்ணுவது. அதுவே, சத்து, அசத்து, சதசத்தாகவும் விளங்குந் தன்மையது. நோக்கின் சத்தாகிய தோற்றத்தையும், அசத்தாகிய தோற்றத்தையு முடையது. சரவயம் நிரவயம் உடையது; சரவயம்-சஞ்சரிக்கும் அவயவம் உடையதெனத் தோற்றுவிப்பது. நிரவயம்-அவயவமில்லாததாகவுந் தோற்றுவிப்பது. சரவய நிரவயமாகித் தோன்றுதலுடையதென்பது, அவயவாதிகள் உள்ளன போலவும் இல்லன போலவும் தோற்றுவிப்பது. காண்கையில் பின்னமாவது. பின்னம்-வேறாகிய தோற்றத்தது. அபின்னம்-வேறாகிய தோற்ற மில்லாதது. பின்னா பின்னம்-வேறானதும் வேறாகாததுமாகத் தோற்று விக்கின்ற அகடித-கடனா சாமர்த்திய முடையது. இத்தகைய ஒன்பது பகுதியான குண விபூதிகளைத் தன்னிலுடைத்தாய் நிர்ணயித்துச் சொல்லக் கூடாதது எதுவோ அதுவே மாயை. மேலே கூறிய சத் எனக்கொள்ளுவோ மென்றால், அது பழுதைப் போல முக்காலத்திலும் கெடாமல் இருத்தல் வேண்டும்.

தத்துவ ஞானப்பேற்ருல் அது கெட்டுப் போகிறபடியால் அசத்தெனச் சொல்லுதல் வேண்டும். நோக்குவார்க்கு முயற் கொம்பைப்போல முக்காலத்திலும் இல்லாமற் போதல் வேண்டும்.

சத்தினைக் குணமென வறியாதார் பொருளெனக் கூறுவர். சத்தி சத்தனைத் தவிர உண்டென்பதற்கு யாதொரு உதாரணமும் இன்மையானும்,

''ஏகமே வாத்விதீயம் பிரமம்'' என்று சுருதி கூறுவதாலும் அது கூடாது. பரவஸ்து, தனது சத்தி விசிரிம் பித்த விடத்துச் சீவேச வுலகாய் விளங்குகின்றது. விளங்கினும், அவை பரவஸ்துவுக்கு வேறுபட்டனவல்ல; அதன்கண் பொன்னுபரணம்போல விருக்கின்றன. அச்சத்தியோ, சூரியகிரணம் அச்சூரியனை விட்டிராததுபோல அப்பரவஸ்துவில் இருக்கிறது. முக்குணங்களையுடைய அந்தச் சத்தியானது என்னுடைய சேர்க்கையினுல் இப்பியினிடத்தில் வெள்ளி போலவும், கயிற்றினிடத்தில் அரவுபோலவும், அதிட்டானமாகிய என்னிடத்திலேயே விசுவரூபமாய் இருக்குந் தன்மையை அடைகிறது எனப் பத்ம புராணத்தில் சிவகீதையிற் கூறியது இங்கு அறிவையாக.

மாயை இவைகளல்லவென நிரூபித்தல்

அகம்:—(நான்) அஞ்ஞானி என்கிற அனுபவம் இருப்பதால் அது அசத்தும் அன்று. சத்தசத் என்று சொல்லினுல், அது ஆதித்தனும் அந்தகாரமும் ஒன்ருயிருப்பதையொத்து விருத்தமாகக் காணுந்தன்மையாலே சத் தசத்து

அன்று என்று கொள்ளுதல் எவ்வாற்றானும் ஆராய்வார்க்கு விளங்காமற் போகாது.

சாவயம்:—சஞ்சரிக்கும் கை கால் முதலியன நோக்கின் இது அவயவாதி இல்லாமல் இருக்கவேண்டும். இந்திர ஜாலம்செய்பவனது சக்திக்கும், தீப்பொறியையுண்டாக்குகிற சக்திக்கும் எவ்விதம் சொரூபம் இல்லையோ அதுபோல ஜகத்துக்கும், ஜகத்துக்குக் காரணமாக விருக்கின்ற சத்திக்கும் ஒருவிதமான சொரூபம் இல்லாமையினாலே அது சாவயம் என்பது தகுதியுடைய தல்ல.

நிரவயம்:—அவயவ மின்மை. இது, முயற் கோடு போலும், ஆகாயத் தாமரைபோலும் தோன்றாமற் போதல் வேண்டும்; அங்ஙனமன்றிச் சீவேசுவர ஜகத்தாகத் தோன்றுவதனால், நிரவயமுடையது மல்ல வென்பது வெள்ளிடை மலையென விளக்க முறுவதாம்.

சாவய நிரவயம்:—அவயவ முடையது; அதில்லாதது என்னில், அது பெண்ணும் ஆணும் ஒன்றாய் இருக்கிறார்கள் என்பதுபோல விருத்தமானதால் ஒன்றுக்கு இரண்டு பக்ஷங் கூடாது. ஆதலால், சாவயமுமன்று; நிரவயமுமன்று எனவே சொல்லுதல் வேண்டும். இதனை,

"பின்னிய பகுதியாம் பிரதான மாயையு
மன்னிய புருடனு மானு யாதியாய்த்
துன்னிய விகாரமுந் தொல்லை யீசனி
லன்னிய மின்மையா லவனே யாகுமால்."

என ஈசுரகீதை தத்துவ நிஜத்தும்,

ஆணினோடு பெண்ணுமாகி யல்லவோடு நல்லவாய்
ஊனொ டோசை யூறுமாகி யொன்றலாத மாயையாய்ப்
பூணிபேணி மாயனாகிப் பொய்யினோடு மெய்யுமாய்க்
காணிபேணு மாணியாய்க் கரந்து சென்ற கள்வனே.

என்ற திருச்சந்த விருத்தங் காண்க.

பின்னம்:—பிரிவுபட்டது. உற்று நோக்கின் பிரமத்திற்கு வேறாகத் தோற்றல் வேண்டும். அங்ஙனஞ் சொல்லுவோமேயாயின், அத்துவிதம் என்கிற சுருதி வாக்கியத்திற்குப் பொருள் இல்லாமற் போகின்றது. ஆதலினால் இது பின்னப் பட்டதுவு மன்று என்று அறிதல் வேண்டும்.

அபின்னம்:—பிளவுபடாதது. அவ்வாறுகூறின் மாயை எனச் சொல்லாமல் பிரமம் என்றே சொல்லுதல் வேண்டும். இவ்வாறு சொல்லினால் பிரம நாமத்திற்கு விருத்தமாக அஞ்ஞானமென்றும், மாயையென்றும், பொய்யுருவ மென்றும், தமசென்றும், மோகமென்றும் அநேகம் பெயர்கள் சுருதிகளினிடத்துச் சொல்லப்படுவதால், அது அபின்னம் எனல் அடுக்காது. இதனை,

“மையாடு கண்ணியும் மைந்தரும் வாழ்வு
மனையுஞ் செந்தீ
யையாநின் மாயை யுருவெளித் தோற்ற
மகிலத் துள்ளே

மெய்யா யிருந்தது நாட்செல நாட்செல
வெட்ட வெறும்
பொய்யாய்ப் பழங்கதை யாய்க்கன வாய்
மெல்லப் போனதுவே.''

எனப் பட்டினத்துப் பிள்ளையாரும்,

''எங்குஞ் சிவமொழிய வில்லையவன் றன்னுணை
அங்கந் திரள்கருவி யாணவமாம்—பொங்குமிகு
மைசெய்த மாமாயை மாயைவினை மற்றனைத்தும்
பொய்பொய் பொய்பொய் பொய்பொய் பொய்.''

என்னுஞ் சிவானந்த மாலையுங் காண்க.

இவ்வளவு கூறியதால், பின்னம், அபின்னம், பின்னு பின்னம்; சத்து, அசத்து, சதசத்து, சாவயம், நிரவயம், சாவய நிரவயம் என்பனவாகாது அநிர்வசனீயமாய்ப் பிரமத் தின்கண் அரவாதற்குரிய சத்திபோன்றிருப்பது மாயை யாம். ஆவரண விட்சேப சத்திகளையுடைய அநாதி பாவ பதார்த்தம் மாயையென்பது அதன் லட்சணம்.

கலி

பந்தமாகியதோர்மூலப் பகுதியின் விகிர்ததத்வ
முந்தியசாத்துவீக முடனிரா சதந்தாமதந்தான்
சிந்தைசெய் காலைவெண்மைசெந்நிற நீலமென்பர்
அந்தமின் மறைகடன்னை யாய்ந்தமேலவர்கண்மாதோ.

சர்வஞ்ஞ வுபாதி:—சர்வஞ்ஞத்துவாதி கலியாண குணங் களையுடைய சற்குண ஐசுவரிய ஸம்பன்னரான ஈசுரப் பிரதி

பிம்பத்துக்குக் காரணமாக விருத்தலின், சர்வஞ்ஞ வுபாதி என்னும் சத்குணமாவதுவே சர்வஞ்ஞத்துவம். சர்வேசுவாத் துவம், சர்வாந்திரியாமித்துவம், சர்வகாரணத்துவம், சர்வ நியந்திரத்துவம், சர்வசக்தித்துவம் என்பன.

அன்றி, சத்தென்றுவது, அசத்தென்றுவது, குறிப் பிட்டுச் சொல்லக்கூடாமல் இருக்கிற (ஒன்று பிறக்கிறதற்கு முன்பு அஃதில்லையென்கிற பிராகபாவம்போல) உற்பத்தி யில்லாத மாயையானது (ஸ்தூல சூக்கும தேகங்களுக்குக்) காரண உபாதி என்று சொல்லப்படுகிறது. மூவகையாகிய உபாதிகளிலே நின்றும் வேறாக ஜீவனை நிச்சயிக்கவேண்டும். இதனை,

"அகிலகா ரணமா மாயையை மருவி யந்தரி
யாமியாய் மாயை
சகலகா ரியமாஞ் சூக்கும வுடம்பு சார்ந்துபொன்
கருப்பனென் றாகி
விகலமி தூல வுடம்பினை மேவி விராட்டென
நிற்குமென் றறிவாய்
திகழுறு பிரமஞ் சித்திரப் படமேற் சித்திர
மியாதென வினவில்."

என்ற வேதாந்த சூளாமணிச் செய்யுளில் கண்டறிக.

சர்வஞ்ஞத்துவம்:—எல்லா வான்மாக்களின் பாவ புண் ணிய கன்மங்களையும் ஒருங்கே அறிந்து, அவ்வக் கன்மங் களுக்குத் தக்கவண்ணம் இன்ப துன்ப ரூபமான போகாதி களை ஊட்டுவித்தல்.

சர்வேச்சுவரத்துவம்:—எல்லாச் சீவவர்க்கங்களேயும் படைத்தும், தன்னைப் படைக்கப் பிறிதொரு தலைவனில்லாமையும், தம்மாற் படைக்கப்பட்டவைகளை மாறுபடுத்த முடியாமையும், அணிமாதி சர்வ ஸம்பன்னரா யிருக்கிறபடியுமாகிய சர்வேசுவரத்துவமாம்.

மேலே சொல்லியதின் பொருள் விளக்கம்

இயற்கைஞானம், பேரருள், முடிவிலாற்றல், வரம்பிலின்பம், வரம்பில்காட்சி, முதலில்லாமை, அணிமாதி அஷ்டைசுவரியங்களோடு தூயவுடம்பு, மக்கள், பொன், மணி, அடிமை, வாகனங்களாகிய சகலவிதமான பொருள்களும் நிறைந்து குறைவில்லாமல் இருத்தல் தன்மையனவாம்.

இங்ஙனம் சொல்லியபடி, சர்வாந்தரியாமித்துவம் என்றமை—சர்வ ஆன்மாக்களினுடைய அந்தக் கரணங்களினுள் இறைவன் வீற்றிருந்து, அவரவர்கள் செய்துள்ள நல்வினை தீவினைகளுக்குத் தகுந்தபடி அவரவரை ஆட்டுவிக்கும் அதீதமான திறமை யென்பர்.

சர்வாந்திரியாமித்துவமாவது:—சர்வ ஆன்மாக்களுடைய அந்தக் கரணங்களுக்குள இருந்து நல்வினை, தீவினைப் பிரகாரம் அசைப்பிக்கிறபடியால் சர்வாந்திரியாமித்துவம்.

சர்வகாரணத்துவம்:—எல்லாப் பிராணிகளினுடைய சரீராதிக ளுண்டாவதற்குத் தான் காரணமாகவிருந்தும், அவைகள் நசிக்குங்காலத்தும் தான் ஒருவன் மாத்திரம் நசியாமலிருக்கும் விபவமே ஸர்வகாரணத்துவமாவது.

சர்வ நியந்திரத்துவமாவது:—இரவியாதி கிரகங்களும் இந்திராதி திக்குப்பாலகர்களும், சமுத்திர முதலானவைகளும் தங்கள் தங்கள் நியமந்தவறுமல் இருக்கும்படி செய்வதால் சர்வ நியந்திரத்துவம்.

சர்வ சத்தித்துவமாவது:—பிரம்மா முதலிய ஈச்சுவரர்களையும் விரித்தொடுக்கும் சக்தியையுடையவராகையால் சர்வ சத்தித்துவம்.

ஈச்சுவர காரண சரீரமாவது:—அவரது தூல சூக்கும சரீரத்துக்கு ஏதுவாயிருப்பதுவே.

சத்துவகுணம்:—சுத்தமான வெண்மைநிறம். தெய்வ வழிபாட்டிற்கு இன்றியமையாதது. ஆகாராதிகளின் அடியாகப் பரிணமிப்பது.

ரஜோகுணம்:—சிவப்பு; கோபத்திற்கு ஆதாரமாவது. பாவச் செயல்களில் மனத்தைத் தூண்டுவது.

தமோகுணம்:—நீலநிறமுடையது. துன்பத்திற்கெல்லாந் துணைசெய்வது. நரகத்திற் கொண்டு சேர்ப்பது.

வித்தை யென்பதும் ஞானமென்பதும் ஒன்று.

வியமோர் பகுதி தன்னின் முதற்குண விகிர்த சத்வ
மாயகற் பனைக்கோ வீச னரியகா ரணசரீரம்
மாயைநல் வித்தையேசர் வஞ்ஞனி னுபாதி யென்ன
தூயபே ரீரிரண்டாய்ச் சொல்லுவர் தூயர் மாதோ.

நிர்மல சலப்பிரதி பிம்பமாவது:—பரிசுத்தமான ஜலத்தில் பூரணசந்திரனுடைய பிரதிபிம்பம் எப்படித் தெளிவாய்த்

தோன்றுமோ அப்படிப்போல மாயையினிடத்தில் பிரம்மம் சலட்ண (சுயலக்ஷண) மாகத் தோன்றும்; தோன்றும் இந்தப் பிரதிபிம்ப சைதன்யத்தைச் சர்வஞ்ஞனுகிய ஈசுரனென்று சொல்லப்படும்.

சத்துவத்திற் சத்துவமாவது:—ஈஸ்வர பிரதிபிம்பத்துக்கு ஹேதுவாயிருக்கிற முதற்குணமாம்-சத்துவத்தி லிராஜதம், அவருடைய பிரதிபிம்பத்துக் கேதுவான இரண்டாங்குணம். சத்துவத்திற் றமதம், அவர் பிரதிபிம்பத்துக் கேதுவான மூன்றுங்குணம். இம் மூன்று குணத்தில் சிருட்டி திதி சங்காரம் என்னும் முத்தொழிற்குரிய விஷ்ணு பிரமா உருத்திரன் என மும்மூர்த்திகள் தோன்றினர்.

சிருட்டியென்பது-பிரபஞ்சவுற்பத்தி; திதியென்பது-பிரபஞ்சத்தை இரட்சித்தல்; சங்காரமென்பது - சாக்கிரம் சொப்பனமாகிய இரண்டு பிரபஞ்சத்தையும் சம்மாரஞ்செய்வது. அன்றியும், பிரம்மாவுக்குத் தொழில் சிருஷ்டியொன்றே, விஷ்ணுவுக்குச் சிருஷ்டியும் திதியும், உருத்திரனுக்குச் சிருஷ்டி திதி சம்மாரம் மூன்றும். உருத்திரனென்பது சமுசார சாகரத்தினின்றும் கரையேற்றுபவன். கற்பனையாவது காலத்திரயத்தினும் இல்லாத வஸ்து எதுவோ அது. ஆரோபம் அத்தியாசம் கற்பனை இவை மூன்றும் ஒரு பொருட் சொற்கள். இப்படி மூலப்பிரகிருதியின் சத்துவ குண கற்பனை சொல்லப்பட்டது.

சுத்தசலங் தனின்மதியின் பிரதி பிம்பந்
தோற்றலென முன்னுரைத்த மாயை தன்னில்
நத்துபிர பஞ்சலட் சணம தாக
நவில் பிரமச் சாயைபிறங் கிற்ற தன்பேர்
நித்தியசர் வக்கியனு மீசுரன்ரு
னிகளீசன் காரணமா மாயை யின்பால்
தொத்துசத்து வத்தின்சத்து வங்கள் மூன்றுந்
தொடங்குங்கால் மூவரதிற் ரேன்று மாதோ.

இதுவும் கீழ்ச்செய்யுளும் குளகம்

ஈசன்பாற் சத்துவத்திற் சத்துவந்தா
னிசையவரும் விண்டிந்த வுலகைக் காப்பன்
நேசன்பாற் சத்துவத்தி லிராசதந்தான்
நேரவரும் பிரமனுல கைப்படைப்பன்
தேரன்பாற் சத்துவத்திற் ருமதந்தான்
றிரியவரு முருத்திரனிவ் வுலகழிப்பன்
பேசரிய பிரகிருதி முதற்குணத்தின்
பெருமைதனை யிதுவரையும் பேசினேமே.

இன்னும் மேலுரைத்த பிரமத்தினிடத்தில் சத்தியினிடத்தில் ரசிதம் தோன்றினல்போலும், தீபத்தினிடத்தில் நிழல் தோன்றினல்போலும், மூலப்பிரகிருதி என்னும் ஓர் சத்தியுண்டாயிற்று. இதற்கு முறையே சாந்தவிருத்தி, கோரவிருத்தி, மூடவிருத்தி என்றும் பெயர். அதையே பிரமத்தில் ஓர் அணுவென்றுஞ் சொல்லத்தகும். அந்த மூலப்

பிரகிருதியாவது - விகிர்தசத்துவம், ரஜசு, தமசு என்னும் மூன்று குணங்களுடனே யுள்ளது. அம் முக்குணங்களில் பிரதமமான சத்துவகுணமே சுத்த மாயையென்று சொல்லப் படும். அம்மாயையினிடத்தில் நிர்மல ஜலப்பிரதி பிம்பம் போலப் பிரமம் சுலட்சணமாய்ப் பிரதிபிம்பிக்கும். அந்தச் சைதன்னியத்திற்குச் சர்வஞ்ஞனாகிய ஈச்சுவரன் என்று பெயர். இவ் வீச்சுவரனுக்கு மேற்சொன்ன சுத்தமாயையே காரண சரீரமாம்.

அந்தச் சத்துவகுண சுத்த மாயையினிடத்தில் சத்து வத்திற் சத்துவம், சத்துவத்தில் ரஜசு, சத்துவத்தில் தமசு என்னும் முக்குணங்களுண்டு. அதிற் சத்துவத்திற் சத் துவஞ் சிலாக்கியமாம்போது அதிற் பிரதிபிம்பித்த ஈச்சுவர னுக்கு விஷ்ணு என்று பெயர். சத்துவத்தில் ரஜசு பிரதான மாம்போது அதிற் பிரதிபிம்பித்த ஈச்சுவரனுக்குப் பிரமா வென்று பெயர். சத்துவத்தில் தமசு சிரேட்டமாம்போது அதிற் பிரதிபிம்பித்த ஈச்சுவரனுக்கு ருத்திரன்என்றுபெயர். இப்படி மூலப் பிரகிருதியின் சத்துவகுண கற்பனை சொல்ல லாயிற்று. இனிமேல் மூலப் பிரகிருதியின் ரசோகுண கற்பனை சொல்லப்படும். இதனை,

விரிவுரு பஞ்ச கோச விலக்ஷண வுருவ மாகிக்
கருதிய வவஸ்தை மூன்றிற் கரியதாய் நிருவி கார
நிருமல போதா னந்த நிலைமையா மிவ்வான் மாவை
யரிவனே விவேகி யானே னகமென வறிய வேண்டும்.

ஆக்கையு நீயல்ல வைம்பொறியு நீயல்ல
தாக்குக் கரணங்க டானல்ல—சூக்க
வுடலல்ல சீவனல்ல வுண்மைநீ யென்றூர்க்
குடலுருகி நிற்பே னுவந்து. என்பவைகளா லறிக.

அவித்தையாவது:—மூலப்பிரகிருதியின் ரஜோகுணம் வித்தையினுல் (ஞானத்திஞல்) கெடுவதாயிருப்பதாலும் மலின உபாதியானதாலும் (மலினம், கலக்கம்) ஜீவன் பிரதி பிம்பத்திற்கு ஏதுவானதாலும் அவித்தை.

ஜீவகாரண சரீரமாவது:—ஜீவனுடைய காரிய சரீரமான தூலம் சூக்குமம் இரண்டையும் விரித்து ஒடுக்குகிறதற்கு இந்த அவித்தை ஏதுவாயிருத்தலின் ஜீவகாரண சரீரம்.

ஒன்றற்கொன்று தாரதம்மியமாவது:—ஜீவர்கள் வெவ்வேறு பேதகமாகவிருத்தல். (ஏற்றக் குறைச்சலாயிருப்பது) அது வெள்ளை, சிவப்பு, கறுப்பு இம் மூன்று நிறங்களையுடைய நூல்களாலாகிய கயிற்றில் மூன்று நிறங்களும் கலந்து நிற்பதுபோல, ஜீவர்களிடத்தில் முக்குணங்களும் கலந்து நிற்கும்.

கவி

அந்தவவ் வியத்திரண்டாங் குணமதே யவித்தைசீவ
பந்தகா ரணசரீரம் பகர்கிரி நூல்சேர்ந் தாற்போல்
உந்தவே யுலகிலேயுற் பவித்தொன்றற் கொன்றுவ்வாத
வந்தமி லுருவம் வெவ்வே றுனபேதங்க ளாமே.

மலினஜலப் பிரதிபிம்பமாவது:—அவித்தையினிடத்துப் பல ஜீவர்களாகத் தோற்றுவித்தல்.

கிஞ்சிக்னனுவது:—அற்ப ஞானமுடையவனுய் முன்பின் ஒன்றையுமறியாமல் தேகாதிகளில் நானென்றும், அதன் அபிமாஞுகாரத்தினுல் துக்க ஜீவனம் பண்ணிக்கொண் டிருக் கிறபடியால் கிஞ்சிக்னன்.

கவி

கலங்கனீ ரதனிற் ரேன்றுங் கலைமதி யொளியைப் போல
பலமுறு மவித்தை தன்னிற் பிரமத்தின் பிரதி பிம்பம்
இலகிடும் போது பேரோ விரிசிதா பாச ஜீவர்
நலமில்கிஞ் சிஞ்ஞு ரென்று நவிலுவர் நல்லோர் மாதோ.

சிதாபாசனுவது:—சித்தைப்போலத் தோன்றியும், சித் துக்குரிய சச்சிதானந்த லக்ஷணமில்லாமையால் சிதாபாசன்.

பிராஞ்ஞனுவது:—மிகுந்த ஞானத்தை யுடையவனுய்க் கரணேந்திரியங்களின்றி, சுழுத்தி யவஸ்தையிலுள்ள பிரமா னந்தத்தைச் சூட்சும விருத்தியால் அனுபவிப்பன். இராச தத்தில் சத்துவமாவது-ஜீவன் பிரதிபிம்பத்துக்கு முதல் குணம்.

இராசதமாவது	2-வது குணம்
தாமதமாவது	3-வது குணம்

தத்துவஞான நிஷ்டனுவது:—"பிரம்மை வாஹம்" என்று, அதாவது, பிரம்மமே நான் என்று இடைவிடாமல் சொரு பத்தில் அழுந்தியிருப்பவன். அஃது எவ்வாறெனில்- முப்பானேந்து தத்துவங்களும் ஓரோர் அவஸ்தையின்கண்

நசித்துப் போதலின், அந்தத் தத்துவங்கள் அகன்று முப் பத்தாறும் தத்துவமாகிய பரதத்துவமே தான் என்று அநு பவித்து நிற்றலின், துவித விசிட்டாத்துவித ஞானமில்லாமல் அப்பிரத்திபந்த அபரோக்ஷ சாக்ஷாத் காரமாயும் ஜீவேசுவர ஜகத்து, மலடி மகன் முதலிய அறுபத்து நான்கு திருஷ்டாந் தங்களினால் பத்தொன்பது வித்தை யென்றும், சின்மாத் திரமே உண்மை யென்றும் அறிந்தவனேயாம்.

மற்றும் குளிர்ச்சி நெகிழ்ச்சி வெண்மை வடிவம் ஜலம் என்றுரைப்பதினாலும், பிரகாச உஷ்ண லோகித வடிவம் அக்கினி என்றுரைப்பதினாலும், ஜலமும் அக்கினியும் மும் மூன்று பொருளாகாமல் எங்ஙனம் ஒவ்வொரு பொரு ளாகவே யிருக்கின்றனவோ அங்ஙனமே சச்சிதாநந்த வடிவம் பிரமம் என்றுரைப்பதினாலே பிரமம் மூன்றுகூறுடைய பொருளாகாது ஒரே பொருளாயிருக்கிறதென்று அறிதல் வேண்டும்.

"சுருதியினு ளேகமே வாத்துவித மென்னுஞ்
சொற்கிடையு ளேகமெனுஞ் சொல்லதனுக் கயிக்க
மரிதிலுண ரேவவெனு மிடைச்சொற்குத் தேற்ற
மத்துவித மெனுமொழிக்குத் துவிதவிலக் காகக்
கருதுபொருள் வருதலினா லிம்முறையே மாயா
கற்பனைகள் கடந்துநிர வயமாகி யென்றுந்
திரிதலில்சின் மயமாகு மொருபிரமந் தனக்குத்
தெரித்தசுவ கதமுதலா யினமூன்று மிலையே."

என வேதாந்த சூளாமணி கூறுவது இங்கு அறியத்தக்கதாம்.

என்று மேலோர் வாக்கின் வண்ணம் ஆடவரும் பெண்டிரும் இராசதத்தில் சாத்துவிக குணத்தை வகித்துப் புணருங்கால் உண்டான கருவினில் தோன்றினவனே தத்துவ நிஷ்டன் எனக் கொள்ளுதல் வேண்டும்.

காமக் குரோத பரனான கன்ம நிஷ்டன் பாவ புண்ணியாதி கருமத்தில் அழுத்தம் உற்றிருப்பவன். மாதா பிதாக்-கள் இராசத குணத்தை வகித்துச் சேருங்காலத்தி லுண்டான கருவின்கண் உதித்த சிசுக்கள் காமக் குரோதாதி குணங்களையுடைய கன்ம நிஷ்டனாகிறான்.

கவி

சொல்லிய வவித்தை யென்னத் தொடரிரா சதகுணத்தில்
நல்லசாத் துவிதமாதி நவில்குணஞ் செறிய வத்தால்
வல்லகா ரியமாஞ்சீவர் மருவமுக் குணத்திற் றோன்றி
யெல்லையிற் பேதமானு ரென்பர்நூற் றெரிந்த மேலோர்.

இன்னும் ஸ்திரீ புருஷர்கள் இராசதத்தில் சாத்துவித குணத்தை வகித்துப் புணருங்கால் உண்டான கருவிற் றோன்றியவன் தத்துவஞான நிஷ்டன்.

காமக்குரோத பரனான கன்ம நிஷ்டனாவது:—பாவ புண்ணிய கருமத்தில் அழுத்த முற்றிருப்பவனே, மாதா பிதாக்கள் இராசத குணத்தை வகித்துக் கூடுங்காலம் உண்டான கருவின்கண் ணுதித்த சிசுக்கள் காமக்குரோதாதி குணங்களையுடைய கர்மநிஷ்டராகிறார்கள்.

சோம்பல் நித்திரை மயக்கம் இத் தன்மையான குணங்களை யுடையவனாவதற்குக் காரணம் யாதெனில், இராகம் துவேஷம் முதலிய பதின்மூன்று குணங்களை யுடையவனாக விருத்தலேயாம். இது பெற்றோர்கள் இராசதத்தில் தாமத குணத்தை வகித்துப் புருணங் காலத்தில் உண்டான புதல்வனேயாம். இத்தகையோனே கொலை, களவு, கள், காமம், குருத்துரோகம் முதலிய பஞ்சமகா பாதகங்களை யுடையனாகின்றான்.

கலி

காதல்சே ரானும் பெண்ணும் கலவிகள் செய்யுங் காலம்
நீதிசே ரசசிற் சாந்த நிகழவக் கருவே ஞானி
யோதிய ரசசி லேரா சதமுறு கருவே காமி
சோதனை ரசசி லேதா மதமிசை கருவே சோம்பி.

இப்படி மூலப்பிரகிருதியின் ரசோகுண கற்பனை சொல்லப்பட்டது.

இனி, மூலப்பிரகிருதியின் தமோகுண கற்பனை சொல்லப்படும்.

ஈசுவரானுக்கிரகத்தினாலே சர்வ ஜீவர்களுக்கும் போக போக்கிய முண்டாகும் பொருட்டு மூலப்பிரகிருதியின் தமோகுணமாகிய அஞ்ஞானத்தினின்றும் ஆவரண சக்தி; விட்சேப சத்தி என இரண்டு சத்திகளுண்டாயின.

ஆவரணம்:—மறைத்தல், மூடல்.

விட்சேபம்:—நினைத்தல், தோற்றல்.

கலி

பொங்குமா யாவிநோத பூரண னருளினாலே
தங்குபூ வுயிர்கட் கெல்லாஞ் சகலபோ கமுமுண்டாக
மங்குதா மதகுணத்தில் வருகரு சத்திதோன்று
மிங்கிதா வரணங் தோற்ற மீதிலா வரணஞ் சொல்வாம்.

ஆவரணம்:—மறைத்தல்; மூடுதல். இது பின்னர் ஒரு சமயம் சிதாத்மப் பிரசங்கம் நேர்ந்த விடத்துப் பிரஹ்ம மில்லை; இருந்தால் அது தோன்றாதா என்னும் இவ் விரு வகைச் சந்தேகமே அஞ்ஞான காரணமான ஆவரணமாம். ப்ரும்மம் ஏன் இல்லை என்பதற்கு நாஸ்தி என்று பெயர். அப்படிப் ப்ரும்மம் இருந்தால் அது தோன்றாதா என்பதற்கு நாபாதி என்று பெயர்.

விட்சேபம்:—நானே கர்மத்தைச் செய்பவன். நானே கர்ம பலத்தை அநுபவிப்பவன் என்று எண்ணுவதே விட்சேபத் திற் தோற்றமாம். இதனைப் பிராந்தி என்றும், சோகம் என்றும் சொல்லப்படும். இவ்விரண்டும் பந்தநிலையாம்.

ஆவரண சத்தியாவது:—கடவுளையும், ப்ரத்தியேகாத்ம சுவரூபமான தன்னையும் சுருதி, யுக்தி, அநுபவம் ஆகிய வற்றால் அறிந்துகொண்ட நிஷ்டர்களையும் தவிர, இதர ஜீவர் கள் அனைவர்களுக்கும் ப்ரும்மம் இல்லை என்றும் அஃது இருந்தால் தெரியாதா என்றும் அவ் விருவகை விருத்திக்கும் அவர்கள் ஞானத்தை அபகரித்துக்கொண்டு, விட்சேப சத்தியினாலுண்டான உலக தேவ தத்துவங்களாகிய, ஸ்தூல,

சூக்கும, காரண சரீரங்களின் பேதமும் சிதாபாசன், சைதன்யம், சாட்சி இவைகளின் பேதாபேதமும் தெரியவொட்டாமல் மறைக்கும்.

கவி

ஈசுரன் றனையும் தன்னை யெய்துஞா னியையு மன்றி
பாசமாக் குவதற் கான பகர்நாஸ்தி நபாதி யென்று
பேசிய சீவர்க்குள்ள பேரறி விழக்கும் வண்ணம் [ம்.
மாசில்விண் டறைதிக் கெல்லா மறைபிருள் மழைபோல் நாடு

ஆவரண சத்தியினால் மறைக்கப்பட்ட ஜீவர்கள் இருபத்தொன்பது தத்துவங்களையும் ஒருமைப்பாடாக நான் என்று அபிமானிப்பர். இதனையே வேதாந்த நூலார் **அகங்கார கிரந்தி** என்றும், **சம்சாரபந்தம்** என்றும் சொல்லுவர்.

தத்துவம்—பதங்களின் மெய்ப்பொருள். தத்துவங்களுக்குள்ள பேதமாவன:—ஸ்தூல சரீரங்கள் ஆறு; சூக்கும சரீரத்துவம் இருபது; காரண சரீரத்துவம் இரண்டு. மகாகாரணமாகிய சாட்சி ஒன்று. ஆக தத்துவம் இருபத்தொன்பதில் இருபத்தெட்டாம் சாட்சியால் ஸ்தூல, சூக்கும, காரண சரீராதி பேதங்களை படத்தில் குறிப்பிட்டவைகளால் அறிக.

அகங்கார கிரந்தியாவது:—தத்துவங்கள் இருபத்தேழையும் பொருள் இல்லாதபடி கூட்டிக் குழப்பிக்கொண்டு நான் என்பதாயும், சத்குரு கடாக்ஷம் இல்லாமல் அவிழ்க்க முடியாததாயுமுள்ள ஓர் அகங்காரமாகிய முடிச்சாம்.

சம்சார பந்தமாவது:—ஜனன மரணமேயாம். அதனில் கட்டுப்பட்டு வருந்தித் துன்புற்றுக் கிடப்பதே பந்தமாம்.

அறியப்பட்டபடியினுல் அனுத்மாக்கள் என்றும், சாட்சி யாகிற தன்னை ஆத்மாவென்றும் இருபத்தெட்டும் வெவ் வேருக இருக்கிறபடியால் பேதமின்றும், சாட்சி தாஞகவே இருப்பதால் அபேதமின்றும், இருபத்தெட்டும் அநுத, ஜட, துக்க மென்றும், தான் சச்சிதானந்த சுவரூப மென்றும் எக்காலத்தும் யாவராலும் தான் சாட்சி என்றும் திடமாக மாருது இருப்பதே பேதம் அறிவதாம்.

சம்சார பந்தமாவது:—ஜனன மரணமே சம்சாரம், அத னில் கட்டுப்பட்டிருப்பதே பந்தம்.

சற்குரு:—இந் நாமம் அமைந்ததற்குக் காரணம் யாதெ னில், சத் ரூபத்தை போதிக்கிறபடியாலும், தான் சத்தாய் இருக்கிறபடியாலும் குருவை சத் என்றதாம். குரு என்கிற வார்த்தைக்குப் பொருள் யாதெனில், சீடனுடைய அந்த காரத்தைத் தன் ஞானப் பிரகாசத்தால் அழிக்கும் தன்மை யுடையவன். குரு என்பதில் "கு" அஞ்ஞானம்; "ரு" ஞானம். இதனுல் ஞானத்தால் அஞ்ஞானத்தை நிவர்த்தி செய்பவன் குரு என்று ஆயிற்று. இக் குரு போதக குரு, வேதக குரு, நிகித குரு, காமிய குரு, சூசக குரு, வாசக குரு, காரக குரு, விகித குரு என எட்டு வகைப்படும். அவருள்:- சாஸ்திரத்தில் உள்ள அர்த்தங்களை விளக்கமாக எடுத்து போதிப்பவன் போதககுரு எனப்படுவர். பிருதிவி யாதித் தத்துவங்களை நிஷேதித்து பரதத்துவத்தைத் தரிசிப்பிக்

கின்றவர் வேதக குரு எனப்படுவர். ஸ்தம்பனம், மோஹனம், வசியம், ஆகர்ஷணம், உச்சாடனம், வித்வேஷணம், பேதனம், மாரணம் என்னும் எண்கருமங்களால் இகலோகத்தில் சுகமும், பரலோகத்தில் துக்கமும் உண்டு பண்ணுகிறவர் நிகிதகுரு எனப்படுவர். நல்வினை புரியுமாறு உபதேசித்துப் பரலோகத்தில் சுகமடையச் செய்கிறவர் காமியகுரு எனப்படுவர். விவேகவாயிலாக சம தமாதி குணங்களை உண்டுபண்ணுகிறவர் சூசககுரு எனப்படுவர். நாமரூப வடிவ விஷயங்களை மித்தியா வடிவமாகத் தரிசிப்பித்தல் வாயிலாக ஆத்மாவினிடத்தில் பிரியத்தை உண்டுபண்ணுகிறவர் வாசககுரு எனப்படுவர். ஜீவப்ரும்ம ஐக்கிய ஞானத்தைப் போதிக்கிறவர் காரககுரு எனப்படுவர். ஜீவப்ரும்ம ஐக்கியத்தில் தோன்றிய சந்தேகத்தை ஒழிக்கும் வாயிலாக ஸர்வதுக்க நிவிர்த்தி, பரமாநந்தப் பிராப்தி வடிவ நித்திய முத்தியை அருள்செய்பவர் விகிதகுரு எனப்படுவர். இக்குருவென்கிற இரண்டு அக்கரங்களில் கு என்னும் அக்கரம் சுத்த நிர்க்குண சொரூபமும், ரு என்னும் அக்கரம் கேவல நிராகாரமும் ஆதலால் சுத்த நிர்க்குண நிராகார பரப்பிரமத்தை இது எனும்படி போதிப்பவனே குருவெனப்படும். அன்றி, குகாரம் மாயை என்றும், ருகாரம் அந்த மாயையை நாசஞ் செய்யும் பரப்பிரமமென்றும் சொல்லப்படும். இப்படி குருவென்கிற பதம் மாயையாகியும் பரப் பிரம்மமாகியும் இருக்கின்றது. குகாரமென்றால் சத்துவ ரஜோ தமோ குணங்களில்லாதது எனப்படும். ருகாரமென்றால் கர சரணாதி அவயவங்களற்ற நிராகார சொரூபமெனப்படும்.

ஆதலால் குரு வென்னும் பதத்துக்குச் சுத்த நிர்க்குணமாய் ரூபமற்ற நிராகாரமாய் இருக்கும் பரப்பிரமம் எனப் பொருளாம். இதனை,

"குருஸ்ஸாக்ஷாதாதி நாராயணஃ புருஷஃ|
ஸஆதி நாராயணோஹமேவ| தஸ்மாந்மாமேகம் ஶரணம்
வ்ருஜமத்பக்தி நிஷ்டோ பவ." என்றும்,

"நமஃ ஶிவாயகுரவே நாதபிந்து கலாத்மநே
நிரஞ்ஜநே பதம்யாதி நித்யம்யத்ர பாராயணம்:"

வருவனவும்,

குருவே சிவமெனக் கூறின னந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவமாகிக் கோனுமாய் நிற்குங்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே."

எனத் திருமந்திரங் கூறுவதும் அறிக.

கவி

எங்குமாம் பிரமத்திற்கு மிசைபுற விகாரங்கட்கும்
பொங்குகூ டத்தனுக்கும் புகலக விகாரங்கட்கும்
தங்கிய பேதமேதும் தான்றெரி யாதுமூடி
இங்கது பவமுண்டாக்கு மினிவருதோற்றஞ் சொல்வாம்.

விட்சேபசத்தியின் தன்மையைக் கூறல்:—இனி விட்சேப சத்தியி னிடத்திலுஞ் சத்த தன்மாத்திரையான சூக்குமஆகாசம் பிறந்தது; ஆகாசத்திலும் பரிச தன்மாத்திரையான சூக்குமவாயு பிறந்தது; அவ்வாயுவில் ரூப தன்மாத்திரையான சூக்கும அக்கினி தோன்றிற்று; அவ்வக்கினியில் ரச

தன்மாத்திரையான சூக்கும அப்பு தோன்றிற்று; அவ் வப்புவில் கந்த தன்மாத்திரையான சூக்கும பிருதிவி தோன் றிற்று. இவ்வாறு தோன்றிய சூக்கும பஞ்சபூதத்திற்கு உபாதானமா யிருக்கின்ற (காரணமாயிருக்கின்ற) அவ் விட் சேப சத்தியினிடத்தில் தமசில் சத்துவம், தமசில் ரஜசு, தமசில் தமசு என்ற முக்குணங்களும் தோன்றி அதன் காரியமாகவே மேற்கண்ட பஞ்சபூதங்களு முண்டாயின. இப் பஞ்சபூதங்களைத் தன் மாத்திரைகளென்றும், சூட்சும பூதங்களென்றும், முக்குண பூதங்களென்றும், அபஞ்சீகிருத பூதங்களென்றும் சாத்திரங்களிற் சொல்லப்படும்.

சத்த தன்மாத்திரையாவது:—சத்தம், ஓசை, தன்மாத் திரை, நொய்யபூதம் (தன்னித்யகுணம்) இந்த முக்குணத் தோடு கூடிய பஞ்சபூதங்களைந்தும் நொய்யதாகவும் போக சாதன சரீரத்துக் கேதுவாகவு மிருக்கும். தன்மாத்திரை யென்பது, இவைகள் ஒன்றோடொன்று சேராதிருத்தல். இது ஈசுவரானுக்கிரகத்தினால் மூலப்பிரகிருதியின் தமோ குணத்தி லுண்டானவைகள்.

சூட்சும பூதமென்பது:—நேத்திரத்துக்குப் புலப்படாமல் பிருதிவி தூசியாகவும், அப்பு நயப்பாகவும், தேயு வெப்ப மாகவும், வாயு பலவீனமாகவும் இவை நான்கும் ஆகாயத்தி னிடம் ஐக்கியமாய் அவ்வாகாயமும் சத்தரூபமா யிருத்தல் கொண்டு இவற்றைச் சூட்சும பூதங்களென்றும், இவ்வைந் தும் தனித்தனி அற்பமா யிருப்பதால் நொய்ய பூதங்க ளென்றும், பஞ்சீகரிக்கப்படாமையினால், அபஞ்சீகிருத

பூதங்களென்றும், இப் பூதங்களும் அவ் விட்சேபத்திற்குண்டான முக்குணங்களுடனே கூடியிருப்பதால் முக்குண பூதங்களென்றும் பெயர். விட்சேபசத்தி:—இல்லாததை யுண்டு பண்ணத்தக்கது. முடிவில் முத்திக்கு வழிகாட்டுவது. இப் பூதங்களுக்கு அதிதேவதைகள் முறையே சதாசிவம், மகேசுரன், உருத்திரன், விஷ்ணு, பிரம்மா ஆகிய இவர்கள். இன்னும் விட்சேபசத்தி யென்பதே ஈசுவர சங்கற்பமாயிருத்தலால், அதின் காரியமும் ஈசுவரனுக் கன்னியமல்ல; சூக்கும பூதத்திற்குக் காரணமாயிருந்தது விட்சேபசக்தியினிணைப்பேயாம். பிறவும் மாயா காரணமாகிய காரணபூதமென்பர்.

ஞானமாகிய அக்கினியைப் பிரகாசிக்கவிடாமல் மக்கனஞ் செய்துகொண்டிருக்கிற ஜலரூபமாகிய அக்ஞானத்தினிடமாய்ப் பிரணவமாகிய விந்தைப் பிரம்மன் மகிமைப்படுத்தியவுடனே அங்ஙனம் விட்சேபசக்தி யுதயமாக ஓர் கருவாய் திரண்டது. அக் கரு பூரணமெய்தியது தெரிந்து இரகசியத்தைவிட்டுப் பகிர்முகப்படுத்தியபோது அது சாத்வீக ராஜத தாமதமென்னும் முக்குணங்களுந் தோன்றக் கெடாத சூட்சும பஞ்சபூதங்களும் முறையே அச் சக்தியினிடம் இருந்துண்டாயின.

கவி

இந்தவிட் சேபந் தன்னி லிலகிய விண்ணும் விண்ணில்
வந்தது காலாங் காலில் வருநெருப் பாநெ ருப்பிற்
றந்தது நீரா நீரிற் றரையதா மப்பூ தங்கள்
சந்தத நொய்தாம் போக சாதன தனுவுண் டாகும்.

சூட்சுமபூதங்களின் சத்துவகுண ரஜோகுண அம்சமான ௨0 தத்துவங்களாலேற்பட்ட இலிங்கசரீரமாகிய

சூட்சுமசரீரபாவனை.



சர்வாங்கத்திலுமுள்ள அகங்காரம் பிருதிவியம்சம் .5. துவக்கு வாயு அம்சம் .7. வியானன் வாயு அம்சம் 11.

இந்தச்சரீரம் பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயம் என்னும் ௩. கோசங்கட்குட்பட்டது.

சூட்சுமசரீரமாவது:—விருத்திபூர்வமாக ஜீரணிக்கிறது. அதாவது:—அகந்தை, மமதாகாரமாய்ப் பரிணமிக்கிறதே விருத்திகளின் விகாசமும், விருத்திகளின் சங்கோசமும். விகாசம்—விரிவு, சங்கோசம். சுருங்குதல், விருத்தி, வளர்தல், சூட்சுமசரீர தத்துவம் (20) அதாவது அந்தக்கரணம் 5, ஞானேந்திரியம் 5, கன்மேந்திரியம் 5, வாயுக்கள் 5 ஆக 20 இவைகளைப் படத்தில் பார்க்க.

கவி

மாயையி லுதித்த வீசன் வித்தையில் வந்த ஜீவற்
காயபல் போகஞ் செய்ய வைம்பூதச் சற்கு ணத்தை
ஏயதோ ரீரிரண்டாக் கியவொற்றிற் காண மைந்துந் [ர்.
தூயதோர் பகுதி ஞானேந் திரியமாய்த் தொகுத்தார் தூயோ

அந்தக்கரணமாவது:—உள்ளம், மனம், புத்தி, சித்தம், அகங்காரணமென (5) இவைகள் முறையே தரித்தல்; அதாவது சகலபூதங்களுக்கு மிடங்கொடுத்தல், விடயங்களைப் பற்றி யலைதல், ஒவ்வொரு பொருளையும் விளக்கிக் காட்டல், விடயங்களி லிழுத்துச் செல்லல், நானென் றபிமானித்துக் கடினமாய் நிற்றல் முதலிய குணங்களையுடையன.

இவ் வந்தக்கரணங்களுக்கு அதிதேவதைகள் முறையே க்ஷேத்ரக்கியன் (ஜீவன்) சந்திரன், பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் இவைகளுக்கு கோளகை (இடங்) கள் முறையே புருவமத்தி கண்டம், இருதயம், நாபி, மூலம், தீபச்சுவாலை

யைப்போல அனேகவித பரிணாமத் திரவிய போக்கிய ரூபமே அந்தக்கரணமாம்.

காரண சரீரமாவது:—சூக்கும காரண சரீரங்களான விருத்திகளின் விகாசமும் சங்கோசமும் எங்கே காணப்படு கின்றதென்னில்; மூடர்களினிடத்தில் விகாசமும், முமு க்ஷுக்களிடத்தில் சங்கோசமும் காணப்படுகிறது. ஆகையால் இவைகளுக்குச் சரீரமென்று பெயர்.

தேகம்:—தகிக்கப்படுவதால் தேகம். பூதாக்கினியால் தூலசரீரமும், இராகத் துவேஷாதிகளால் சூட்சுமதேகமும், ஞானத்தினால் காரணதேகமும் தகிக்கப்படுகிறபடியால் தேக மென்று பெயர் வந்தது. சூட்சும சரீரத்துக்கு லிங்க சரீர மென்று பெயர் வந்ததாவது ஜீவனுக்கு பாகியாந்தரத்தி லுள்ள சத்தாதி விஷயங்களை அறிவிக்கிறபடியினால் இலிங்க சரீரமென்று பெயர்.

ஞானேந்திரியமாவது:—சுரோத்திரம், (செவி) துவக்கு, (தோல்) சட்சு (கண்) சிங்நுவை (நாக்கு) அக்கிராணம் (நாசி) இவ்வைந்துமாம்.

சுரோத்திரம்:—ஆகாசத்தின் சத்துவகுணத்தின் இரண் டாவது பகுதியிலுண்டானதால் ஆகாயத்தின் குணமான சத்தத்தை மாத்திரம் அறியும்.

துவக்கு:—இது வாயுவின் சத்துவகுணத்தி னிரண்டாம் பகுதியிலுண்டானபடியால், வாயுவின் குணமாகிய பரிசத்தை மாத்திரம் அறியும்.

சட்சு:—அக்கினியின் சத்துவகுணத்தி னிரண்டாம் பகுதியி லுண்டானபடியால், அக்கினியின் குணமாகிய ரூபத்தை மாத்திரம் அறியும்.

சிங்குவை:—அப்புவின் சத்துவகுணத்தி னிரண் டாம் பகுதியி லுண்டானபடியால், அப்புவின் குணமான இரசத்தை மாத்திரம் அறியும்.

ஆக்கிராணம்:—பிருதுவியின் சத்துவகுணத்தி னிரண்டாம் பகுதியி லுண்டானபடியால், பிருதிவியின் குணமான கந்தத்தை மாத்திரம் அறியும்.

ஆகாயத்துக்குத் தன் நித்தியகுணம் சத்தம் - வாயுவிற்குத் தன் நித்திய குணம் பரிசம்; சேர்க்கை குணம் சத்தம் ஆக 2. தேய்வுக்கு தன் நித்திய குணம் ரூபம்; சேர்க்கைக் குணம் சத்தம் பரிசம் ஆக 3. அப்புவுக்குத் தன் நித்திய குணம் ரசம் சேர்க்கைக் குணம் சத்தம் பரிசம் ரூபம் ஆக 4. பிருதிவிக்குத் தன் நித்திய குணம் கந்தம் சேர்க்கைக்குணம் சத்தம் பரிசம் ரூபம் ரசம் ஆக 5. அதிதேவதைகள் முறையே திக்கு, வாயு, சூரியன், வருணன், அசுவினி.

கோளகை (தானம்) முறையே, காது, உடம்பு, கண், நாக்கு, மூக்கு, இவற்றிற்குத் தொழில்-முறையே கேட்டல், பரிசித்தல், காணல், ருசித்தல், முகர்தல்.

பஞ்சவாயுக்களாவன:—1. வியானன். 2. பிராணன். 3. அபானன். 4. சமானன். 5. உதானன் இவைகள் பஞ்சபூதத்தின் ரசோகுணத்தின் முதற்பகுதியிலுண்டானவை, இது சமட்டி. சமஷ்டி—சேர்க்கை.

உசுவாசமாவது:—பிராணவாயு உள்ளே பிரவேசித்தல். அப்பிராணவாயு புறம்போதல் நிசுவாசமாம். அன்றியும், இப் பிராணவாயு ஒன்றே நாசித் துவாரத்தின்வழியே பன்னிரண் டங்குலம் வெளியே புறப்பட்டு நாலங்குலம் கழிந்துபோக எட்டங்குலம் உள்ளே போகிறது. அதாவது உட்கார்ந் திருக்கும்போது (12) அங்குலமும், நடக்கும்போது (16) அங்குலமும், நித்திரை பண்ணும்போது (40) அங்குலமும், ஸ்திரீயைப் புணருங்காலம் (64) அங்குலப் பிரமாணமும் பிரவேசித்து இரண்டு பங்குள்ளும் ஒருபங்கு புறமும் உலா விக்கொண்டிருக்கின்றன. அன்றியும், நாழிகை யொன்றுக்கு முன்னூற்றறுபது சுவாசமாக நாளொன்றுக்கு (21600) சுவாசம் நடக்கும். இவ்வைந்து வாயுக்களும் பிராணவாயுவின் அம்சங்கள்.

இப்படி உசுவாசம் நிசுவாசமாகின்ற பிராணவாயுவை மேலுங்கீழும் போகாமல் சுழிமுனை வாயிலாகச் செலுத்தி, அகார, உகார, மகாரமென்னு மந்திரத்தினால் பிரம கபா லத்தில் நிறுத்துவதே யோகம்.

யோகமாவது:—இறைவனிடத்து ஒரே மனதாயிருத் தல். அதாவது மனம் பாக்கிய விஷயங்களில் செல்லாமல் ஒன்றின்கண் நிற்றலாம். இது இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்றெட்டங்கங்களை யுடைத்தாயிருக்கும். யோகாப்பியாசம் செய்யும்போது உசுவாச நிசுவாசங்களை யடக்கி, சுழுமுனை மார்க்கத்திலே பிராணவாயுவைச் சலனமற நிறுத்தி, விஷ

யங்களின்வழி மனத்தைச் செல்லவொட்டாது மீட்டு, முக் கோண முதலிய வடிவினவாய மூலாதார முதலிய வாரு தாரங்களின் தன்மையையறிந்து; அவ்வாருதாரங்களில்எழுந் தருளச்செய்த மூர்த்திகளைத் தியானித்து, படிப்படியே பிரம ரந்திரத்திற் சென்று, ஆண்டுள்ள தாமரை முகையை மலரச் செய்து, அதன் கேசாக்கிரத்துள்ள சந்திரமண்டலத்தை மூலாக்கினியால் இளகப்பண்ணி, அவ்வழித்தாக வொழுகும் அமுதத்தை உடல் முற்றும் நிரப்பிக் கடவுளைத் தியானித் தல் வேண்டும்.

இவ்வாறு நிலை நிறுத்தல் நன்மை. இதுவே அட்ட யோகம், ஞானயோகம். இவை அறிவு என்னும் மயிற் பாலத்தின் வழியாய் விடயங்களென்னும் நெருப்பாற்றைக் கடப்பது ஞானயோகம்.

நாகனுதி உபவாயுக்கள் வாக்காதி கன்மேந்திரியங்களைத் தொழிற் படுத்துவதற்குக் காரணமா யிருக்கின்றன. அன்றி யும் வைரவன், முக்கியன், பிரபஞ்சகன், அந்தர்யாமி, மகாப் பிராணன் என்று ஐந்து வாயுக்களுண்டு. இவைகள் ஜீவ சம் பந்தமாய் அந்தக்கரணத்தைத் தொழிற்படுத்துபவைகள்.

வியானுதி வாயுக்கள் அப்பியந்தர வாயுக்களென்றும், நாகனுதி வாயுக்கள் வசனுதி வாயுக்களென்றும், வைரம்ப ணுதி வாயுக்கள் ஜீவசம்பந்த வாயுக்களென்றும், பக்கவாயுக்க ளென்றும் சொல்லப்படும்.

கன்மேந்திரியமாவது:—சூட்சும பஞ்சபூத ரசோகுண வியஷ்டியில் உண்டாகி வசனுதியைந்து தொழில்களையும் நடத்துதற்குக் காரணமாவது.

இவ்வைந்தும் ஆகாசாதி பஞ்சபூதங்களின் ரசோகுண வியஷ்டியானதால், ஒன்றன் தொழிலை யொன்று செய்யாது தத்தம் தொழிலையே செய்யும். ஒன்றாய்க் கூடினது சமட்டி. தனித்தனியானது வியஷ்டி. உதாரணம் - அநேக மரங்கள் அடர்ந்த வனத்திற்கு சமட்டி என்றும், ஒவ்வொரு மரங்களாய்க் கூறுவது வியட்டி என்றும் சொல்லப்படும். பஞ்ச வாயுக்களைந்தும் சமட்டியாம். கன்மேந்திரியங்களைந்தும் தனித்தனி வியஷ்டியாம்.

இதுபோல, அந்தக்கரணமைந்தும் சமட்டி. ஞானேந்திரியங்களைந்தும் தனித்தனி வியஷ்டி; இங்கு (20) தத்துவமும் பஞ்சபூதங்களினது சாத்மீக ரசோகுணத்தின் சமட்டி வியட்டிகளான சூக்குமசரீரம்.

கன்மேந்திரியம் பத்துக்கும் அதிதேவதைகள்; முறையே;

(1)	விசுவயோனி	(6)	அக்கினி
(2)	விசிட்டன்	(7)	இந்திரன் (சூரியன்)
(3)	விசுவகர்த்தா	(8)	வாமனன் (விஷ்ணு)
(4)	ஜயன்	(9)	மிருத்யு (யமன்)
(5)	அஜன்	(10)	பிரஜாபதி (பிரமன்)

சூட்சும சரீரம்:-அருவுடம்பு (நுண்ணுடம்பு) எனப்படும். பத்துவகை இந்திரிய வுணர்வோடும் ஐவகை வாயுக்களோடுங் கூடி நல்வினை தீவினைகளைச்செய்ய சங்கற்பிக்கும். மனம் நுண்ணுடம்பு சூட்சும சரீரதத்துவம் 20-ல் ஞானேந்திரியமைந்தும், அந்தக்கரணமைந்தும் ஆகப் பத்தும் ஞான சாத

னங்கள்; கன்மேந்திரியமைந்தும் வாயுக்கள் ஐந்தும் ஆக பத்தும் கிரியா சாதனங்களாம்.

சேடித்தது—மீதமானது.

சூட்சுமசரீரம் வாங்காத ஜீவர்களுக்கு இன்னொரு சிருட்டிக்காகட்டு மென்பது. சூட்சும சரீரம் தத்துவஞானத்தால் கெடாத ஜீவர்களுக்கு இன்னொரு சிருட்டிக்காகட்டுமென்று தமோகுண அம்சத்தை ஈசுரன் நிறுத்தி வைத்தார். அதாவது சூக்குமசரீரம் நீங்கிய ஞானிகள் தவிர மற்ற ஜீவர்களுக்கு,

கவி

பூதங்க ளைந்திற் கோரம் பொருந்த வீரிரண்ட தாக்கிப்
பாதியி லைந்து வாயு பகுத்தமற் றொருபா கத்தி
லோதிய கரும விந்திரிய முடன்பத்துங் கிரியை யாகு
மாதலா லிருப துஞ்சூட் சுமதனு வுயிர்க்கா மன்றே.

பஞ்சீகரணமாவது:—ஒரு பூதத்தினுடைய பாகத்தை மற்றொரு பூதத்துக்குக் கொடுப்பது. அதாவது சேதித்து நின்ற தமோகுண பூதங்கள் ஐந்தையும் ஒவ்வொன்றையு மிரண்டாக்கி, அவற்றிலொரு பாதியை நன்னான்காகப் பிரித்து அரைக்காலரைக்கால், மாத்திரையாக்கி, முதற்பாதியில் தன்னம்சம் அரையுடனே மற்ற நான்கு பூதங்களின் அரைக்காலரைக்கால் மாத்திரை யெடுத்துக் கூட்ட தூல பூதமாயிற்று.

அதாவது பிரிதிவியின் தன்னம்சம் பாதி அஸ்தி (எலும்பு) பிரிதிவியி லப்பு அரைக்கால்பங்கு கூடினது மாமி

சம்; பிரிதிவியில் தேயு அரைக்கால்பங்கு கூடினது தோல்; பிருதிவியில் வாயு அரைக்கால் பங்கு கூடினது நரம்பு; பிரிதிவியி லாகாயம் அரைக்கால்பங்கு கூடினது மச்சை; (உரோமம் அல்லது மூளை)

அப்பு தன்னம்சம் பாதி மூத்திரம்; பிரிதிவி அரைக்கால் பங்கு கூடினது வாய்நீர்; தேயுவு அரைக்கால்பங்கு கூடினது வேர்வை; வாயுவு அரைக்கால் பங்கு கூடினது இரத்தம், ஆகாயம் அரைக்கால்பங்கு கூடினது சுக்கிலம்.

அக்கினி தன்னம்சம் பாதி பசி, பிரிதிவி அரைக்கால் பங்கு கூடினது நித்திரை, அப்பு அரைக்கால்பங்கு கூடினது தாகம்; வாய்வு அரைக்கால்பங்கு கூடினது சோம்பல்; ஆகாயம் அரைக்கால் பங்கு கூடினது சங்கமம்-சேர்க்கை.

வாய்வு தன்னம்சம் பாதி மோகம், பிரிதிவி அரைக்கால் பங்கு கூடினது படுத்தல்; அப்பு அரைக்கால் பங்கு கூடினது நடத்தல்; அக்கினி அரைக்கால்பங்கு கூடினது இருத்தல்; ஆகாயம் அரைக்கால்பங்கு கூடினது தாண்டல்.

ஆகாசம் தன்னம்சம் பாதி மோகம்; பிரிதிவி அரைக்கால் பங்கு கூடினது இராகம்; அப்பு அரைக்கால்பங்கு கூடினது துவேஷம்; வாய்வு அரைக்கால்பங்கு கூடினது பயம், அக்கினி அரைக்கால்பங்கு கூடினது வெட்கம், இவை 25-ம் தூல சரீர தத்துவங்கள் இவற்றுள் மாமிசத்தில் ரத்தம் உண்டாகி (7) தத்துவங்களென்றும் சில சுருதிகள் சொல்லுகின்றன.

கலி

பஞ்சபூ தமும்பத் தாக்கிப் பாதியை நன்னான்காக்கி
மிஞ்சவே பாதிநீக்கி மிகுநான்கி னன்குஞ் சேர்க்க
தஞ்சமாந் தூல பூதந் தருமகா பூத மீதில்
விஞ்சுமீ ரிரண்டாந் தூல மெய்யண்ட புவன போகம்.

குளகம்

நாடிய தூலபூதம் நரம்புதோ லிறைச்சி யத்தி
யோடியன் மச்சை சோரி யுடனாறு தத்து வங்கள்
கூடிய தோற்ற மேழுங் குறித்திடு சாதி மூன்றாய்ப்
பாடிய தூல மென்றே பகருவர் பனுவ லோரே.

நால்வகைப் பிறப்பாவது:—சராயுசம், அண்டசம், சுவேதசம், உத்பீசம். இவற்றுள் சராயுசம் கருப்பையினின்றும் பிறப்பன; சராயு—பை. சம்—பிறப்பு. அண்டசம்-முட்டையில் பிறப்பன. அண்டம்—முட்டை. சம்—பிறப்பு. சுவேதசம் வியர்வையில் பிறப்பன; சுவேதம்—வியர்வை. சம்-பிறப்பு-உத்பீசம்—வித்திற் பிறப்பன. உத்பீ-வித்து; சம்-பிறப்பு. உத்பீச மென்பதை பூமியிலிருந்து பிறப்பன வென்று சில நூல்கள் கூறுகின்றன.

கலி

புணர்செயீ ரிரண்டாம் யோனி புகல்சரா யுசத்தோ டண்டம்
இணைசுவே தசமுத்பீச மிவற்றினுக் குரியதாக
உணர்பையே முட்டைவேர்வை யுடன்விதை யாகுநான்கில்
கணமிகு வுயிர்களியாவுங் கருத்தரித் துதிக்குமாதோ.

எழுவகைத் தோற்றமாவது:—தேவர், மனிதர், விலங்கு, பட்சி, நீர்வாழ்வன, ஊர்வன, தாவர முதலியன. தோற்ற மாவது; ஜீவர்களின் பேதம். தேவர் 11-லக்ஷம், மனிதர் 9-லக்ஷம், விலங்கு 10-லக்ஷம், பக்ஷி 10-லக்ஷம், நீர் வாழ்வன 10-லக்ஷம், ஊர்வன 13-லக்ஷம், தாவரம் 21-லக்ஷம், ஆக ஜீவபேதம் 84-லக்ஷம்.

கவி

தோற்றமோ ரேழ தாகுஞ் சுரர்நரர் விலங்கி னோடு
போற்றிய பரவை நீரிற் பொருந்திய தூர்வ வின்னும்
ஆற்றலிற் றாவரத்தோ டாகிய வுயிர்கள் யாவுஞ்
சாற்றுநால் யோனிதன்னிற் சனித்ததென் றுரைக்கு நூலே.

மூவகைச் சாதியாவது:—உத்தம, மத்திம, அதம சாதி கள். இவற்றுள், தேவர், மனிதர், உத்தமஜாதி. திரியக்கு அதாவது குருக்கு யோனியுடைய பறவை விலங்கு முதலி யன மத்திமசாதி. அன்றியும் திரியக்கு என்பது சத்துரு வருமோவென்ற பயத்தால் பார்க்கும் பார்வையுடையதென் றும் பொருள்படும். திரி - திரிதல், அக்கு - கண். தாவர முதலிய மற்றவை அதமசாதி.

சாதியென்பது பலவற்றைத் தொடர்ந்து ஒன்றாய்த் தோன்றும் தன்மையது. சாதி, தன்மை, துவம் (ஒன்றல்லா தது) என்பன ஒருசொற் பொருள்கள். (உ-ம்) தேவசாதி, மனுடசாதி, மிருகசாதி என்பதுபோல.

தேவர், மனிதர் உத்தமசாதி. பசு, பக்ஷி முதலியவை மத்திமசாதி. மரம், கொடி, செடி முதலியவை அதமசாதி.

இதுபோல புவர்லோக, சுவர்லோக, தவலோக, சனலோக, மகாலோக முதலிய லோகங்களிற் றோன்றுகின்ற நக்ஷத்திரம், சந்திரன் முதலான பிதிர்களும் சூரியாதி தேவர்களும் கந்தர்வர், சித்தர் முதலானவர்களும் இன்னும் இவைபோல பலவும் உத்தம ஜாதிகள். காமதேனு, அன்னம், கருடன் இவைபோல்வன பிறவும் மத்திம சாதிகள். கற்பகம், அரிச்சந்தனம், மந்தாரம், பாரிசாதம் முதலிய இவைபோல பிறவும் அதமசாதிகள். இன்னும் சீவர்கள் பரிசிய வறிவையுடைய புன் மர முதலியன வென்றும் ஓரறிவுயிர்கள், பரிசம், இரசம் இவ்விரு வறிவுடைய நத்தை, சங்கு முதலியன ஈரறிவுடையனவெனவும், பரிசம், ரசம், கந்தம் இம்மூன்று அறிவுடைய கரையான் எறும்பாதிகள் மூவறி வுடையனவென்றும், பரிசம், ரசம், கந்தம், ரூபம் இந்நான் கறிவினையுடைய தும்பி வண்டாதி முதலியன நான்கறிவுடையவை யென்றும், பரிசம், ரசம், கந்தம், ரூபம், சத்தம் இவ்வைந்தையு மறியும் விலங்கு புள்ளாதிகள் ஐந்தறிவுடையன வென்றும், வானவர் மக்கள் நரகர் பகுத்தறிவாகிய ஆறுவித அறிவோடு கூடி ஆறறிவுடையவர்களென்றும் சொல்லப்படும். நரகர் என்பது பிசாசு முதலியன.

பகுத்தறிவென்பது:—இம்மைப்பயன், மறுமைப்பயன், வீட்டின்பயன் என்னும் மூன்றையும் அறியு மறிவு.

வீடென்பது:—மோக்ஷம். அதாவது, பந்தம் விடுதலென்பது. இவ்வித ஜீவர்கள் புண்ணியம், பாவம், மிசிரமென்னும் மூன்று கர்மங்களின் பயனுல் தாம் செல்லும் கதிகளாகிய

தேவகதி, மனுடகதி, மிருககதி, தாவரகதி இந்நான்கு கதியை யடைவார்கள்.

புண்ணியம்:—உத்கிருஷ்டம், மத்தியம், சாமான்யமென மூன்றுவகை. புண்ணிய உத்கிருஷ்ட முடையவர்கள் தேவ கதியை யடைவார்கள். புண்ணியமுடையன மத்தியம். அயிராவதம், அன்னம், கருடன் முதலிய மத்திம தெய்வீக விலங்கின் கதியை யடைவர். புண்ணிய சாமான்யம் கர்ப்பக தரு முதலிய தெய்வீக தாவரகதியை யடைவர்.

இவ்விலங்கின் கதியும் தாவரகதியும் தேவகதியின் அந்தர்ப்பூதம் (அடக்கம்) இதுபோல் பாவகன்மத்திலும் உத் கிருஷ்டம் மத்திமம் சாமான்யமென மூவகை. இவற்றுள் ளடங்கிய தாவர திரியக்காதிகளும் மிசிர கன்மத்தில் உத் கிருஷ்டம் மத்திமம் சாமான்யமென மூன்றுவகை. இவற்றுள் ளடங்கிய இருடிகள் தவசிகள் முதலானவர்களும் இராசாக் கள் முதலான செல்வர்களும் அடிமைத்தொழில் சண்டாளத் துவ முடையவர்களும்.

கவி

மூவகைச் சாதி தன்னின் முதலிக பரத்துண்மோகர்
தேவரு நருமேமத் திமமிகத் திச்சை கொள்ளும்
ஆவல்சேர் பறவை யாதி யதமமவ் விரண்டு மில்லாத்
தாவர மாகுமென்றே சாற்றுவர் தக்கோர் மாதோ.

கோசமாவது:—வாளை (கத்தியை) உரை மறைத்தாற் போல இகம் சத்தார்த்தமான ஆன்மாவாகிய தன்னை நான்

பசிதாகமுடையவன், நான் பலவான், நான் பலவீனன், நான்
வசனாதி கிரியையுடையவன் என்பன வாதியான அத்தியாசத்
தினால் மறைத்தலின் கோசம். இதுவும் என் பிராணன் என்
பசி என்பதாம். என் வசனாதி கிரியை என்று தன்னாலறியப்
படுகிறபடியால் தானல்லவென்பது.

பஞ்சகோசமாவது:—ஆத்மா பஞ்சகோசத்திற்கு
வேறென்று சுருதி சொல்லுகின்றபடி பஞ்சகோசங்களைப்
பகுத்தறியாமல் அவைகளுக் கன்னியமாகிய ஆத்ம சொரு
பத்தை யறியக்கூடாதது.

ஈண்டு ஞானத்திற்கு வேறாய கடாதி ஜட வஸ்துக்கள்
அநித்தியமாய் இருக்கின்றன. ஆன்மாவும் கடாதி வஸ்துக்
கள் போல ஜடப்பொருளாயின் அநித்தியமாய் ஒழியும்.
ஆன்மா நிலையற்றதாயின் மோக்க நிமித்தமாய் சாதனங்கள்
நிஷ்பலமாய்விடும். ஆன்மா பஞ்ச கோசவிலக்ஷணமாய்ச்
சச்சிதானந்த வடிவமாய் உளது என்று அறியாது மதவாதி
கள் பஞ்ச கோசங்களில் யாதானு மொன்றையே ஆன்மாவாக
வொப்பி முக்கிய ஆன்ம சொரூபமான சாக்ஷியை அறியாது
வாளா விருந்தனர்.

சுழுத்தியினின்றும் விழித்தவன் ஒன்று மறியாது சுக
மாய்த் தூங்கினேன் என்பதினாலேயே ஆத்மா (ஸ்தூல சூக்
கும காரண மென்னும்) சரீரத்திரயத்திற்கும், (அன்னமயம்,
பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயமென்
னும்) பஞ்சகோசத்திற்கும் வேறாய் (சாக்கிர சொப்பன

சுழுத்தி யென்னும்) அவஸ்தாத்திரயத்திற்குச் சாட்சியாய்ச் சச்சிதாநந்த வடிவமாயிருக்கிற தென்பது வெளியாம்.

பஞ்சகோசமாவது:—அன்னமயம், பிராணமயம், மனோ மயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயமென ஐந்து.

தூலசரீரமே அன்னமயம்; எப்படியென்றால்: மாதா பிதாக்களுடைய அன்னசாரமான சுக்கில சுரோணிதமானது பிதா வயிற்றில் இரண்டுமாதம் கருத்தரித்துப் பின் பத்து மாதம் மாதா வயிற்றிலிருந்து ஜனனமாய்ப் பிரேதம்போல ஸ்தூலமாய்க் கரசரணாதி அவயவாகாரமாய்ச் சட்பாவ விகார மாய்ப் பஞ்சபூத காரியமாய்க் கட்குட்டியம் (மண்பாண்டம்- சுவர்) போலச் சடபாத்திரமாய் நாலுமுள மட்டாய் வாத பித்த சிலேத்பனத்தா லுண்டான (4448) வியாதிக்கும் ஸ்தானமாயுள்ள இத் தூலசரீரமே அன்னமயகோசம்.

அகம் சத்தார்த்தமான ஆத்மாவாகிய தன்னை நான் பிராமணாதி வருணமுடையவனென்றும், நான் பிரமச்சரி யாதி யாசிரமமுடையவனென்றும், நான் கன்னடமாதி சாதி யுடையவனென்றும், நான் மனிதன், நான் பிறந்தேன், நான் வளர்ந்தேன், நான் பருத்தேன், நான் இளைத்தேன், நான் ஆண், நான் பெண், கருவல், சிவலை நான் கட்டயன் என்பன வாதியான அத்தியாசத்தினால் மறைத்தலின் கோசம்.

என் ஜாதி, என் வருணம், என்னாச்சிரமம், பிறந்தது. வளர்ந்தது, பருத்தது, இளைத்தது என்று தன்னால் அறியப் பட்டமையால் இதுவும் தானல்லவென்பது பிரதிக்ஞை

நியமம்; அன்னிய விகாரமென்பது ஏது (காரணம்) கடத்தைப்போலவென்பது திருஷ்டாந்தம்.

பிராணமயகோசமாவது:—பிராணனும் கன்மேந்திரியமும் கூடியது. உசுவாச நிசுவாசமாய் இருப்பதே மய (வடிவ)ம். இதன் அத்தியாசம் நான் பசிதாகமுடையவன், நான் பலவான், நான் பலவீனன், நான் வசனாதிகிரிகைகளை யுடையவனென்றும் மறைத்தலின் கோசம். இதுவும் என் பிராணன், என் பசி, என் தாகம், என் வசனாதிக்கிரிகை என்று தன்னால் அறியப்படுகிறபடியால் பிராணமய கோசம் தானல்ல (ஆத்மாவல்ல) வென்பது பிரதிக்ஞை. சூட்சுமபூத ரசோகுண காரியமென்பது ஏது. குட்டியம்போல வென்பது திருஷ்டாந்தம்.

மனோமயகோசமாவது:—மனமும் ஞானேந்திரியமுங் கூடியது. மயமாவது:-சங்கற்ப, விகற்ப, சஞ்சல முதலிய சொரூபமாய் இருப்பது. அதாவது, வடிவம் கோசமாவது. பசரிக்காய்ப் பை புழுவை மறைத்தாற்போல அகம் **சத்தார்த்த**மான ஆத்மாவாகிய தன்னை நான் சங்கற்பிவான், விகற்பவான், சம்சயன், சஞ்சலன், சுகி, துக்கி, போகி, மோகி, ரோகி, குரோதி என்பன வாதியான அத்தியாசத்தினால் மறைத்தலின் கோசம். இதுவும் என் மனம், என் சங்கற்பம், என் விகற்பம், என் சஞ்சலம், என் சம்சயம், என் சுகம், என் துக்கம், என் போகம், என் ரோகம், என் குரோதம், என் மோகமென்று தன்னாலறியப் படுகிறபடியால் மனோமய கோசம். தானல்லவென்பது பிரதிக்ஞை. சூட்சுமபூத சத்வ

குண காரியமென்பது ஏது. கு—சூலம்போல என்பது திருஷ்டாந்தம்; கு—சூலமென்பது தாம்பிராதி தாதுக்களா லான குதில்.

விஞ்ஞானமயகோசமாவது :—புத்தியும் ஞானேந்திரிய பஞ்சகமும் கூடியது. மயமாவது—நிக்ஷயார்த்த வாத்மகமான விசேஷ ஞானமே சொரூபம். கோசமாவது—வீணையைக் கௌசனை மறைத்தாப்போல அகம் சத்தார்த்தமான ஆத்மா வாகிய தன்னை நான் நிக்ஷலவான், நான் ஏக சந்தக்கிராகி (ஒருதரத்திலறிபவன்) நான் சத்தாதி விஷயங்களை யறிபவன் என்பன வாதியான அத்தியாசத்தினுல் மறைத்தலின் கோசம். இதுவும் என் புத்தி, என் நிச்சயம், என் கண், என் காது, என் மூக்கு, என் நாக்கு என தன்னு லறியப்படுகிற படியால் தானல்ல. கர்த்தாரூபமான விஞ்ஞானமய கோசம் தானல்ல வென்பதே பிரதிக்ஞை. சூட்சும பூதகுண காரிய மென்றது ஏது. ஸ்தம்பம்போல என்பது திருஷ்டாந்தம்.

ஆனந்தமயகோசமாவது:—சுழுத்தியில் சொரூபானந் தத்தை அனுபவிக்கும் அவித்தையா விருத்தியும் சாக்கிரம் சொப்பனங்களிலுள்ள இஷ்டவஸ்து தரிசனபோகத்தால் உளதாகும் பிரியம், மோதம், பிரமோதரூப அந்தக்கரண விருத்தியுங்கூடி பிம்பப் பிரதிபிம்பானந்த சொரூபமாதலின் ஆனந்தமயம் பிரியமென்பது. ஒன்றைக் கண்டபோ துண் டான சந்தோஷம். போதமென்பது—கிடைத்தபோ துண் டான சந்தோஷம். பிரமோதமென்பது—அனுபவித்தபோ துண்டான சந்தோஷம்.

கவி

கோச மைந்தனங் கூறும் பிராணனே
டாசி லாமன விஞ்ஞான மானந்தம்
பேச னந்தூலம் பின்மூன்றுஞ் சூக்கும
மாசிற் காரண மானந்த மாகுமே.

கோசமாவது:—புளியம்பழத்தை ஓடு மறைத்தாற்போல அகம் சத்தார்த்தமான ஆத்மாவாகிய தன்னை நான் பிரிய-மோகன், பிரமோதன், நான் சுகமாய்த் தூங்கினேனென்றும், நான் சடன், நான் மூடன், நான் ஒன்று மறியேன் என்பன வாதியான அத்தியாசத்தால் மறைத்தலின் கோசம். இதுவும் என் அஞ்ஞானம், என் ஜீவன், என்னறியாமை, என் பிரிய மோத பிரமோதமென்று தன்னாலறியப் படுகிறபடியால் தானல்ல. சுகரூபமான ஆனந்தமயகோசம் தானல்லவென் பது பிரதிக்ஞை. ஒருகால் உளதென்பது ஏது. மேகம் போலென்பது திருஷ்டாந்தம்.

இவ்விதம் ஆன்மாவாகிய தான் பஞ்சகோசங்களில் மறைபட்டு அசத்து, சடம், துக்கம், அநித்தியம், கண்டம், அபாவமா யிருக்கிறபடியால் சத்து, சித்து, ஆனந்தம், நித்தியம், பரிபூரணமான தனது எதார்த்த சொரூபம் வெளிப் படும் நிமித்தம் பஞ்சகோச விசாரஞ்செய்வது அவசிய மானதால் சுயபுத்தி யுடையவன் ஏகாந்த ஸ்தானத்திலிருந்து கொண்டு மேற் கூறியபடி பஞ்சகோச லட்சணங்களை யூகித் தறிந்து இதுவும் தானல்லவென்று நன்றாய் நியதிசெய்து,

அப்பால் காணுநின்ற சூனியத்தையுந் தள்ளி பஞ்சகோசங் களையும் பஞ்ச சூனியங்களையும் காணுநின்ற அறிவே நான், அந்த நானே அவஸ்தாத்திரய சாக்ஷி, சரீரத்திரய விலக்ஷணன், பஞ்சகோச வெதிரிக்தன், அகஞ் சத்தார்த்தன் என்பது விளங்க இப்படிப் பஞ்சகோச விசாரம் சொல்லப் பட்டது. இனி அன்னுவய வியதிரேக யுக்தியினுலும் தன்னை நிர்ணயித்துக்கொள்ளும் விதம் ,தானுக விளங்கின தூல சரீரம் தோன்ருத சொப்பனத்திலே தான் தோன்றுகிறதே அன்னுவய (தோன்றல்) யுக்தி. தான் தோன்றினுலும் தூல சரீரம் தோன்ருததே வியதிரேக் (மறைப்பு) யுக்தி. லிங்க சரீரம் தோன்ருத சுழுத்தி யவஸ்தையில் தான் தோன்று கிறதே அன்னுவய யுக்தி. தான் தோன்றினுலும் லிங்கசரீரந் தோன்ருததே வியதிரேக யுக்தி. சுழுத்தி தோன்ருத சமாதியிலே தான் தோன்றுகிறதே அன்னுவய யுக்தி. தான் தோன்றினுலும் எழுத்தூருபமான காரணசரீரம் தோன்ரு ததே வியதிரேக யுக்தி. இவ்வாருக அன்னுவய வியதிரேக யுக்தியினுலும் முஞ்சிப் புல்லின் பக்கமட்டைகளைத் தள்ளி நடுவிலிருக்கிற ஆணியை யெடுப்பதுபோல பஞ்சகோசங் களுக்குள்ளே மறைபட்டு ஆந்தரமா யிருக்கின்ற ஆன்மாவை இந்தப் பஞ்சகோசங்களை நியதிசெய்து உத்தாரணம் செய்ய வேண்டு மென்பது குறிப்பு. (உத்தாரணம்-இரக்ஷிப்பு) இன்ன மொருவித அருத்தம். சுழுத்தியின்கண் நானென் றுந் தெரியாமல் சுகமாய்த் தூங்கினே னென்று சர்வத்திரா ளுடைய வனுபவத்திலும் இருக்கின்றன. அதாவது, மனது அஞ்ஞானத்தி லீனமாய்ப் பிரபஞ்சந் தோன்ருமை

யால் ஒன்றுந் தோன்ற வில்லையென்றும் ஆனந்த மயமா யிருப்பதால் சுகமாய்த் தூங்கினேன் என்றும் சொல்வது.

கலி

சாலுஞ் சீவர் களுக்குச் சரீரங்கள்
ஏலுமூவகை யாகு மிதன் பெயர்
தூலமோடு சொற் சூக்கும மாமினு
மூல காரண மென்ன மொழிகுவர்.

"அன்னமய முதலாக வானந்த மயமீருய்ப்
பின்னநிலை யிவைகடந்த பேரின்ப சாகரத்து
ளின்னபடி யென்றறியா திருந்தசிவ யோகிக்குச்
சொன்னமக ளும்புவியுந் துரும்பாகத் தோன்றுமால்."

"ஆசிலன்ன மயகோசந் தாண்டியப்பா லழியாத
பிராணமய கோசந் தாண்டி
மாசின்மனோ மயகோசந் தாண்டியென்று மாறுவிஞ்
ஞானமய கோசந் தாண்டி
நாசமுறு மானந்த கோசந்தாண்டி ஞானவடிவாய்
நின்ற குரவ னின்னைக்
கோசமெலா மற்றசிவ தோசியாகிக் கும்பிட்டே
னென்பிறவி பின்பிட் டேனே"

அறிகின்ற பொருளென்று மறிவானில் வேறே
யானலிவ் வூனுக நானென்ன லாமோ
செறிகின்ற புள்ளல்ல வேகூடிவ் வகையே
செடமான வுடனின்னில் வேறென்று தெளியே.

நிலமாகும் வர்க்கென்ற னெகிழ்கின்ற நீரா
நெருப்பா மிதிற்சுட்ட வெல்லாமு மநிலஞ்
சலமான புரையான வானிந்த வுடலஞ்
சடமான வைம்பூத வுருவங்க டாமே.

விழியைப்பு மானென்னில் ரவியாதி யாலே
விளங்கின்ற தல்லால் விளங்காமை யாலே
யொழியப் படுங்கன்ன முதலுலு முன்ற
னுருக்கண்ட கண்டன்னை யொப்பாக வுன்னே.

"அழலுண்பொருள் களிலுண்பவை முக்கூறதின் முதற்கூ
றணியென்பு நடுக்கூறது மச்சைக் கணியாகு
மெழில்கொண்ட கடைக்கூறது வாக்காயெழு மென்றே
யியவனுன்மறை யந்தங்க ளிசைக்கின்றன தாமே."

என்பனவைகளால் அறியற்பாலன.

தூலசரீரத்தில் சூக்குமசரீர மிருக்கும் வகையைக் கூறல்

இந்தத் தூலசரீர தத்துவம் ஆறினுள்ளே குடிபுகுந்த சூட்சும சரீரதத்துவம் இருபதும் படத்தில் காட்டியபடி தத்தம் கோளகைகளிலுள்ள அதிதேவதைகளால் விளங்கப் படுகின்றன. இந்திரியங்களுக்கு அதி தேவதை யென்று பெயர்.

இவ்வதி தேவதைகள் அந்தந்த ஸ்தானங்களிலில்லாமல் மறைந்தால் அவ்வக் கோளகைக்குரிய விஷயங்கள் பலப் படாது. தூல சரீரதத்துவம் ஆறில் சூட்சுமசரீர தத்துவம்

இருபது குடிபுகுதலாவது-ஜீவன் தத்தம் கருமத்துக் குரிய துவந்துவ (சுகதுக்க) த்தை யனுபவிப்பதற்காக ஈசுர சங்கற் பத்தினுல் புகுந்த தென்க. அதுவும் தம்தம் பிராரத்துவ கருமம் அனுபவிக்கும்வரையில் இருக்கும்.

கவி

குளகம்

வாக்குடனே சிங்குவையும் வாயினிற்கு மனத்துடனே
யுதானனிவை கழுத்தி னிற்குந்
தாக்குபிரா ணன்புத்தி யிதயனிற்குஞ் சமானனெடு
சித்தமது நாபினிற்குந்
தேக்குபா யுருவ்யானன் குதத்திற் றிகழ்துவக்கு
வியானனகங் காரமூன்றும்
ஆக்குமிந்த வுடலமதில் சர்வவங்க மமர்ந்திருக்கு
மென்றுமறை யறையுமாதோ.

உச்சியிலே தேஜஸுவுங் கருவிழியிற் சட்சா
முவந்திடுநற் காதுக்குள் சுரோத்திரமூக்குள்ளே
பச்சமிகு மாக்கிராண நான்கும் வேருய்ப்
பற்றிநிற்குந் தனித்தனியே கழுத்தின்மேலே
இச்சைமிகுங் கைகால்கள் குய்யம்பாணி
யெழிலான கழலுபத்த மதைந்துநிற்கு
மெச்சுமுடற் றத்துவங்க ளாறினுள்ளே
விளங்குகின்ற சூட்சுமந்தா னிருபதாமே.

விசுவனுவது:—சாக்கிரத்திலுள்ள தேகாதி பிரபஞ்சங் களை நான் எனதென் றபிமானிப்பவன்.

வியவகாரிக ஜீவனுவது:—கர்த்தாவா யிருந்து வியவகரிக் கிறபடியாலும், தத்துவ ஞானத்துக்குப் பின்பு கெட்டுப் போகிற படியாலும் வியவகாரிகன்.

தைசதனுவது:—ஒரு குகையில் சுவர்ண முருக்கி விட்டா லெப்படிப் பிரகாசிக்குமோ அப்படிப் பிரகாசமாய்ச் சூட்சும சரீரத்தோடு கூடியிருப்பவன்.

பிராதிபாசிகனுவது:—சாக்கிரத்திலுள்ள தன்னைச் சொப் பனத்தில் மற்ருெருவனுக மாற்றிப் பார்த்தலாலும், தத்துவ ஞானமின்றிச் சொப்பனத்தில் தோன்றிச் சாக்கிரத்தில் கெடு கிறபடியாலும் பிராதிபாசிகன்.

சொற்பன கற்பிதனுவது:—கட்டையைத் தடவிப்பார்த் துக் கள்ளன் என்பது போல, சொப்பன சத்தியினுல் தன்னை வேருகத் தோற்றிவைக்கிறபடியால் சொப்பன கற் பிதன்.

பிராக்ஞனுவது:—மிகுந்த ஞானமுடையவனுய் மனுதியிற் திரிய மில்லாதிருக்கிற சுழுத்தி யவஸ்தையிலுள்ள பிரமானந் தத்தைச் சூட்சும விருத்தியா லறிந்தனுபவிக்கிறவன்.

பாரமார்த்திகன்:—உற்பத்தி நாசமின்றி என்றும் ஒரே ஞானமாயிருப்பவன்.

கலி

தூல தேகத்தை யேதொடர் சீவனுஞ்
சால வேவிவ காரி விசுவனுஞ்
சீல சூக்குமஞ் சேர்ந்திடிற் றைசதன்
ஏலவே பிராதி பாதிக னேடினும்.

குளகம்

இன்னுஞ் சொப்பன கற்பித னுமிதன்
மன்னு காரியம் யாவையும் மாற்றியே
துன்னுங் காரணத் தொன்றில் பிராக்ஞனே
டுன்னு மேபர மார்த்திக னுண்மையே.

ஜீவாத்மாவாவது:—தப்தாய பிண்டம் போல, அதாவது காய்ச்சின இரும்புருண்டையைப் போல ஜீவனுடைய சரீரத்தில் சம்பந்தித் திருப்பவன்.

அந்தராத்மாவாவது:—கமல பத்திரோதகம் (தாமரையிலையும் தண்ணீரும்) போல ஒட்டியு மொட்டாம லிருப்பவன்.

பரமாத்மாவாவது:—சூரியனானவன் பிரபஞ்ச விவகாரத்துக்குச் சாக்ஷியா யிருப்பதுபோலச் சுழுத்தி யவஸ்தைக்குச் சாக்ஷியா யிருப்பவன்.

ஞானாத்மாவாவது:—பஞ்சகோசங்களையும் பஞ்சகோச விவகாரங்களையும் அறிந்துகொண்டு விலட்சணமா யிருப்பவன்.

ஆத்மாவாவது:—தனக்கிரண்டாவ தில்லாமல் தானாக விருப்பது.

கலி

சாக்கி ரத்திற்குச் சாக்ஷிசீ வாத்துமா
ஆக்குஞ் சொப்பனத் துக்கந்த ராத்துமா
தூக்கி டுஞ்சுழித் திபர மாத்துமா
தாக்கும் நான்கிற் கூடத்தர் ஞானத்துமா.

கூடஸ்தனாவது:—கொல்லன் உலையிலுள்ள அடைக்கல்லி னிடத்துச் சமட்டியினால் ஈட்டி, பாலா முதலிய விகாரங்கள் தோன்றி அழிந்தாலும் அந்த விகாரங்களைத் தான் பற்றாது நிர்விகாரமாய் அடைக்கல் இருக்கிறது போலத் தன்னிடத் தில் மனமானது அவஸ்தாத்திரயப் பிரபஞ்சங்களை விரித் தொடுக்கினாலும் அதிற்பற்றாது நிர்விகாரமாய் இருக்கிறவன்.

சாக்கிரமாவது:—சர்வேந்திரியங்களினால் பாகிய ஞானத் துடன் விஷயாகாரமாய்ப் பரிணமித்துக் கர்த்தத்துவாதியா காரமாய் ஸ்திரமா **யெந்தமட்டும்** விவகரிக்கப் படுகிறதோ அந்த மட்டும் சாக்கிரம்.

சொப்பனமாவது:—இந்திரியங்களினால் பாகியார்த்த ஞானமின்றித் தானே சாக்கிரத்தின் வாசனா பரிகல்பித விஷ யாகாரமாய்ப் பரிணமித்துக் கர்த்தத்துவாதி யாகாரமாய் அஸ்திரமாய் எந்த **மட்டும்** விவகரிக்கப்படுகிறதோ அந்த மட்டும் சொப்பனம்.

சுழுத்தியாவது:—இந்திரியங்களின் பாகியார்த்த ஞான மும், மனதின் விஷயாகார பரிணாமமும், கர்த்தத்துவாதி வியாபகமுமின்றிப் பத்தி, தானே விருட்சத்தை யடக்கி வைத்

துக்கொண்டிருக்கிற வித்தைப்போலக் காரணாத்மகமாக எந்த மட்டுக்கு மிருக்கிறதோ அந்த மட்டுக்கும் சுழுத்தி அன்றியும் துரியம் துரியாதீத மென இரண்டு அவஸ்தைகளுண்டு. இவற்றுள் துரியம் சாக்கிரத்தில் அகக்கமல மழிந்து மனோ வியாபார மிழந்து பரமாத்ம சிந்தனை புரிவதே.

துரியாதீத மாவது:—பிரமானுசந்தான விருத்தியும் நழுவி மனமானது பாலில் கலந்த ஜலம்போல ரமிப்பதே.

தாவரங்களுக்குச் சுழுத்தி ஒன்றும், திரியக்குகளுக்குச் சொப்பன சுழுத்தி யிரண்டும், மனிதர்களுக்குச் சாக்கிர சொப்பன சுழுத்தி மூன்றும், தேவர்களுக்குச் சாக்கிர மொன்றும், உன்மத்தருக்குத் துரியமும், சிவயோகிகளுக்குத் துரியாதீதமுமாம்.

நனவிற் சுழுத்தியாவது:—இந்திரியங்கள் தத்தம் கொள்கைகளிலேயே இருப்பது. நனவு-சாக்கிரம்-விருத்தி-மனோ விஷயத்தில் செல்லாமல் சொருபத்தினிடத்திலேயே யடங்கி யிருப்பது.

புருவமத்தி, கண்டம், இருதயம், நாபி, குதம் இவ்வைந்தும், கீழாலவஸ்தைகள்.

கவி

தந்த வத்தைக ளைந்தின்முன் மூன்றுமே
பெத்தர் கட்கும் பினுமிரண் டாகுமே
முத்தர் கட்கு முறைநெற்றி கண்டநெஞ்
சொத்த நாபி குதமிட மோருங் கால்.

ஜீவேசுர பேதம்

ஒரு வனத்திலுள்ள மரங்களைத் தனித்தனியே பார்ப்பதுபோல சீவன் வியட்டி. வனமும் ஜலாசயமும்போல ஏகமாய்ப் பார்ப்பது சமட்டி. ஈஸ்வரன் (ஜலாசயம்-சமுத்திரம்.)

கலி

சீவ ரீசற்குச் செப்பிய பேதங்கள்
மேவு வமை வியட்டி சமட்டியாம்
பூவொரு மரம் போல வியட்டியே
காவ னத்திரள் காணல் சமட்டியே.

ஈசுரனது சரீராதியைக் கூறல்

விராட்டாவது:—வியாபகமாயும், விவிதமாயும், சமட்டி ஸ்தூலசரீர உபாதியுடைய சைதந்யம் நாநாவிதமாயும் விசேஷமாயும் விளங்குவது விராட்டாம். (விவிதம்—நாநாவிதம்.)

இரணியகர்ப்பனாவது:—ஒரு குகையினுள்ளே உருக்கி விட்ட சுவர்ணம்போல சூட்சுமசரீரப் பிரகாசரூபமாயிருப்பது. இன்னும், ஸமஷ்டி ஸூக்ஷ்ம சரீரமுடைய சைதந்யம் ஞாநசத்தி யுடைமையின் இரணியகர்ப்பன்.

அவ்வியாகிருதமாவது:—வெளிப்படாதது. அதாவது ரூபரகிதமா யிருப்பது.

கவி

தூலம் யாவுந் தொடர விராட்டிவன்
ஏலுஞ் சூட்சுமத் திரணிய கர்ப்பனே
கால மூலத் தவியா கிருதனென்
றேல மாமறை யெங்கணு மோதுமே.

ஈசுரன் தூலசரீரத்துடனேகூடி சாக்கிராவத்தையைப் பொருந்தும்போது வைசுவானரன். வைசுவானரனாவது—சர்வநராபிமானி; அதாவது—உலகத்திலுள்ள எல்லா நரர்களிடத்தும் நான் என அபிமானிப்பவன்; இந்த இருவகைக்கும் அதிஷ்டான சைதன்யம் பிரமா.

சூட்சும சரீரத்துடனே கூடி சொப்பனாவஸ்தையைப் பொருந்தும்போது சூத்திராத்துமா; அதாவது முத்தினுள் சூத்திரம்போன்று சமஸ்தப் பிரபஞ்சத்தினும் அநுசூதமா யிருப்பதினாலே சூத்திராத்மாவென்றும், கிரியாசக்தி யுடைமையின் பிராணன் என்றும் கூறுகின்றன. இந்த இருவகைக்கும் அதிஷ்டான சைதன்யம் விஷ்ணு (சூத்திரம்-கயிறு.)

காரண சரீரத்துடனேகூடி சுழுத்தி யவஸ்தையைச் சேரும்போது அந்தர்யாமி. அதாவது ஸமஸ்தப் பிராணிகளின் கர்மப்பிரேரகத் தன்மையா யிருப்பவன். இந்த இருவகைக்கும் அதிஷ்டான சைதன்யம் ருத்திரன். சீவன் தன் மூன்றவஸ்தையிலுந் தன் மூன்று சரீரமாயிருக்கிற இருபத்தேழு தத்துவங்களுடனும் நானென்று கலந்து நின்றாற்போல ஈஸ்வரனுந் தான் மூன்றவஸ்தையிலுந் தன் மூன்று

சரீரமாயிருக்கின்ற முப்பத்திரண்டு தத்துவங்களுடனுங் கலந்து நிற்பன்.

கவி

வந்த சாக்கிரத் தில்வைசு வானரன்
தொந்த சொப்பனத் திற்சூத்தி ராத்துமா
அந்த மூன்றுறி லந்தரி யாமியாம்
விந்த சேதனம் விண்டிறை ருத்திரன்.

ஜீவசேதன முதலியவற்றின் வியாபகத்தைக் கூறல்

சிதாபாசன் தன்சரீர மாத்திரமே கலந்து நிற்பன்; ஈசுவரன் தன்னுடைய சரீரமாகிய சகல சரீரங்களோடுங் கலந்து நிற்பன்; இந்த இருவகைக்கும் சாக்ஷியாகிய பிரமம் சகல சரீரத்திலும் சகல பிரபஞ்சத்திலும் நிறைந்து எல்லையற்றிருக்கும்.

கவி

ஆகையினுற் ஜீவசிதா பாசன்றன் ஞுக
மதிலேதான் கலந்துநிற்ப னீசுரனு கமதாம்
ஓகைபெறு சகலசரீ ரங்களினுஞ் சகல
வுலகினுமே கலந்துநிற்ப னிவ்வுபய வகைக்கும்
வாகைபெறு சாக்ஷியதாம் பிரமமதுஞ் சகல
மானசரீ ரங்களினு மன்னுபிர பஞ்சத்
தேகையிலா தேநிறைந்தீ ரைஞ்சுதிசை தனிலு
மெல்லைகடந் திருக்குமென வெண்ணிடுக தெரிந்தே.

தத்துவ விவகாரங்களைக் கூறல்

ஜீவனுக்குத் தூலசரீர வியவகாரத்திற்குச் சட்கோச தத்துவம் 6. சூட்சும சரீரதத்துவம் 20. ஜீவன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிரம்மம் 5. ஆக 31.

கவி

மன்னுஜீ வனுக்குத் தூல மகிழ்விவ கார தத்வம்
அன்னமாங் கோச மாறோ டைநான்கு சூட்சு மந்தான்
இன்னமுஞ் ஜீவனீச னிசைந்திடு மவித்தை வித்தை
நன்னய பிரமத்தோடு நவிலுவர் முப்பத் தொன்றே.

ஜீவனுக்குச் சூட்சும சரீர வியவகாரத்திற்குச் சூட்சும சரீர தத்துவம் 20. அவித்தை, வித்தை, சீவன், ஈசுரன் பிரமம் 5 ஆக 25.

கவி

சொல்லுசூட் சுமசரீரத் துயிர்விவ கார தத்வம்
புல்லிய சூக்குமந்தான் புகலுநா லைந்தி னோடு
வல்லதோர் சீவனீசன் மருவிய வவித்தை வித்தை
நல்லதாம் பிரமத்தோடு நவிலுவ ரிருபத் தைந்தாம்.

சீவனுக்குக் காரணசரீர வியவகாரத்திற்குக் காரண சரீர தத்துவம் 2. சீவன், ஈசுரன், பிரமம் 3 ஆக 5. சீவ விவகாரத்துக்குச் சீவன், ஈசுரன், பிரம்மம் 3. சாக்ஷி விவகாரத்துக்கு சாக்ஷி.

கவி

மேவுகா ரணசரீர விவகார தத்து வந்தான்
சீவனீச் சுரன வித்தை திகள்வித்தை பிரமமைந்தாம்
ஏவுசீ வனுக்கோசிவ னீசனற் பிரம மூன்றும்
ஆவதோர் சாக்ஷிக்குற்ற தாகிய பிரம மொன்றே.

ஈசுரனுக்குத் தூலசரீர வியவகாரத்திற்குச் சமட்டி தூலசரீர தத்துவம் 6. சமட்டி சூட்சுமசரீர தத்துவம் 20. சமட்டி சீவன், அவித்தை 2. ஈசுரன், வித்தை, பிரமம் 3. தூலபூதம் 5 ஆக 36.

கவி

ஈசுரன் தனக்குத்தூலத் திசைவிவ காரமொத்தம்
போசன மயந்தானாறு பிறங்குசூக் குமநாலைந்தோ
டீசுரன் சீவன்வித்தை யேற்றதோ ரவித்தைசாக்ஷி
ஆசிலைம் பூதஞ்சேர வறைகுவர் முப்பத்தாறே.

சூட்சுமசரீர வியவகாரத்திற்குச் சமட்டி சூட்சுமசரீர தத்துவம் 20. சமட்டி சீவன், அவித்தை 2. சூட்சுமபூதம் 5. ஈசுரன், வித்தை, பிரமம் 3. ஆக தத்துவம் 30.

கவி

தொடர்தரு மீசன் சூட்சத் துளவிவ கார மொத்தம்
அடர்தரு சூட்ச நாலைந் தாமிதோ டீசன் சீவன்
படர்தரு மவித்தை மாயை பகர்சூக்ம பூத மைந்தோ
டுடனுரை பிரமஞ் சேர வோதுவ ராறைந் தென்றே.

காரணசரீர விவகாரத்திற்கு ஈசுரன், வித்தை, பிரமம் 3. ஈசுர விவகாரத்திற்கு ஈசுரன், பிரமம் 2.

கவி

தங்குகா ரணசரீரத் தகைவிவ காரதத்வம்
பொங்கிய வீசன்மாயை பொருந்திய பிரமமூன்றும்
துங்கமா மீசனுக்கீச் சுரன்பிர மம்மிரண்டே
சங்கையில் பிரமத்திற்குச் சாற்றிய சாக்ஷியொன்றே.

இந்திரிய விவகாரத்திற்கு இந்திரியங்களெல்லாஞ் சேர்ந்து. 1. சட்கோச தத்துவம் 6. அந்தக்கரணம் 5-வாயு. 5. சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிரமம். 5-ஆக 22.

மேலே விவகரித்த தத்துவக்கூட்டங்களின் காரிய காரணங்களை முப்பத்திரண்டு கட்டளையில் பரக்கக்காண்க. பொருந்திய-அத்தத்துவங்களிற் பொருந்திய. ஈசன்-தலைவன்.

கவி

மகிழுமிந் திரியத்துக்கு வருவிவ காரதத்வம்
நிகழுமிந் திரியமொன்று நேருசட் கோசமாறும்
புகழைந்து கரணமைந்தாய்ப் புகல்வாயு சீவனீசன்
திகழ்வித்தை யவித்தைசாக்ஷி சேரிரு பத்திரண்டே.

மனோராச்சிய விவகாரத்திற்கு அந்தக்கரணம் 5. சீவன், ஈசுரன், அவித்தை, வித்தை, பிரமம்-5 ஆக 10.

அடர்மனோ ராச்சியத்துக் கறைவிவ காரதத்வம்
படரந்தக் கரணமைந்து பகர்சீவ னீசன்வித்தை
இடருறு மவித்தைசாக்ஷி யிசையவே யீரைந்தாகும்
தொடருந்தத் துவங்களுக்காந் தோற்றமு நிலையுமீதே.

(தத்துவங்களுக்காம் தோற்றமும் நிலையும்) என்றது, சீவன், ஈசன், வித்தை, அவித்தை, பிரமம் என்பவாதிகளைத் தமக்காதாரமாகத் தோற்றி நிலையுறுவதாம். இதனை, மோக்க நிர்ணய காரிகையிற் காண்க.

படர் அந்தக்கரணமென்பது—தாங்தோன்றியாகச் செல்லும் அந்தக் கரணங்களென்பது. 'இடருறு அவித்தை' அவித்தை தான் தங்கியவர்களைக் கலக்கமுறச் செய்வதாகையால் அவ்விதம் அடைமொழி கொடுத்தார்.

தத்துவ வுற்பத்தியும் ஒடுக்கமுங் கூறல்

மேலே சொல்லிவந்த முப்பானைந்து தத்துவக்கூட்டங்களும் எவ்விதம் முப்பத்தாறுவது தத்துவமாகிய பிரமத்தினின்றும் உண்டாயினவோ, அவ்வண்ணமே ஒன்றிலொன்று ஐக்கியமுற்று ஒடுங்குகின்றது. தோற்றத்தில் எவ்விதம், "ஆகாசாத்வாயுः, வாயோரக்நிः, அக்நோராபः" என்கிற தைத்ரீய உபநிஷத்தில் கூறியுள்ளவண்ணம் தோன்றியதோ அதுபோலவே மீண்டும் ஒன்றிலொன்று அடக்கமுடைத்தாய்ப் பிரமத்தின்கண் லயமடைந்து, இறுதியில் பிரமம் ஒன்றேயாகி ஒளிர்வது இந்தச் சூக்குமத்தைச் செவ்வனே அறிந்து, தேகாபிமானமும், பிரபஞ்சக் கவலையும் கெட்டிருப்பவனே சீவன் முத்தன். சீவன் முத்தன்—சீவனோடு இருக்கையிலேயே முக்தியின் தன்மையை அறிந்து ஒழுகுபவன். முத்தன்—முத்துச் சிப்பியிலிருந்து விடுபட்டுத் துல்யமாகப் பிரகாசிப்பதுபோலத் தானும் கவலையொழிந்து ஒளிர்பவன்.

கவி

உதித்ததத் துவங்களெல்லா மொடுங்கிடு வழியே தென்னில்
மதித்தநற் பிரமந்தன்னில் வந்ததெப் படியோ வந்த
விதத்தினி லொன்றி லொன்ருய் விழுங்கிடுங் கடைசியாக
கதித்திடும் பிரமந் தானுய்க் கண்டவர் சீவன்முத்தர்.

முப்பத்தாறு தத்துவ விபரம்

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பனவாய பூதங்களைந்தும், ஆதி பிருதிவியினுல் அமைந்த உடலாகிய ஸ்தூலசரீர தத்துவங்களென்னும் அன்னமயமான சட்கோச தத்துவங்கள் ஆறும், சூக்குமசரீர தத்துவங்கள் இருபதும், இவைகளுடன் மாயை அவித்தை ஆகிய இரண்டும், ஈசுவரன், சீவன் ஆகிய இரண்டும், பிரமம் ஒன்றும் சேர்ந்து முப்பத்தாறு தத்துவமாவன. ஆறுவகைய தத்துவங்களையுடைய ஸ்தூலமென்றது—சர்மம், உதிரம், மாமிசம், சனுயு, அத்தி, மச்சைகளையாம். இருபதுவகைய தத்துவங்களோடு கூடிய சூக்குமமென்றது—அந்தக்கரணம் ஐந்து, ஞானேந்திரியமைந்து, வாயுக்களைந்து, கர்மேந்திரியமைந்து ஆகியவற்றையாம்.

கவி

தத்துவ விவரந் தானே தயங்கிய பூதமைந்தும்
நத்திய தூல மாறு நாலைந்து சூட்சுமந்தான்
வித்தக மாயா வித்தை விளங்கிய ஜீவனீசன்
நித்திய பிரமத்தோடு நிகழ்த்துவர் முப்பத்தாறே.

சாற்றிய சீவருக்கும் சமுதாய தத்து வந்தான்
போற்றிய பூதமைந்தும் பொருந்திய மாயையீதிற்
ரேற்றிய வீசனோடு தூயநற் பிரம மெட்டே
மாற்றிய விருபத் தெட்டும் வழங்கிடும் பிரதக்காக.

அந்தத் தத்துவக்கூட்டங்கள் முப்பத்தாறினுள் பொதுவாக அநுபவிக்க இயலுவது எட்டேயாகும். மற்றைய இருபத்தெட்டுத் தத்துவங்களும் தனித்தனியே அநுபவிக்குந்தன்மை வாய்ந்ததென அறிக.

ஒவ்வொன்றின் தன்மையினையும் தனிமையினையும் உன்னின், பிருதிவி தத்துவம் ஒன்று இறக்கின் இவ்வுலகிற் றோன்றிய சீவர்களுக்கு யாதொரு விதமான ஆதாரமுங் கிடையாதென்றது திண்ணம். அவ்வகையே அப்பு தன்னியல்பிற் குன்றில் தண்ணீரில்லாமல் உலகம் தலை தடுமாறும். தேயு தன் செய்கையினை செய்யாவிடின் மன்னுயிருண்ணுவதற்குகந்த பாகமில்லை. வாயுவென்னும் உயிர்த்துணை இல்லையேல், வடகாற்றுந் தென்காற்றுமில்லை; உயிரினியக்கத்திற்குப் போதிய அவகாசமே கிடையா. உச்சுவாச நிசுவாசவாதிகளுக்கும் அவதி கிடையா. நீலநிறமாகக் காணுறும் ஆகாயமில்லையானால் இடமில்லை என்பது தெள்ளிதேயாம். யாவரையும் மயங்கச்செய்யும் மாயையொன்று இல்லையேயானல் இவ்வுலகிற் சமயமொன்றுமில்லை. அம்மாயையைத் தன்னிற்கொண்ட மாயாப்பிரதிபிம்பர் இறக்கில குறித்துச் சொல்ல வேறொரு தெய்வமில்லை. இவ்வகையே பிரமம் இல்லையென்னில் அறிவில்லை. இவ்வகைச் சொல்லி

வந்தவை எட்டும் சமுதாயமாக யாவர்கட்கும் பொதுவென அறியலாவதேயாம்.

மதங்கள்—சமயாதிகள். தொந்தம்—சம்பந்தம். அந்தணன் தொழில்களைந்து—பிரமனது பஞ்சகிருத்திய காரியங்களாகிய ஐந்து. அரி அவதாரம்பத்து—திருமால் எடுத்த, மச்ச கூர்ம வராக நாரஸிம்ம வாமன ராம கிருஷ்ணன் முதலிய அவதாரங்களாகிய பத்து. அவதாரம்—தோற்றம்.

கலி

அறிவறிற் பிரமமில்லை யைம்பூத மாயையீசன்
பிரிலிதிற் றரையாதாரம் பெய்சல பானமங்கி
செறியடல் வாயுமூச்சுத் திரிதலா காயமாயை
மறிதரு சமயமீசன் மதங்களின் றெய்வமாமால்.

குளகம்

இந்தவே ழில்லையாகி லீக்ஷண முதல்யாருக்குந்
தொந்தமாம் பயனுமில்லை தொடரிவ்வேழ் காரியத்தா
லந்தணன் றொழில்களைந்து மரியவ தாரம்பத்தும்
வந்ததோ ரணைத்தாமத்தால் வழுத்துவர் நியமமென்றே.

பிரதக்காவது:—ஒருவனுக்குத் தூலசரீரம் இறக்கில் யாவருக்கும் தூலசரீரம் இறவாத படியினாலும், சூட்சுமசரீரத்தில் ஒருவனுக்கு அங்கவைகல்யம் வந்தால் யாவருக்கும் வாராதபடியினாலும், முத்தராயிருக்கின்ற சுகர், வாமதேவர், முதலான பேர்களுக்கு அவித்தையுஞ் ஜீவனும் இறந்துபோயிருக்க, மற்றவருக்கெல்லாம் அவித்தையுஞ் சீவனு மிற

வாதபடியினாலும், இந்த 28-தத்துவங்களும் ஒவ்வொருவனுக்கும் பிரதக் கென்பதிற் சந்தேகமில்லை.

பிரதக்கு—தனித்தனி; வெவ்வேறு; இது வடமொழி. அங்கவைகல்யம்—அவயவக்குறைவு. அவயவம்—கைகால் முதலியன.

கீழே விவரித்துக்காட்டிய தத்துவங்கள் முப்பத்தாறினுள் எப்போதுந் தானாக யாவரானுங் காட்சிக்கு இலக்காகிக் காணப்படுகின்ற தத்துவம் ஒன்றேயென்றும், எக்காலும் தனக்குப் புறம்பாகக் காணப்படுந் தத்துவங்கள் ஏழ் என்றும், இவ்வகையல்லாமல் தானாகவும் தனக்குப் புறம்பாகவும் அநுபவிக்கப்படுகிற தத்துவங்கள் இருபத்தெட்டெனவும் அறிதல்வேண்டும்.

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூதம், கூடாததையுங் கூட்டுவிக்கும் மாயை, அம்மாயையைத் தனக்கு ஆதாரமாகக் கொண்டுள்ள மாயாப் பிரதிபிம்பர் ஆகியோரினதும் இவ்வேழின் தொழில்களும் வெவ்வேறானதினாலும் தனக்கு அந்நியம் என்றதாம். பிராமணன், க்ஷத்திரியன்முதல் துறவி யிறுதியாகவுள்ள சீவர்கள் யாவரும் ஸ்தூல சரீரத்தை அபிமானிகளினாலே தானாகவும், என் சரீரம் வீங்கியது, என் கால் பருத்தது என்பன முதல் என் சரீரம் பிறந்து இத்துணை நாளாயிற்று என்பது ஈறாகப் புறம்புபட்டுச் சொல்லுவதாலும் தனக்கு அந்நியமானதாம்.

ஸூக்ஷும பூதங்களின் தமோகுண அம்சமான பஞ்சபூதங்களினின்று தோன்றிய ஸ்தூலதத்துவம் 6ம் அதற்குள்ளாகிய சூட்சுமசரீர தத்துவம் 20ம் சேர்ந்து காரியமாயுள்ள

காரிய சரீர பாவனை.



கவி

ஒருவனுக்கே தூலவுட லிறந்திடினு மொருவர்க்
கொழியாதா லுஞ்சூக்க வுடலினுக்கோர் குறைவு
மருவினுமற் றொருவனுக்கே மருவாதால் வாம
தேவருடன் சுகராதி மதிமுத்தர்க் கெல்லாம்
இருநிலத்தி லவித்தையுஞ் ஜீவனுமிறந்தே யிருக்க
வேணயருக் கிறவாத தாலிருபத் தெட்டாம்
அருமைபெறு தத்துவங்க ளவனவனுக் கனிய
மெனவறிக வையமிலா தறிவுடையோர் தாமே.

கவி

சொன்னதோர் தத்துவந்தான் தொடர் முப்பத் தாறிவற்றில்
தன்னிற்று னுகவென் றுந் தயங்குந்தத் துவந்தா னென்றும்
அன்னிய மாகவெங்கு மவிருந்தத் துவங்க ளேழும்
பின்னுநா லேழுந்தானுய்ப் பிறவுமாய்த் தோற்று மன்றே.

ஜாக்கிர ஸ்வப்பன சுழுத்தி யென்கிற அவஸ்தாத்திரய சாக்ஷியாகிய பிரமசைதன்னியம் எல்லா அவஸ்தைகளிலும் தானுகவே விளங்குவதாகையினுலும், இது மற்றைய தத்துவங்களைப்போலப் புறம்பே இருந்து விளங்குவதாக விளங்காமையினுலும், பிரம சைதன்னியம் ஒன்றுமே தானுக விளங்குகின்றது.

கவி

தத்துவ நாலொன்பானிற் றூனுகவிளங்கு மொன்று
நத்துமூன் றவத்தைகட்கு நற்சாட்சி யாகியைந்தே
மித்தையாந் தத்துவத்தில விலட்சண மாகியோங்குஞ்
சுத்தமாம் பிரமமென்று சொல்லுவர் தூயோர்மாதோ.

மன்னியவெண் தத்துவங்க ணீங்கமற்ற
மகிழ்நாலேழ் தத்துவங்க ளவற்றைஜீவர்
தன்னதா யன்னியமாய்ச் சொல்வர்தூல
சரீரமாந் தத்துவங்க ளாறையுந்தான்
துன்னுபருத் தேனிளைத்தே னெனத்தாமாயுந்
தொடர்தேகம் பருத்ததிளைத் ததுவேயென்றும்
அன்னியமா யும்பகர்வ ரென்றுவேத
மாய்ந்தறிந்த மேலவர்க ளறைவர்மாதோ.

நான் கண்டேன்; நான் கேட்டேன் என்பது முதல், இப் பஞ்சத்துக்குத் தப்பி நான் ஜீவித்தேன் என்பது இறுதி யாகத் தானாக விளங்குகிற சூக்கும சரீர தத்துவங்கள் இருபதும், மற்றொரு வேளையினில், என் கண், என் காது, என் வாய், என் கால் என்பது முதல், என் பிராணன் என்பது இறுதியாக விளங்குகின்றபடியாலும், நான் அறியேன், அறிவேன் என்று தானாக விளங்கும் அஞ்ஞான மும், சிதாபாசனும் மற்றொரு வேளையிலே தனக்குப்புறம்பு பட்டு என் அஞ்ஞானம், என் சீவன் என்று வேறாக விளங் கும் தன்மையுள்ளபடியினாலும், இந்த இருபத்தெட்டுத் தத்துவங்களும் தானாகவும் தனக்கு அந்நியமாகவும் விளங்கு கின்றனவேயாம்.

கவி

சூக்குமதத் துவங்கணா லைந்துங் கேட்டேன்
றொட்டேனின் றேனயர்ந்தேன் முகர்ந்தே னென்றுந்
தாக்குகின்ற மற்றவையு மிதுவே போல
தாமாயுங் கேட்டது தொட்ட தாதியாக

நோக்கவே யன்னிய மாயும் பகர்ந்த
நுவல்சீவன் வித்தைகண்டேன் காணே னென்று
ஆக்கியவென் னஞ்ஞானஞ் சீவ னென்றே
யறைகுவர்தா மாயுமன் னியமாய்த் தானே.

மேலே சொன்னவண்ணம் தானாகவும், தனக்கு வேறாக வும் காணப்படும் விரிவினை விளக்கிச்சொன்ன குருவைப் பார்த்துச் சீடன் ஐயமுறல், சுவாமி! இவ்விருபத்தெட்டுத் தத்துவங்களும் தானானால் சாக்ஷியைப்போல ஒரு தன்மை யாகத் தோற்றல்வேண்டும். நோக்கின் பஞ்சபூதத்தைப் போலத் தனக்குப் புறம்பாகக் காணக் கணக்கில்லை. அப்படித் தனக்கு அந்நியமானால் எப்போதும் புறப்பட்டே யிருக்க வேண்டும்; அல்லாமல் தானாக வழங்கக் கணக்கில்லை. அவை உமது வாக்கின் வண்ணம் தானுமாய்த் தனக்குப் புறம்புமாய் இருக்கும் என்பது இருட்டாதித்தன் என்ற கொள்கை போலும். வேளாள தீக்ஷிதன் என்றாற்போலு மல்லவா, சங்கைக்கு இடந்தருகின்றது என்ற சீடன் மனம் வருத்த மடையாவண்ணமாக குரு விளம்பலுற்றமை யாதெனில், பாரமார்த்தமாகத் தான் என்கிற தொருவகையும், அத்தியா சத்தினாலே தானென்கிற தொருவகையும் ஆக இரண்டு வகைகளுண்டு. அவைகளை நீ செவ்வனே அறியவில்லை போலும். சாக்ஷி சைதன்னியத்தையே தான் என்றது, இது பாரமார்த்தம் அல்லாமல் உபசாரம் அல்ல. அப்பா! தனக்கு அந்நியமாய் இருக்கின்ற இருபத்தெட்டுத் தத்துவங் களையும் தான் என்பது சட்டையைக் கள்வன் என்றாற்

போலும், புத்திரன், மனைவி முதலியோர்களைத் தான் என்றுற்போலும் உண்டாகும் கேவல மயக்கமே அல்லாமல் உண்மையல்ல. ஆகையால், அஞ்ஞானகாலந் தொடங்கித் தானல்லவென்று காணப்பட்ட தத்துவம் ஏழு. இப்படிப் பட்ட விவேகம் உதயமான பிற்பாடுதான் அல்லவென்று காணப்பட்ட தத்துவம் இருபத்தெட்டென்று தெளிவாகும். ஆகவே இவ்வகை முப்புத்தைந்து தத்துவங்களையுங் காண்கின்ற முப்பத்தாறுந் தத்துவமாகிய பெற்றியே தான் என்று உணர்ந்து, அது தானே பிரமம் என்று தெளிந்தவனே ஜீவன் முத்தன். தான் என்று உணர்தல்—தனது எதார்த்த வடிவம். இது என உணர்தல்; அன்றி, நிர்விகர்ப்ப வாயிலாக உணர்தல்.

கவி

அன்னிய தத்துவங்களு லேழுந்தானு
யறைவதுதான் கட்டையினைக் கள்ளனென்றும்
உன்னியதோர் பழுததனைப் பாம்பேயென்று
முறுபுத்ர தாராதி தானேயென்றுஞ்
சொன்னதுபோன் மயக்கமலா துண்மையில்லை
தொடரேழுஞ் சேர்த்தேயேழ் தத்துவத்தை
முன்னுரைத்த குறிகுணங்க ளுடனேகண்ட
மூதறிவே தானெனக்கண் டறிந்தோன்முத்தன்.

பிரமமே தான் என்றும், முப்பான் ஐந்து தத்துவங்களும் தனக்கந்நியமென்றும் பகுத்து உணரும் மதியாற்றல் இல்லாத மதியிலிகள் அகங்காரக் கிரந்தியினல் புத்திரன்

மனைவி முதலியோர் துன்பத்தில் வீழ்ந்து துடிக்கிறதைக் கண்டு தாமே துன்புற்றுத் தவிக்கிறோம் என்கின்ற மூடத் தனம்போல, இருபத்தெட்டினது தொழில்களையும் தன் தொழில் என்று மயங்குகிறபடியால், அவ்விருபத்தெட்டி னாலும் செய்யப்பட்ட புண்ணிய பாவங்களினால் கட்டுப்பட்டு அந்தக் கருமத்தின்படியே பிறப்பிறப்பாகிய கடலினிடத்தே மயங்குவான்.

கலி

இப்படிக்கண் டறிபிரமந் தானேயென்று
மிசைந்தமுப்பத் தைந்துந்தனக் கன்யமென்றுந்
துப்பரவாய்ப் பிரித்தறிய விவேகமில்லான்
றொடர்கின்ற வகங்காரக் கிரந்தியாலே
செப்பிருபத் தெட்டிலார்ச் சிக்கப்பட்ட
திகள்புண்ய பாவமதிற் கட்டுப்பட்டு
தப்பிலதன் கன்மத்தாற் பிறப்பிறப்பாஞ்
சமுசாரத் தாழ்ந்தவனாய்த் தயங்குவானே.

பிரமமே தானென்றும், முப்பத்தைந்து தத்துவங் களும் தானல்லவென்றுந் தெளிந்தவன். அகங்காரக் கிரந்தி அற்றதினால், அவ்விருபத்தெட்டினது தொழில்களை நான் செய்யவில்லை என்றும், அவ்விருபானெட்டுப் புசிக்குமவற்றை நான் புசிக்கவில்லை யென்றும், உறுதியாகத்தேறி மயக்கம் அற்றிருக்கிறபடியினால், இருபத்தெட்டாலுஞ் செய்யப்பட்ட நல்வினை தீவினைகளினின்றும் விடுபட்டுக் கன்மமில்லாமை யால் பிறப்பு இறப்பு அற்றுச் சம்சாரம் இல்லாமல் முத்த னாய்ப் பிரமம் ஆகிறான்.

கவி

ஏகமாம் பிரமமது தானே என்று
மிசைந்த முப்பத் தைந்துந்தனக் கன்யமென்றுஞ்
சோகமறத் தெளியறிஞ னகங்கா ரத்தின்
றொடர்கிரந்தி யற்றதனு லிருபத் தெட்டின்
சேகரமாந் தொழில்களெனக் கில்லை யென்றுந்
திடப்படவே தேறிமயக் கற்ற தாலே
ஆகியபுண் ணியபாவ கரும நீங்கி
அனுதிமுத்த பிரமமா யிருப்பா னன்றே.

அவஸ்தாத்திரய சாட்சியாவது:—கூடியுங் கூடாமலு மிருப்பது. அவஸ்தாத்திரயங்களை விட்டு நீங்காமல் இருக்கிறபடியால் கூடியும், அவஸ்தா விகாரங்களைத் தானடையாதபடியால் கூடாமலு மிருப்பதே சாக்ஷி.

மயக்கமாவது:—பிராந்தி ஐந்து; அவை—ஜகத், சத்தியம் எனல். சரீரத்தை நான் எனல். கர்த்தா, போக்தா எனல். ஜீவன் வேறு, ஈசுரன் வேறு எனல். தான் சுத்த ஞானஸ்வரூபியாக விருந்தும் இல்லை எனல். இவைகளையே வேதாந்த நூல்களில் பஞ்சபிராந்தி என்கின்றனர்.

கவி

பந்தமுறுஞ் சகத்துச்சத் தியமே யென்றும்
பகர்கின்ற சரீரத்தை நானே யென்றும்
சந்ததமும் யானகர்த்தா போக்தா வென்றுந்
தாவேறீச் சுரன்வேறே தானு மென்றும்

சுந்தரமாந் தான்ஞான சொரூபமாகத்
தோன்றியஃ தில்லையெனச் சொல்லா நின்ற
இந்தவகை யானபஞ்சப் பிராந்தி நீங்கி
யிருப்பவனே ஜீவன்முக்த னென்ன லாமே.

ஜீவன்முத்தன் திருநாமங்கள்

ஜீவன் முத்தன், திடப் பிரக்ஞன், அதிவர்ணாச்ரமி, குணாதீதன், பகவத்பத்தன், பிராமணன் என்று அறுவகைப் பெயர்களை யுடையவராவர்.

கவி

இன்னவன்பேர் ஜீவன்முத்தன் றிடப்பிரக்ஞன்
இசைந்திட்ட வதிவர்ணாச் சிரமியோடு
சொன்னகுணா தீதனுயர் பகவற்பத்தன்
றாயபிரா மணனென்று சொல்லுமிந்த
நன்னயமா கியவாறு நாமந்தன்னை
நவில்கின்ற வுபநிடத நூல்களெல்லாம்
உன்னிமுறை யிடுகின்ற தென்றுமேலோ
ரோதினார் மாட்சிமையோ டுகந்துதானே.

இது ஜீவன் முத்தியை அடையுந் தன்மையுடையா ரென்பதேயாம். தேகாதிப் பிரபஞ்சம் தோற்றிக் கொண் டிருக்கும் போதே பிரமசொரூபமாக நிலைத்தல் ஜீவன் முத்தி யாம். அதாவது—ஜீவத்துவம் (யான் எனது என்னும் அபிமானம்) விடுபட்டிருத்தலாம். ஜீவன் முத்தபுருஷனுக்கு அவிச்சையின் ஆவரணமாகிய மறைப்பும், விட்சேபமாகிய தோற்றமுமான சத்தி இரண்டனுள் சம்சார பரம்பரைக்

கேதுவாகிய வாவரணமானது (நிஷ்பிரபஞ்சப் பிரம்மாத்மா வின் ஏகத்துவ மென்னும்) தத்துவ ஞானத்தினுல் நசித்தும் (அவித்தையவலேசமென்னும்) விட்சேபமானது (மூளைத்தற் கேதுவாகாத வறுத்த விதைபோன்று) விதேகமுத்தி பரியந் தம் பிராரத்தத்தினுல் நாசமாகா திருத்தல் பற்றி (விட்சே பத்தின் காரியமாகிய) தேகாதிப் பிரபஞ்சம் பொய்யென்று நிச்சயிக்கப்பட்ட வானவளைவு மீண்டுந் தோன்றுதல் போன்று தோற்றிக் கொண்டிருக்கிற தென்க.

ஜீவன்முத்த விலக்கணம்

அச்சீவன் முத்தரானோர் தத்துவஞானம், மனோநாசம், வாசனாக்ஷய மென்னும் மூன்றினையும் உடைமையால் பந்த ரகிதராகி நனவிற் சுழுத்தியைப் பெற்றிருப்பார்கள். நனவிற் சுழுத்தியாவது—சாக்கிராவஸ்தையிலே சுழுத்தி யவஸ்தை யைப் பெற்றிருத்தல். அதாவது—ஞானஞ் ஞானரகிதமாய் இருத்தலாம். அன்றி, ஜீவ சிருஷ்டியும் ஈசுவர சிருட்டியு முள்ள சாக்கிரத்தில் ஜீவ சிருட்டி யொழிந்தவனே ஜீவன் முத்தன். ஜீவ சிருட்டி, காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் ஆகிய ஆறு என்பது. ஈசுவர சிருட்டி, ஸ்தூலசரீரம், சூக்குமசரீரம் முதலிய சாக்கிரப் பிரபஞ்ச விவகாரம். இத் தகையரையே கைவல்லிய நவ நீதத்தில்,

முன்னிலங்க ளேறியமூ வருமப்பி
யாசிகளா முத்தரல்லர்
பின்னிலங்கள் வரன்வரியா வரிட்டனெனுஞ்
ஜீவன்முத்தர் பேதமாகுஞ்

சொன்னநடுப் பூமிவந்த ஞானிகளே
பிரமவித்தாங் தாயமுத்த
ரின்னமுமப் பூமிகளின் பெருமைதனை
நீயறிய யான்சொல்வேனே.

ஞானமார் ஜீவன்முத்தர் நால்வகை யாவர்களாய்
வானிகர் பிரமவித்து வான்வரி யான்வரிட்ட
னுனவர் நாமமாகு மவர்களிற் பிரமவித்தின்
றுனமு மற்றைமூவர் தாரதம்மியமுஞ் சொல்வேன்.

தீரராய்ப் பிரமவித்தாய்த் தெளிந்தவர் தெளியுமுன்னம்
வாரமா யிருந்ததங்கள் வருணமாச் சிரமஞ்சொன்ன
பாரகா ரியமானுலும் பலர்க்குப காரமாக
நேரதாச் செய்வர்தீர்ந்த ரிலைவிடார் சீவன்முத்தர்.

பின்னைமூ வரிவிரண்டு பேர்களுஞ் சமாதியோகந்
தன்னையுற் றிருப்பார்தேச சஞ்சார நிமித்தந்தானு
யுன்னுவோன் வரன்வேற்றோ லுணர்பவன் வரியனுகு
மன்னியர் தம்மாற்றன்னு லறியாதோன் வரிட்டனுமே.

அரிதாகு மிவர்களிவ்வா றனேகரா னுலுமுத்தி
சரியாகும் பாடுபட்ட சமாதிக்குப் பலனேதென்றுற்
பெரிதான திட்டதுக்கம் பிரமவித் தனுபவிப்பன்
வரியானு வரனுமற்றை வரிட்டனுஞ் சுகமாய்வாழ்வார்.

(உ-ம்.) ஏரிக்கரை ஏறினுன். இரண்டு பாஷை கற்றுன். காக்கைக்கண். பாம்புக்கண். யானைத் துதிக்கை.

மலைமேலேறினான். பூனைக்கண். உச்சிப்பானு யாழ்ப் பாணக் கப்பலோட்டுபவன் என்பனவாய பொருள் விளக்கங் கொண்டு அறிக.

மேலே காட்டிய உதாரணங்களுள் கரையின்மேல் செல் பவனுக்கு உள்ளும் புறமும் உள்ளவைகள் தெரிவது போலும்.

இரண்டு பாஷை கற்றவனுக்குத் தன்னைப்போல் இரு பாஷை கற்றவர் சொல்லும் விஷயம் தெரிவது போலும்.

காக்கை தன் ஒரு கண் ஒளியினால் இரண்டு பக்கமும் அறிதல் போலும்.

பாம்புக்கண் ஏக காலத்தில் ரூபத்தையும் சத்தத்தையும் அறிதல் போலும்.

யானை துதிக்கை இடுதலையும் ஏற்றலையும் அறிதல் போலும்.

மலை ஏறினவன் ஆண்டுள்ள பொருள்களையும் பூமியி லுள்ள பொருள்களையும் அறிதல்போலும்.

பூனைக்கண் இரவும் பகலும் தெரிதல் போலும்.

நடுப்பகல் கதிரவன் உதய கிரியையும் அத்தகிரியையும் அறிதல் போலும்.

யாழ்ப்பாணத்தை நோக்கி வங்கத்தில் செல்பவனுக்கு இருகரையும் தோற்றல் போலும். இஜ் ஜீவன் முத்தன் பிரபஞ்சத்தையும் அதன் விருத்திகளையும் நன்கு அறிந்து

கொண்டும் பிரமாகார சிந்தனையாய்ச் சிரவண மனன நிதித்யாசனத்தில் இருப்பவன்.

சிரவணமென்பது:—நான்கு வேதங்களையும் ஆறுலிங்கத்தினாலும் அர்த்த விசாரம் செய்து பிரம தாத்பரியம் காணுதல். இன்னும், சர்வ சம்சயத்தினையும் நிவர்த்திப்பதுவாம்.

உயுக்தியினாலே அனவரதம் சிந்தித்தலே மனனம்.

இன்னும், மனத்தின் சம்பாவனையி (சம்சயத்தி) னை நிவர்த்திப்பதுவாம்.

இருவகைக் கேள்வியுமொத்து மனது ஏகாக்கிரமாவதே நிதித்தியாசனம்.

இன்னும், விபரீதபாவனையினை நிவர்த்திப்பதுமாம். இன்னும், அனாத்மாகார விருத்தி நீங்கி ஆத்மாகாரவிருத்தி தைலதாரைபோல் இடைவிடா திருப்பதுவாம்.

தியானிப்பவனையும் தியானத்தையுமிழந்து, தியானிக்கப்படுகிற வஸ்துவாயிருக்கிற சித்தமே சமாதி.

அன்றி, விஷயங்களின் தோஷ திருஷ்டியென்னும் அங்குசத்தால் அடக்கப்பட்ட அகக்கரணமாகிய யானையும், தோஷ திருஷ்டிபூர்வகமாய்ச் சாஸ்திர சிந்தனையென்னும் சாட்டியால் சப்தாதிவிஷய வடிவமார்க்கத்திற் செல்லாவண்ணம் அடக்கிய இந்திரியங்களாகிய குதிரைகளும், சம்ஸ்கார வாயிலாக வரப்பட்ட விஷயங்களில் மறித்தும் பிரவேசித்து அல்லற்படாவாறு ஆரியன் அனுக்கிரகித்ததை அனுசந்தித்துச் சலிப்பின்றி யொருமுகப்பட்டிருத்தலாம்.

ஆறுலிங்கமாவது:—உபக்கிரமம், உபசங்காரம் இரண்டும் ஒன்று. அப்பியாசம் 2. அபூர்வதை 3. பலம் 4. அர்த்த வாதம் 5. உபபத்தி 6. இவற்றுள் உபக்கிரமம் பிரபஞ்ச வுற்பத்தி. உபசங்காரம். பிரபஞ்ச மொடுங்குதல் இவ்விரண் டின் மூலமாகிய பிரமமே நாமென்பது. அப்பியாசம் பிர மாணங்களுக் கெல்லாம் எட்டாததே அபூர்வதை. அனர்த்த நிவர்த்தி ஆனந்த பிராப்தியே பலம். ஈசுரனுக்குப் பஞ்ச கிருத்தியம் கற்பித்தல் அவாதம்.

மண்ணைத்தவிர கடாதிகளில்லை யென்பதுபோலும்; பொன்னைத்தவிர பூஷணாதிகளில்லை யென்பதுபோலும்; பிர மத்தைத்தவிர பிரபஞ்சமில்லை யென்பது உபபத்தி.

அர்த்த விசாரம்:—உள்ளபடி யறிவது. அதாவது மகா வாக்கிய சிரவணம்.

மகா வாக்கியம்

அது அற்ப சுருதி வாக்கியம் என்றும், பிரபல சுருதி வாக்கியம் என்றும் இரண்டாகக் கூறுவர். அற்ப சுருதி வாக்கியம் கன்மகாண்டத்தைச் சொல்லும். பிரபல சுருதி வாக்கியம் ஞானகாண்டத்தைச் சொல்லும். இந்த ஞான காண்டத்தைச் சொல்லுகின்ற பிரபல சுருதி வாக்கியத்தை மகா வாக்கியமென்று சொல்லப்படும். அவ்வாக்கியம் நான்கு வர்னமும், மூன்று பதமும், மூன்று பதார்த்தமும், மூன்று இலக்கணையுமாய் விளங்கும்.

1. பிரக்ஞானம், ஆனந்தம், பிரமம்.

2. அகம் பிரம்மா அஸ்மி.

3. தத்துவம் அசி.

4. அயம் ஆத்மா பிரமம். ஆக மகாவாக்கியம் 4. இவற்றுள்.

1. பிரக்ஞானம், ஆனந்தம், பிரமம்:—என்னும் மஹா வாக்கியத்தில் பிரக்ஞான பதத்திற்கு, ஜீவனும் பிரமபதத்திற்கு, ஈஸ்வரனும் வாச்சியம். இவ்விரண்டு பதங்களின் சேதனபாகத்தின் இலக்ஷணை ஆனந்தம்.

2. அகம் பிரம்மா அஸ்மி:—என்னும் மகாவாக்கியத்தில் அகம் பதத்திற்கு ஜீவனும், பிரம்ம பதத்திற்கு ஈசுவரனும், வாச்சியம். இவ்விரண்டு பதங்களின் சேதன பாகத்தின் இலக்ஷணை அஸ்மி.

3. தத்துவமசி:—என்னும் மகாவாக்கியத்தில் துவம் பதத்திற்கு ஜீவனும், தத் பதத்துக்கு ஈசுரனும் வாச்சியம். இவ்விரண்டு பதங்களின் சேதனபாகத்தின் இலக்ஷணை அசி.

4. அயம் ஆத்மா பிரமம்:—என்னும் மகாவாக்கியத்தில் ஆத்ம பதத்திற்கு ஜீவனும், பிரம பதத்திற்கு ஈசுரனும் வாச்சியம். இவ்விரண்டு பதங்களின் சேதனபாகத்தின் இலக்ஷணை அயம்.

அதாவது இந்த ஆத்துமாவே பிரமமென்பது. இஃது முறையே சிரவண, மனன, நிதித்தியாசன, சமாதியாம்.

1. தற்போத ஞானம், 2. சாக்ஷி ஞானம், 3. சிவ ஞானம், 4. பிரம ஞானம். துவம்பதம், தற்பதம், அசிபதம்; நிசபதம்.

இன்னும் பஞ்சப் பிரயோசனமாவது:—ஞானரக்ஷை, தபசு, விஷம வாதமில்லாமை, துக்கநிவர்த்தி, சுகாவிற்பாவம்.

ஞானரக்ஷையாவது:—பிரமானுசந்தானத்தில் மனம் கரைதல். அப்படிக் கரைந்த மனது ஏகாக்கிரமாக நிற்றலே தபசு.

(ஆபால (உயர்ந்தயர்) முதல் தாழ்ந்தவர் வரையுள்ள) பண்டிதரெல்லாம் வந்து வணங்குதலே விஷமவாத மில்லாமை. பஞ்சக்கிலேசம் நீங்குதலே துக்கவிர்த்தி. ஆனந்த முண்டாதலே சுகாவிற்பாவம். இந்தப் பஞ்சப்பிரயோசன முடையவனே ஜீவன் முத்தன்.

கவி

பொங்கியதோர் ஞானரக்ஷை தபசினோடு
புகல்விஷம வாதமதி லாமையுந்தான்
தங்கியதோர் துக்கத்தி னிவர்த்திமேலாய்ச்
சாற்றியநற் சுகாவிற்பா வத்தினோடு
துங்கமிகு மைந்துபிர யோச னத்தைத்
தொடர்ந் திதனின் சுகமதனைக் கண்டுநின்றோர்
எங்குநிறை கின்றபரி பூரணத்தை
யெய்தியநற் சீவன்முத்த ரென்னலாமே.

இன்னும் **பஞ்சக் கிலேசமாவது:**—அவித்தை, அசிமிதை, இராகம், துவேஷம், அபினிவேசமென 5.

இவற்றுள், **அவித்தையாவது:**—ஆத்மாகாரத்தை அனாத்மாகார மாக்குதல்.

அசிமிதை யென்பது:—புத்தி (பிரகிருதி) யே ஆத்மாவென்றும், ஆத்மா ஏகனனேக னென்றும், சாங்கிய மதத்தின் கோட்பாடு.

இராகம்—பற்றுதல் (இச்சை.)

துவேஷம்—விடுதல் (கோபம்.)

அபினிவேசமாவது—மரணபயம், இச்சை.

இந்த ஐந்து கிலேசமும் விடுபட்டு (நீங்கி) மேலே சொல்லிய பஞ்சப்பிரயோசன முடையவனே ஜீவன் முத்தன்.

கவி

அவித்தை ராகந் துவேச மசிமிதை
பவித்த தேக மரண பயமெனுங்
குவித்த வைந்து சிந்தாகுல மானவை
நிவிர்த்தியா னவனே முத்த னேமியில்.

ஜீவன் முத்தியாவது:—தான் என்கிற கர்த்தத்துவம், போக்த்ருத்துவம் ஆகிய இவைகள் நீங்குவதேயாம். கர்த்தத்துவம்—தானே தலைவனாதல்; போக்த்ருத்துவம்—தானே அனுபவிப்பவனுமாதல். இவ்விரண்டும் நீங்கிப் பிரபஞ்சத்

தோற்றத்துடனே அத்துவித பிரமசொரூபமாய் இருக்கின்ற நிலையேயாம்.

திடப்பிரஞ்ஞன்:—ஸத்குருவின் அனுக்கிரக விசேஷத்தால், ஜீவனுக்கும் பிரமத்துக்கும் உள்ள வேறுபாடின்மையினைச் செவ்வனே அநுபவவாயிலாக வறிந்து, சாமாதிகூடிக் கலங்காமல், அறிவே ஆகாரமாய் இருக்கின்ற இயல்புடையவன்.

அதிவர்ணாச்ரமி:—உலகினர் கூறும் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என்னும் நான்கு வருணாச்சிரமங்களையும், அவைகட்கு இன்றியமையாத வழக்க பழக்க வொழுக்கங்களையும் கடந்து, இவைகளெல்லாம் உன்னில் ஸ்தூலதேகக் கற்பனையே யாமென அவற்றைத் தள்ளியதற்குத் தானே தக்க சான்றுவானென்று அறியும்வண்ணம் அறிவாகாரமாய் விளங்குவன்.

குணாதீதன்:—சாத்துவிகம், ராஜஸம், தாமதம் என்கிற முக்குணங்களின் தன்மைகளை யெல்லாம் பொருட்படுத்தாமற் கடந்து, அவஸ்தாத்திரயங்களுக்கு விலக்ஷண தர்மியாய் இருப்பன்.

பகவத் பத்தன்:—கடவுளின்மாட்டு இடைவிடாத அன்பினைச் செய்வோன். உலகின்கண்ணுள்ள எல்லாப் பொருள்களினும் சமமாய்ப் பிரமத்தைக் காணலுறுந் தன்மை வாய்ந்து சிறந்த தியானயோக மனதையுடைய யோகியாவன்; இவ்வாறல்லாமல், தானே அவ்வப்பொருள்கள் தோறும் கலந்து விளங்குவதாகவும் காண்பவன்.

பிராமணன்:—பிரம்ம ஞானமுடையவன்; அப் பிரம்ம ஞானத்தைப் பிறருக்கு உபதேசிப்பவன்; அன்றி, ஞான யோகத்தால் பிரமத்தை அறிந்து, அவ்வடிவமாக நிலையுற்று நிற்கும் நிமலத்தன்மை யுடையவன். இந்த அபிப்பிராயம் புலனாகவே,

"அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்." என்றார் வள்ளுவர்.

விதேக முத்தன்:—நிர்விகர்ப்ப சமாதியில் இருப்பவன். இவ் விதேகமுத்தன் நிலையையே துரியாதீதம் எனவுங் கூறுவர். இவ்வாறு சொன்னமையால், ஐந்தாம் பூமியாகிய சுழுத்தியில் சகந்தோன்றாமல் தான்தோன்றி நிற்றல் துரியம். நோக்கின், சாதன சதுட்டய முதித்து விஷப தோஷ திருஷ்டி உண்டாய்த் தன்னைத் தரிசிக்க விரும்புவது சுயேச்சை எனவும், விருப்பத்தால் அவனாகிய சித்துருவமும் தானல் லாத சடவுருவமும் இஃதென விசாரித்தல் விசாரணை எனவும், அவ் விசாரத்திலுள்ள சித்தில் வாசனையுண்டாய்ச் சட வாசனைவிட்டு மனமடங்குதலே தனுமாசி எனவும், அச் சித்து வாசனை மிகுந்து அது அநுபவமாக வெளிப்படுதல் சத்துவாபத்தி எனவும், அச்சித்துயத்தினால் ஜடபாவ நீங்குதல் அசஞ்சத்தி எனவும், அச்சித்தில் ஆநந்தோதய மாய் இரண்டற யாவுந் தானே தானாய் இருத்தல் பதார்த்த பாவனை எனவும், இவ்வனுபவம் எப்போதும் உள்ளதாக விளங்குதல் துரியம் எனவும் அறிந்து, அத்துரியத்தில் காண்பானும் காணப்படும் சகத்தும், சத்தா மாத்திரமாக

விளங்குதலின் அது துரியாதீதம். இவ்வித நிலமையினையே ஈண்டுக் கூறினது. விவேக முத்தி — பிரபஞ்சப் பிரதீதி யின்றி அத்துவித சொரூபமாய் இருக்கிற ஜீவன் முத்தியின் பரிபாகமே விதேக முத்தியாம்.

முத்தரின் வகை

முத்தராவார் இரு' பிரிவினையுடையோராவார். வராகோபநிஷத்து நான்காம் அத்தியாயத்தில் விவரித்த வண்ணம், சுகர் முத்தர்; வாமதேவர் முத்தர். அவர்களைத் தவிர முத்திப்பேற்றை யடைந்தவர்களில்லை. அதாவது, அவர்களின் நெறியன்றிப் பிறிதொரு நன்னெறி கிடையாதென்றமை. நோக்கின், எந்த உலகத்தில் சுகர் மார்க்கத்தை நன்கு உணர்ந்து, அதன் வழியே தைரியசாலிகளாய் அனுபவிக்கிறார்களோ, அவர்களைச் சத்தியோ முத்தர் என்கின்றனர். சத்தியோ முத்தர்—இத்தேகம் போனவுடனே முத்தியடைதல். வாமதேவர் மார்க்கத்தைப் பின்பற்றுகின்றவர்கள். இவ் வியன்தருமாஞாலத்தில் மாறிமாறிப் பிறப்பை யடைந்து சத்துவகுணத்துடன்கூடி யோக நெறியின் கண்ணும், சாங்கிய ஞான கருமங்களினாலும் கிரம முத்தராகிறார்கள். இவ்விருவகையான மார்க்கங்களில், சுகமார்க்கம் என்பது பக்ஷிமார்க்கம் என்பது பொருள். இவ்வாறு கூறிய காரணம் யாதெனில், பறவை குறிப்பிட்ட இடத்திற்குப் பறந்து செல்வதுபோல, இத்தேகம் போனவுடன் முத்தி யடைவது வாமதேவ மார்க்கம்-எறும்பு மார்க்கம்; அதாவது— குறித்தவிடத்திற்கு எறும்பு போகவேண்டுமானால், கிரமமாய்

ஒவ்வொன்ருய் விடாமல் ஊர்ந்து செல்லுதல்போல் இத் தேகத்தை விட்டபிறகு, இதைவிட மேலான பிறவியை அடைந்து, மேன்மேலும் அவ்வுத்தமப் பிறவியிலேயே பன்னுளிருந்து இறுதிக்கண் தாமரையானுலகஞ்சென்று, ஆண்டு பிரமானந்தத்தையுண்டு முத்தியடைவர்.

இவ்வண்ணம் பிரித்துச் சொல்லியவற்றுள், விதி வாக்கியங்களினுலாவது, நிஷேத வாக்கியங்களினுலாவது, மகா வாக்கிய விசேஷத்தினுலாவது தமது ஆன்ம சொருபத்தை உள்ளவாறு அறிந்து நிர்மலமானவர்கள் சுகமார்க்கத்தினுலே மோக்ஷத்தை அடைகின்றுர்கள்.

ஒருவனுக்கு, இயமம் நியமம் முதலிய ஆசனங்களினுல் உண்டாகிய ஆயாசமானது, அடாப்பியாசத்தினுல் அடிக்கடி அநேக தடவைகளில் உண்டாகி, அணிமாதிகளுக்கு உட்பட்டவனுய், அவையே சகலமும் அளிப்பதென்று கொண்டு, இறுதிவரை நல்லபலனை அடையாமல், மீண்டும் நற்குடியில் வந்து தோன்றி, பழமை விடாமையால் யோகாப்பியாசம் செய்து, அநேகம் பிறவிகளிற் செய்த அப்பியாச மிகுதியாலே வாமதேவ மார்க்கத்தினுல் திருமாலின் பதமாகிய பரம பதத்தை அடைகிறுன்.

இவ்விரண்டு வகையான மார்க்கங்களே பிரமப் பிராப்தியை நமக்குக் கொடுக்கத்தக்கனவாகவும், மங்களகரமானதாகவும் சொல்லியுள்ளன. இவைகளிலொன்று, சத்தியோ முத்தியைத் தரவல்லதென்றும், மற்ருென்று கிரம முத்தியைத் தரவல்லதென்றும் அறிக.

கவி

நத்து பந்தத்தை நாடிய சீவர்கள்
தத்துவ முப்பத் தாறையுஞ் சேரவே
பத்தி யோடு விசாரணை பண்ணியே
முத்தி யாகிய மோட்ச மடைவரே.

விதேக கைவல்லிய மடையுங் கிரமம்

இவ்வுடலமானது எக்காலத்திலும் எத்தேசத்திலும் எவ்வகைத்தான சரீரத்தையும் பெறாதாகிச் சச்சிதானந்த சொரூபத்திற் கலந்து ஆனந்தமயமாக விருப்பதே விதேக கைவல்லியமாம்.

இவ் விதேக கைவல்லியத்தை யடையும் நெறிமுறை யாதெனில், அஃது முமுக்ஷுவுக்கு நித்திய கர்ம அனுஷ்டானத்தால் மென்மேலும் உயிருக்குத் தெளிவு உண்டாகும் தர்மோற்பத்தியுண்டாகும். அவ்வுற்பத்தியால் பாவம் பறந்தோடும்; பாவநச்சவரத்தால் சித்த சுத்தியுண்டாகும்; அச் சித்த நிர்மலத்தால் இல் வாழ்க்கையது தோஷ தரிசனமுண்டாகும்; அத் தரிசனத்தால் விஷய விரக்தியும், அவ் விஷய விரக்தியால், மோக்ஷாபேக்ஷையும், மோக்ஷாபேக்ஷையால் பாகிய கன்ம பரித்யாகமும், பாகிய கர்ம பரித்தியாகத்தால் யோகாப்பியாசமும் உண்டாம். அவ்வாறுண்டாய யோகாப்பியாச மிகுதியாலே பிரத்தியேகாத்மாவினிடத்தில் அதீதமானப் பிரீதியும், பிரத்தியேகாத்மாவினிடம் உண்டாகிய

அன்பின் மிகுதியினால், (தத்துவமஸி) வாக்கிய விசாரமும், அத் தத்துவமஸி வாக்கிய விசார மிகுதியான் அத்துவைத ஞானமும், அந்த அத்துவைத ஞானவிசேஷத்தால் அவித்தியா நாசமும், அவித்தியா நாசத்தால் துவைத பிராந்தி நஷ்டமும், அந் நஷ்டத்தால் சுக துக்க பரித்தியாகமும், அப் பரித்தியாகத்தால் இராகத்துவேஷங்களின் அழிவும், அவ் வழியால் விதி நிஷேத நிரஞ்சன நீக்கமும், விதிநிஷேத நிரஞ்சனத்தால் புண்ணிய பாவங்களின் அழிவும், அவைகளின் அழிவாலே தேகாபாவ சித்தியும், அச் சித்தியினாலே சர்வ பாவ விமோசனமும் உண்டாம். சர்வபாவ விமோசனம் உண்டானமையின், சர்வ உத்கிருஷ்டமான பரம ஆராதனமும் மீண்டும் மாறிமாறிப் பிறக்குந் தொழிலின்மையும் உண்டாகி, இவை காரணத்தால் சகல சாத்திரமுடிவாய் நாமம் சாதி கிரியை முதலிய வாசனைகள் புகாததும், மனோ வாக்குகளுக்கு எட்டாததுமான நித்தியானந்த சொரூபமாய் இருத்தலாகிய விதேக கைவல்லிய சாம்பிராஜ்யம் உண்டாகும். இதுவே சுருதியின்வழி நின்றதின் நிறைவும், ஆசாரியன் அனுக்கிரகத்தாலாகிய சித்தியும் ஆகும். இதனையே சகல சாஸ்திரங்களிலும் இலைமறை காய்மறைபோல விருக்கும் பொருள் நிச்சயமாம்.

குருஸ்துதி

1. சங்கதானந்த ரூபாய சந்த்ராய மகாத்மநே
கைவல்ய கலனுகல்ப தருவே குருவேநம:

2. சைதந்யம் சாச்வதம் சாந்தம் வியோமாதீதம்
நிரஞ்சனம் நாதபிந்து களாதீதம் தஸ்மைஸ்ரீகுருவே நம:

3 எல்லா முடையான் குருவாகி யீங்கெமது
அல்லல் அறுத்தான் என்றுந்தீபற
அவன்றாள் தொழுவாம் என்றுந்தீபற.

இவர் இங்ஙனம் தம் குருவினை நமஸ்காரஞ்செய்து தாம் செய்த நூலிற்கு முடிவு கட்டுகிறார்.

அநேகவித லக்ஷண விஸ்தாரத்துடனே கூடியிராநின்ற மகா மாயாமோகத்தை என்னேரமும் எடுத்து விழுங்கு கிறதே வேலையாயிருக்கின்ற ஸ்ரீ சங்கராசாரிய குருமூர்த்தி களினது பாதார விந்தங்களுக்கு நமஸ்காரம்.

பொங்குரு மறிவானந்த பூரண மயமே யிங்கு
அங்குரு வாகவன்பர்க் காரணப் பொருளளித்துச்
சங்குரு தன்மைபோலத் தன்னிய னுக்கிவைத்த
நஎகுரு நமச்சிவாயற் கிணையடி எந்த லைக்கே.

நாநாஜீவவாதக் கட்டளை

சம்பூர்ணம்.

திருமூல நாயனர்

திருவாய்மலர்ந்த

திருமந்திரம் ௩௧௫

குறிப்புரையுடன்

இப் பூவுலகின்கண் முற்பிறப்பிற்செய்த புண்ணியவசத்தால் மானிடர்களாய்ப் பிறந்தவர்கள் இறப்பது திண்ணம். நமக்குக் கடவுளால் வகுத்த நாட்களைப் பெருக்கவும் குறுக்கவும் தேவராலும் மானிடராலும் மற்றும் யாவராலும் முடியாத காரியம். நிற்க, ஆறறிவுடைய மானிடர்கள் சம்பாதித்துக் கொள்ளவேண்டியதான பொருள் தர்மார்த்த காமமோட்சங்களேயாம். இந் நான்குவகைச் சிறப்பைப்பற்றிச் சொல்லும் நூல்கள் சிலவே. அதில் இந்நூல் பெரியோர்களால் அமுதமெனவும், பொக்கிஷமெனவும், இனிமையுள்ள தேன் எனவும், ஆன்ம ஞானத்தைக் கொடுப்பதற்கு இன்றியமையாத ஞானக் கரும்பு எனவும் இத் திருமந்திரத்தைக் கூறுவர் பேரறிஞர்.

புத்தகம் ஒன்றின் விலை ரூ. 2.

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,

பிரம்பூர் பாரக்ஸ் போஸ்டு, மதராஸ்.

திருமூல நாயனர்

திருவாய்மலர்ந்த

திருமந்திரம் ௩௲

குறிப்புரையுடன்

இப் பூவுலகின்கண் முற்பிறப்பிற்செய்த புண்ணியவசத்தால் மானிடர்களாய்ப் பிறந்தவர்கள் இறப்பது திண்ணம். நமக்குக் கடவுளால் வகுத்த நாட்களைப் பெருக்கவும் குறுக்கவும் தேவராலும் மானிடராலும் மற்றும் யாவராலும் முடியாத காரியம். நிற்க, ஆறறிவுடைய மானிடர்கள் சம்பாதித்துக் கொள்ளவேண்டியதான பொருள் தர்மார்த்த காமமோட்சங்களேயாம். இந் நான்குவகைச் சிறப்பைப்பற்றிச் சொல்லும் நூல்கள் சிலவே. அதில் இந்நூல் பெரியோர்களால் அமுதமெனவும், பொக்கிஷமெனவும், இனிமையுள்ள தேன் எனவும், ஆன்ம ஞானத்தைக் கொடுப்பதற்கு இன்றியமையாத ஞானக் கரும்பு எனவும் இத் திருமந்திரத்தைக் கூறுவர் பேரறிஞர்.

புத்தகம் ஒன்றின் விலை ரூ. 2.

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,
பிரம்பூர் பாரக்ஸ் போஸ்டு, மதராஸ்.